விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 07 சனிக்கிழமை (23.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 339

# இலங்கைக்கு பிரிட்டன் மீண்டும் எச்சரிக்கை

## விசாரணையை வலியுறுத்தி



(லண்டன்)

போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளில் இலங்கை அரசாங்கம் மேலதிகமான முன்னேற்றத்தை காண்பிக்கத் தவறினால் அனைத்துலக விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்று பிரித்தானிய அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் பிரபுக்கள் சபையில் உரையாற்றிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக மூத்த இராஜாங்க அமைச்சர் பரோனஸ் வர்சி மீண்டும் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் இலங்கையில் நடந்த பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் டேவிட் கமரூன் கலந்து கொண்டது சரியானதே.

இலங்கையின் நிலைமையை அவரால் நேரில் காண முடிந்ததுடன், 1948இல சுதந்திரம் பெற்ற பின்னர் அந்த நாட்டின் வடக்குப் பகுதிக்கு சென்ற முதல் வெளிநாட்டுத் தலைவர் என்ற பெருமையையும் அவர் 19-ம் பக்கம் பார்க்க

## மாவீரர் தின வாசகங்களுடன் பல்கலைக்கழகத்தில் சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

இதயத்தில் இனத்தின் விடுதலை. கரத்தில் ஒரு தேசத்தின் வரலாறு. சுதந்திர வாசல்வரை இவன் சுவடுகள் ஒயாது... என்ற மாவீரர் வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் யாழ். பல்கலைக் கழக வாசல்களில் பரவலாக எறியப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரம் கடந்த 21ஆம் திகதி முதல் எதிர் வரும் 27ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ் மாவீரர் வாரத்தினை நினைவுகூரும் முகமாகவே இச்சுவரொட்டிகள் இனந்தெரியாதோரினால் பல்கலைச் சூழலினை அண்டிய இடங்களில் ஆங்காங்கே போடப்பட்டுள்ளன.

அச்சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளதாவது:

புதைத்தாலும் நாங்கள் புதையல்களாய் வெளிப் படுவோம் துருப்பிடித்துப் போகோம் தூங்குகின்ற புயல்கள் நாம் என்ற வாசகங்கள் ஒருசில சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளன.

மற்றையதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படம் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், சாள்ஸ் அன்ரனி, கேணல் ரமேஸ் 20-ம் பக்கம் பார்க்க

## சாள்ஸுடன் படமெடுக்க 1,500 கோடி ரூபா செலவு

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

பொதுநலவாய மாநாட்டில் சார்ள்ஸ் இளவரசருடன் இணைந்து புகைப்படம் எடுத்து கொள்வதற்கு ரூபா 1,500 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதனால் நாட்டுக்கு கிடைத்த நன்மை என்ன? என்று கேள்வியெழுப்பியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக, மக்களின் கையிருப்பிலுள்ள பணத்தை பறித்தெடுத்து அதனை தமது சட்டை பையில் போட்டுக்கொள்ளும் வரவு செலவுத் திட்டத்தையே அரசாங்கம் முன் வைத்துள்ளதாகவும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 19-ம் பக்கம் பார்க்க

## மீனவர் பிரச்சினைக்கு டிசம்பரில் தீர்வு



இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு எதிர் வரும் டிசம்பர் மாதம் 3-ம் வாரத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் கூறியுள்ளார் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு நாட்டு மீனவர்களும் சந்தித்து கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகள் டிசம்பர் மாதத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த பேச்சுவார்த்தையின் மூலம் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்படையால் புதுக்கோட்டை மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்ட சம்பவம் கண்டிக்கத்தக்கது. 19-ம் பக்கம் பார்க்க

## மாவீரர் தினத்தை அனுஷ்டிக்குமாறு அரச நிறுவனங்களுக்கு கடிதம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்களை நினைவுகூருமாறு தெரிவித்து வவுனியாவில் உள்ள அரசாங்க நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்கள் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நவம்பர் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை விடுதலைப் புலிகள் அமைப்பு மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பது வழக்கமாகும்.

இந்த நிலையில் 2013 ஆம் ஆண்டு மாவீரர்களை நினைவுக்கூரும் வகையில் மரம் நடுகை மற்றும் தீபங்களை ஏற்றுமாறு அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர். மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துமாறு கடிதம் ஊடாக 19-ம் பக்கம் பார்க்க

## இராணுவம் குறைக்கப்பட வேண்டும் விதவைகள் மாநாட்டில் தீர்மானம்

எமது பிரதேசம் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளதாலும் இராணுவ நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாலும் இராணுவத்தின் பாலியல் வன்முறைகளுக்கும் பாலியல் தொந்தரவுகளுக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படுகிறது என விதவைகள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற விதவைகள் மாநாட்டிலேயே இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து மூவினங்களையும் சேர்ந்த விதவைகள் செயலணிகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில்கலந்து கொண்டனர்.

குடும்பங்களுக்குதலைமை தாங்கும் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது ஆற்றலை மேம்படுத்தல் தொடர்பாக ஆராயப்பட்டு அரசாங்கத்திடம் முன்வைக்கும் வகையில் பிரகடனமொன்றும் இங்கு வெளியிடப்பட்டது.

பாதுகாப்பு, வாழ்வாதாரமும் சமூக பாதுகாப்பும், சலுகைகளும் உதவித் திட்டங்களும், கல்வி, சுகாதாரமும் சத்துணவும், சமூக கலாசார விடயங்கள், காணாமல் போனோர் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அந்த பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

தமது 19-ம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற சுவரைக் கட்டுமாறு போராட்டம்

இடிக்கப்பட்ட முள்ளி வாய்க்கால் நினைவு முற்ற சுற்றுச் சுவரை தமிழக அரசு கட்டித் தரக் கோரி சென்னை ஜெமினி மேம்பாலத்தை மறித்து மாணவர்கள் பூட்டுப்போட்டு போராட்டம் நடத்தினர்.

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக தஞ்சாவூரில் முள்ளி வாய்க்கால் நினைவு முற்றம் கட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து கடந்த 13ம் தேதி முற்றத்தின் சுற்றுச் சுவர் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டதாக கூறி இடிக்கப்பட்டது. இது தமிழ் ஆர்வலர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ-11)

## ஆடுகளம் புகழ் ஜெயபாலன் கைது

இலங்கை கவிஞரும் நடிகரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஆடுகளம் திரைப் படப் புகழ் வா.ஐ.ச.ஜெயபாலன் மாங்குளம் பகுதியில் வைத்து நேற்று மாலை 5.40 மணியளவில் பயங்கரவாத குற்றத தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளத்தில் உள்ள தனது தாயாரின் சமாதிக்கு கற்பூரம் கொழுத்தி அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்த போதே அவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்த போது இவரை புலனாய்வு பிரிவினர் தேடியதோடு இவரை 19-ம் பக்கம் பார்க்க

## காணாமல் போனவர்கள் குறித்து பொறுப்பற்ற விதத்தில் பதில்!

### ஆணையாளர் மீது மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

போர்க்காலத்தில் காணாமல் போனவர்கள் காணாமல் போனவர்கள் தான் என பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்திருந்தார் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர்களில் ஒருவரான ஆர். ஆனந்த ராஜா.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ். கிறீன்கிராஸ் ஹோட்டலில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த ஆணையாளரிடம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் இடம் பெற்ற போரின் போது பலர் இலங்கையின் வடபகுதியில் காணாமல் போயிருந்தனர். ஆனால் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு



கடந்த 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டில் காணாமல் போனவர்கள் பற்றி மட்டுமே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதனைவிட அந்த விசாரணை 19-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரச்சினைகளை திசை திருப்பவே சனல் 4 இற்கு எதிராக கோஷம்

## சமகி சக்தி அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் பிரச்சினைகளை திசைத் திருப்பவே இலங்கைக்கு வந்த சனல் 4 தொலைக்காட்சி ஊடகத்திற்கு எதிராக அரசாங்கம் கோஷமிட்டு வருகிறது என சமகி சக்தி அமைப்பின் ஏற்பாட்டாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் தொடங்கொட தெரிவித்தார்.

சமகி சக்தி அமைப்பு அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடத்திய ஊடக சந்திப்பில் சனல் 4 ஊடகவியலாளர்கள் சமுகமளித்திருந்தனர். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில,

சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்களை நாங்கள் அழைக்கவில்லை. இலங்கை ஊடகவியலாளர்களையும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களையும் நாங்கள் அழைத்திருந்தோம்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு வர அரசாங்கம் வழங்கிய ஊடக அனுமதிப்பத்திரத்துடன் சனல் 4 ஊடகவியலாளர்கள் எமது ஊடக சந்திப்புக்கு வந்தனர்.

ராஜபக்ஷ அரசாங்கம் வழங்கிய ஊடக அனுமதிப் பத்திரத்தை அவரகள் எல்லோருக்கும் தெரியும் வகையில் தமது கழுத்தில் அணிந்திருந்தனர்.

அனுமதிப்பத்திரத்தை வழங்கிய ராஜபக்ஷ அரசாங்கம், சனல் 4 ஊடகவியலாளர்களுக்கு தடைகளை ஏற்படுத்த வேண்டும் என அதில் அறிவுறுத்தியுள்ளது. நான் கூறுவது உண்மையில்லை என்றால், அரசாங்க செய்திப் பணிப்பாளரிடம கேளுங்கள்.

மறுபுறம் எம்முடன் தேநர அருந்த வாருங்கள் என்று சனல் 4 ஊடகவியலாளர்களை நாங்கள் அழைக்கவில்லை. ஊடக சந்திப்புக்கு பின்னர் அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

சனல் 4 தொலைக்காட்சியினருடன் அதிகாரபூர்வமாகவோ, இரகசியமான முறையிலோ நாங்கள் எந்த தொடர்புகளையும் வைத்திருக்கவில்லை என்பதை பொறுப்புடன் கூறுகிறேன்.

நாட்டில் உள்ள வறிய மக்களின் பணத்தை பிக் பொக்ட் அடித்து ஆயிரத்து 500 கோடி ரூபாவை செலவிட்டு வெளிப்பகட்டுக்காக அரசாங்கம் பொதுநலவாய மாநாட்டை நடத்தியது.

இதனைமறைப்பதற்காக அரச ஊடகங்களை பயன்படுத்தி சமகி சக்தி அமைப்புக்கு எதிராக அரசாங்கம் கீழ்த்தரமான ஊடகப் பிரசாரங்களைமேற்கொண்டு வருகிறது.

எம் மில் சிலரும் இதனை நம்பி ஏமாந்து விடுகின்றனர் என்பதே கவலைக்குரியது என்றார். (எ-11)

# தனிநாடுகள் உருவாகுவதற்கு யுத்தம் தேவையில்லை - ஐ.தே.க.

(கொழும்பு)

உலக நாடுகளில் தனி நாடுகள் உருவாக யுத்தம் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அந்த நாடுகளில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கங்களின் செயற்பாடுகளே இதற்கு போதுமானது என ஐக்கிய தேசியக் கட்சியின நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பில்நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு திமோர் நாட்டை சேர்ந்த எவரும்வெளிநாடுகளில்புலம்பெயர்ந்து வாழவில்லை. ஆனால் இந்தோனேசியாவில் இருந்து கிழக்கு திமோர் என்ற நாடு பிரிந்து சென்றது. வெளிநாடுகளுடன் மோதினால் இலங்கையும் அப்படியான அனர்த்தத்தில் விழுவதை தவிர்க்க முடியாது.

புலம்பெயர்ந்த நாடுகளில் மக்கள் கிழக்கு திமோருக்காக அன்று போராட்டம் நடத்தவில்லை. புலம்பெயர் மக்களை கொண்டிருக்காத கிழக்கு திமோர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் ஊடாக தனிநாடாக தன்னை உருவாக்கிக் கொண்டது.

இலங்கையும் இந்த வழியிலே தற்பொழுது பயணித்து வருகிறது எனபது மிகவும் தெளிவாகிதெனபடுகிறது.

கிழக்கு திமோர் மக்களுக்கு வெளிநாடுகளில் புலம்பெயர மக்கள் இருக்காத போதிலும் இலங்கை தமிழ் மக்களுக்கு உலகில் பல நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள இருககின்றனர்.

அவர்கள் இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வருகின்றனர். கிழக்கு திமோர் சம்பந்தமாக மூன்று யோசனைகள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக் குழுவில் நிறைவேற்றப்பட்டன.

இலங்கைக்கு எதிராகவும் மூன்றாவது யோசனை முன்வைக்கப்பட உள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான இந்த யோசனை மனித உரிமை ஆணைக் குழுவில் நிறைவேறினால் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை ஒன்று நடைபெறுவதை தடுக்க முடியாது என்றார். (எ-11)

# பிரித்தானிய பிரதமருக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனுக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

கொழும்பு லிப்டன் சுற்று வட்டதில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தை சுயாதீனமான குழு என தம்மை கூறிக் கொண்ட குழுவினர் நடத்தினர்.

கொழும்பில் அண்மையில் முடிவடைந்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட பரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன, போர் குற்றங்கள் தொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் சுதந்திரமான வெளிப்படையான விசாரணைகளை நடத்தவில்லை என்றால் சர்வதேச விசாரணைக்கு ஆதரவு வழங்கப்படும் என இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனைக்கண்டித்தே இந்த ஆர்பபாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் தம்மை சுயாதீனமான குழுவினர் என்று கூறிக் கொண்டாலும் ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் அரசாங்கமே இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (எ-11)

# மின் தடைப்படும்

(முல்லைத்தீவு)

இன்று சனிக்கிழமை புதிய மின்கம்பங்கள் நாட்டுவதற்காக காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தேராவில் சந்தியிலிருந்து புதுக்குடியிருப்பு வரையிலான உடையார்கட்டு, தேவிபுரம், கைவேலி, கோம்பாவில் உட்பட புதுக்குடியிருப்பு பிரதேசமெங்கும் புதிய மின்கம்பங்கள் நாட்டுவதற்காக மின்தடைப்படும் எனவும்,

நாளை ஞாயிற்றுக்கிமை காலை 8 மணி தொடக்கம் 5 மணிவரை கிளிநொச்சி ஏ9 வீதி டிப்போ சந்தியலிருந்து மாங்குளம் வரையிலான பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் எனவும் முல்லை. மாவட்ட மின் அத்தியட்சகர் ப.செந்தில்செல்வன் அறிவித்துள்ளார். (எ-15)

# திருட்டுப்போன பொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 12 இடங்களில் திருட்டுப்போன சுமார் 6 இலட்சம் ரூபாய பெறுமதியான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதோடு சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்குட் படுத்தப்பட்டு வருவதாக பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சிறிநிக சஞ்சீவ ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இதில் 2 வீட்டிலும் 2 கடைப்பொருட்கள் விற்பனை நலையத்திலும் 2 பான்சி கடையிலும் 4 பல சரக்கு கடைகளிலும் 2 கோப்சிற்றியிலும் திருட் டுப்போன பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஒரு மோட்டார் சைக்கிள், இரண்டு துவிச்சக் கரவண்டிகள், 5 மோட்டார்கள, ஒரு ஜெனரேட்டர் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்களும் மீட்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)


## விற்பனைக்கு

*நம்பர் 1 நியூபேனார்ட் (New Bernards), கிறீன் வலி (Green Valli), ஊர்க்கோழிக் குஞ்சு ஆகிய கோழிக் குஞ்சுகள் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.* (சி-5551)

**தொடர்புகளுக்கு :- செல்வரெட்ணம்**
**0778448295, 0776176370**

## பிள்ளையார் இன்

தினமும் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு மதிய உணவு 11.30 மணி தொடக்கம் 3 மணிவரை நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன.

- சைவ உணவு - 150/- மட்டுமே
- அசைவ (கோழி) உணவு - 180/- மட்டுமே

**தொடர்புகளுக்கு: 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2829** (சி-5540)

## பிள்ளையார் இன்

எமது உணவகத்தில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு தரமான சைவ/அசைவ உணவுகள் நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன.

விசேட உணவுகள்

- மசாலா தோசை (உருளைக்கிழங்கு கறியுடன்) 120/- மட்டுமே.
- தோசை/பூரி/சப்பாத்தி (உருளைக்கிழங்கு கறியுடன்) 80/- மட்டுமே.

(சி-5540)

இன்று முதல் மாலை 6 மணி முதல் 10 மணி வரை விசேட உணவுகள்

- மரக்கறி புரியாணி/பிரைட் ரைஸ் - 200/- மட்டுமே
- சிக்கன் புரியாணி - 300/- மட்டுமே
- சிக்கன்பிரைட்ரைஸ் - 250/- மட்டுமே

**தொடர்புகளுக்கு:**
**31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2829**


# மரண அறிவித்தல்கள்

## திருநாவுக்கரசு கணேசலிங்கம் (லண்டன்)

### (இன்டஸ்றியல் கணேசன்)



கண்டாவத்தை, அல்வாயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட **திருநாவுக்கரசு கணேசலிங்கம்** (முன்னாள் உரிமையாளர் கணேசன் இன்டஸ்றியல் அல்வாய்) லண்டனில் 16.11. 2013 அன்று காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் (லண்டன்) பாசமிகு கணவரும் சதீஸ் (லண்டன்), சசீலா (லண்டன்), கவிதா (லண்டன்), விஜி (சுவிஸ்), சுஜி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுயா (லண்டன்), சூரியகுமார் (லண்டன்), மகி (லண்டன்), விமல் (சுவிஸ்), சுரேன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் பரமேஸ்வரி (ஓய்வு நிலை அதிபர்), செல்வராசா (கனடா-ஓய்வுபெற்ற CTB நடத்துநர்), பத்மாவதி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.11.2013 திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் லண்டனில் நடைபெறும். இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அல்வாய் தெற்கு, அல்வாய்.**
**0212263934** (சி-5552)

**தகவல்:**
**இ.பொன்னம்பலம் (மைத்துனர்) குடும்பம்**

## திருமதி கதிரித்தம்பி நாகம்மா

### (வெள்ளையர்)



குரும்பசிட்டி றோட் கட்டுவனைப் பிறப்பிடமாகவும் இல.98, சிவப்பிரகாசம் வீதி, நாச்சிமார்கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி நாகம்மா 22.11.2013 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24.11.2013 ஞாயிற்றுக்கிழமை (நாளை) காலை 10 மணியளவில் அன்னாரின் வசிப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P.:021 373 4545

*தகவல்:* க.நவரத்தினம் (மகன்) (4667)

# மரண அறிவித்தல்

## கந்தையா சோதிலிங்கம்



யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சோதிலிங்கம் 21.11.2013 வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(4665) *தகவல்:* க.பாஸ்கரன் (பெறாமகன்)

# இன்று ஒரு தகவல்

## சனீஸ்வரன்

என்னுடைய நீண்டகால நண்பர் ஒருத்தர் இருந்தார். அவர் வருடந்தோறும் திருநள்ளாறு என்ற திருத்தலத்துக்குப் போவார். "அங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"என்ன இது இப்படிக் கேட்கிறீர்கள்? சனிபகவான் நளனின் விருப்பப்படி அங்கே தானே எழுந்தருளியிருக்கிறார். அங்கே போய் வணங்கிவந்தால் நம்மைப் பிடித்திருக்கும் சனியெல்லாம் விலகும் "என்றார்.

அந்த நண்பருக்கு ஆன்மீக விடயங்களில் மிகுந்த ஈடுபாடு. அவ்வப்போது சில புராணக்கதைகள் சொல்வார். மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்.

எப்பொழுதும் புராண விடயங்களை அறிவியல் என்ற தராசில் வைத்து எடைபோட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

அப்படிப் பார்த்தால் அதெல்லாம் நம்பமுடியாத மூட நம்பிக்கைகளாகத் தோன்றும். புராணங்களை புராணங்களாகவே புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த வகையில் தான் இந்த நண்பரும் நிறைய செய்திகளைச் சொல்வார்.

"சனியைப் போல கொடுப்பவனுமில்லை. சனியைப் போல கெடுப்பவனும் இல்லை" என்று சோதிடர்கள் சொல்வார்கள். நாம் ஏதாவது வம்பில் மாட்டிக் கொண்டால் 'பிடித்தது சனி' என்கிறோம்.

இராவணன் எப்பேற்பட்டவீரன், அவனே சனியின் பார்வை பட்டதும் சங்கடப்பட ஆரம்பித்தான் என்றார் நண்பர்.

"அது எப்படி?" என்று கேட்டேன்.

அவர் சொல்ல ஆரம்பித்தார்.

இராவணன், எல்லா நவக்கிரகங்களையும் பிடித்துக் கொண்டு வந்து தன்னுடைய சிம்மாசனத்தில் படிகளாக போட்டு வைத்தானாம். பாவம், அந்த ஒன்பது தேவதைகளும் ஒவ்வொரு படியாக குப்புறக் கிடந்தார்களாம். நவக்கிரகம் நம்மை ஆட்டிப் படைக்கிறது என்று நாம் சொல்கிறோம். ஆனால் அந்த நவக்கிரகங்களை இராவணன். எப்படி வைத்திருந்தான் பாருங்கள். எல்லோரையும் சிம்மாசனத்துக்குப் படிகளாக போட்டு வைத்திருந்தான். வேறுவழியில்லாமல் எல்லோரும் குப்புற விழுந்து கிடந்தார்கள். இராவணன் ஒவ்வொரு தடவையும் இவர்களுடைய முதுகில் அடிவைத்து ஏறித்தான் அந்த சிம்மாசனத்துக்குப் போவது வழக்கம்.

இப்படியே நடந்து கொண்டிருந்தது. இது நாரதரின் கண்ணில் பட்டது. நாரதர் சும்மா இருப்பாரா? யோசித்தார். என்ன செய்யலாம் என்று முடிவு செய்து கொண்டு நேராக இராவணனிடம் போனார்.

"இராவணா? நீ நவக்கிரகங்களைப் பிடித்துக் கொண்டு வந்து உன் சிம்மாசனத்துக்குப் படிகளாகப் போட்டு வைத்திருக்கிறாய். அது உன்னுடைய வீரத்தைக் காட்டுகிறது. ஒரு விடயத்தை நீ யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு தடவை நீ சிம்மாசனத்துக்குப் போகும் போதும் நவக்கிரகங்களின் முதுகில் அடிவைத்து ஏறிப்போகிறாய். அது உனக்குப் பெருமையில்லை. அவர்களுடைய மார்பில் அடிவைத்து ஏறிப்போக வேண்டும். அது தான் உனக்குப் பெருமை "என்றார்.

"இவர் இப்படிச் சொல்வதும் சரிதானே" என்று யோசித்தான் இராவணன்.

உடனே குப்புறக் கிடந்த நவக்கிரகங்களை திருப்பி மல்லாக்கப் போட்டான். அவர்களுடைய மார்பில் அடி வைத்து மேலே ஏறி சிம்மாசனத்துக்குப் போனான்.

அப்படிப் போய்க் கொண்டிருக்கும் போது சனிபகவானின் பார்வை அவன் மேல் பட்டது. அவ்வளவு தான். சூர்ப்பனகை தேடிவந்தாள். சீதையின் அழகைப் பற்றி தன் அண்ணனிடம் சொல்ல ஆரம்பித்தாள். விவகாரம் ஆரம்பமாகிவிட்டது என்று இந்தக் கதையை சொல்லி முடித்தார் என்னுடைய நண்பர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மீண்டும் அரசியலுக்கு வருகிறாராம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் அரசியல் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான எஸ்.டப்ளியூ. ஆர்.டி. பண்டாரநாயக்க அறிமுகப்படுத்திய நல்லொழுக்கம் நிறைந்த அரசியல் கலாசாரம் மற்றும் கொள்கைகளை மீண்டும் சமூகமயப்படுத்தும் நோக்கில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் விசேட அரசியல் செயற்திட்டம் ஒன்றை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளார்.

இத்தகவலை பெயர் குறிப்பிட விரும்பாத அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சி பண்டாரநாயக்கவினால் கட்டியெழுப்பப்பட்டு, சிறிமாவோ பண்டாரநாயக்கவினால வளர்க்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது. சந்திரிகா பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் வெற்றிப பாதைக்கு கொண்டு வந்தார்.

இப்படி பாதுகாக்கப்பட்டு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ராஜபக்சவினர் நாளுக்கு நாள் அழித்து வருகின்றனர்.

இதனால் சுதந்திரக் கட்சியின் அரசியல் கொள்கைகளை மீண்டும சமூகமயப்படுத்த முன்வரவேண்டும என அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை விடுததிருந்தனர்.

டிசெம்பர் முதல் வாரத்தில அவுஸ்திரேலியாவில் நடை பெறும் மாநாடு ஒன்றில் சிறப்புரையாளராக கலந்து கொள்ளும் சந்திரிகா, இதன் பின்னர் வெளிநாட்டில இருந்து வரும் தனது பிள்ளைகளுடன் விடுமுறையை கழித்த பின்னர், ஜனவரி மாதம் முதல் அரசியலுக்கு வருவதாக தமது அணிக்கு உறுதியளித்துள்ளார் எனவும் அந்த அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# உயர்தர பரீட்சை பெறுபேறுகள் டிசெம்பர் மாதம் வெளியாகும்

(கொழும்பு)

இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட உத்தேசிக்கப் பட்டுள்ளதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார அறிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளை குறித்த திகதிக்கு முன்னர் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான அவசியமான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் ஆணையாளர் நாயகத்தினால் பணிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, 10 ஆயிரம் மதிப்பீட்டாளர்கள் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 2 இலட்சத்து 92 ஆயிரத்து 704 பரீட்சார்த்திகள் தோற்றியமை குறிப்பிடத்தக்கது.

இவர்களில் 2 இலட்சத்து 35 ஆயிரத்து 318 பரீட்சார்த்திகள் பாடசாலைகளிலிருந்து தோற்றியதுடன், 45 ஆயிரத்து 240 பரீட்சார்த்திகள் தனிப்பட்ட ரீதியாகத் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சாயி பாபாவின் பிறந்த நாள்

(மானிப்பாய்)

பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் 87ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் மானிப்பாய் சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று மாலை 3.30மணி முதல் இடம்பெறவுள்ளது.

விசேட பஜனையுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வுகளில் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் மாணவர்களிற்கான அன்பளிப்புகளும் வழங்கப்படவுள்ளதாக மானிப்பாய் சத்தியசாயி சேவா நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9-23)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 30 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 120 | 130 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 70 | 90 | 100 |
| தக்காளி | 30 | 30 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 | 40 |
| கோவா | 25 | 20 | 50 | 50 |
| கரட் | 45 | 30 | 60 | 70 |
| பூசணி | 25 | 30 | 30 | 50 |
| புடோல் | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 200 | 220 | 240 |
| பெரிய வெங்காயம் | 195 | 180 | 210 | 200 |
| பாகற்காய் | 80 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 20 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 40 | 50 |
| பயற்றங்காய் | 40 | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 70 | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 20 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 80 | 80 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 50 | 80 | 60 |
| போஞ்சி | - | 80 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 15 | - | - | - |
| கீரை - 1 பிடி | 10 - 20 | 15 | 40 - 50 | 25 |
| தேசிக்காய் | 150 | 90 | - | .200 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 50 | 50 | 35 - 40 | 35 - 45 |
| இராசவள்ளி | - | - | - | 200 |

# இராசி பலன்

23.11.2013
(கார்த்திகை 07, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சஷ்டி முழுவதும்
பூசம் பின்னிரவு 1.44 மணிவரை
இராகுகாலம் 9.11-10.41 மணிவரை
சுபநேரம் 3.11-4.41 மணிவரை

**மேடம்**

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்விக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**இடபம்**

கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உடன் பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்**

நாவன்மையால் நற்பெயர் எடுப்பீர்கள், சேமிப்புகளை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**கடகம்**

விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், வெளியூர் பயணமொன்றால் கையிருப்பு கரையலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**சிங்கம்**

மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**கன்னி**

யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், பொருளாதாரநிலை உயர்வடையும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்**

முத்தான வாய்ப்புக்கள் இல்லம்தேடி வரலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், அந்நியர் உதவியுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்**

புதிய திட்டங்கள் கைகூடும், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, தேவையற்ற அச்சங்கள் தோன்றி மறையும்.

**தனுசு**

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், செலவுகள் அதிகமாகும்.

**மகரம்**

நினைத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும், நட்பு வட்டம் விரிவடையும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, கௌரவமான நாள், போசன நன்மையுண்டு.

**கும்பம்**

நம்பிக்கைகள் நடைபெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், பெண்வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**மீனம்**

தடைப்பட காரியங்கள் இன்று கைகூடும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

வளவன்


# இளைஞர் கழகங்களுக்கு விசேட செயலமர்வு

(மானிப்பாய்)

வலி .தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள பிரதேச மட்ட அதிகாரிகளுக்கு இளைஞர் கழகங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் விசேட செயலமர்வொன்று நாளை மறுதினம் காலை 9.00 மணி முதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் செந்தில்குமரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன், சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி வினோதினி ஸ்ரீமேனன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

எதிர்காலத்தில் இளைஞர் கழகங்கள் வினைத்திறனுடன் இயங்குவதனூடாக மாணவர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் அவர்கள் சார்ந்த சமூகம் அதிக பயனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பாடசாலை இளைஞர் கழகங்களின் பொறுப்பாசிரியர்கள், பிரதேச செயலக கிராம மட்ட உத்தியோகத்தர்களான கிராம சேவகர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர, வாழ்வாதார உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருடனான சந்திப்பும் இடம்பெறவுள்ளது. அத்துடன் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழகங்களை சேர்ந்தோரை தவறாது சமுகம் தருமாறு பிரதேச இளைஞர் கழக சம்மேளன செயலாளர் ஆர்.நவசக்தி கேட்டுள்ளார். (அ-9-23)




# மத்திய அரசின் அதிகாரங்களை வட மாகாணம் மீது திணிக்க சதி!

## வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

தேர்தலிலும் பார்க்கக்கூடிய கடினம் மிக்க ஒரு போட்டி தற்போது நடந்து கொண்டிருக்கின்றது. மக்கள் தமது மனோநிலையை தேர்தலில் எடுத்தியம்பி இருந்தாலும் அரசாங்கம் சார்பானவர்கள் அதை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. தொடர்ந்தும் தமது மத்திய அரசாங்க அதிகாரங்களை மாகாணத்தின் மீது திணித்து விடவே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மக்களின் நன்மதிப்பைப் பெறத் தவறியவர்கள் தொடர்ந்து ஆணைகள் இடத் துணிந்துள்ளார்கள். அதற்காக முன்னர் தமது கையாட்களாகப் பாவித்து வந்த அரச அலுவலர்களைத் துணை கொள்ள வற்புறுத்தி வருகின்றார்கள். இதனால் மக்களின் தேவைகள், அவர்களுக்கான சேவைகள் பாதிப்படைகின்றனவே என்ற எண்ணம் சற்றேனும் மேற்படி அதிகாரத்தில் உள்ள அதிகாரிகளுக்கோ அரச அலுவலர்களுக்கோ இருப்பதாகத் தெரியவில்லை. தமது அதிகாரங்களும் ஆணைகளுமே அவர்களுக்கு அத்தியாவசியமாகப் போய்விட்டது என வடமாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரமும் பரிசளிப்பு விழாவும் நேற்றைய தினம் சாவகச்சேரி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கமும் மாகாண சபையும் ஒரு கூட்டுறவு அடிப்படையில் சேர்ந்தொழுகினால் தான் மாகாணசபை நிர்வாகமும் பிரதேச சபைகள் நிர்வாகமும் வெற்றி அளிக்க முடியும்.

நானோ நீயோ என்ற பாணியில் ஒருவரின் உரித்துரைகளை மற்றவர் பாவிக்க எத்தனித்தால் கூட்டுறவு நிலை அழிந்து முரண்பட்டநிலையே உருவாகும். மக்கள் நன்மை கருதி நாங்கள் அமைதியாகப் பொறுமையுடன் தான் எமது தடங்களைப் பதித்து வருகின்றோம். அதனை எமது வலுவின்மை அல்லது தளர்வு நிலை என்று எமது சகோதர சகோதரிகள் தப்புக்கணக்கு போட்டு விடக்கூடாது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தமது மக்களைச் சீரும் சிறப்புடனும் செய்ய வழி அமைப்பதால் தான் மாகாணத்தில் பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசங்களில் ஜனநாயகத்தின் சுவடுகள் பதிக்கப்படலாம்; இல்லை என்றால் அராஜகமே மிஞ்சும்.

இதுவரை காலமும் அரச அதிகாரமும் இராணுவ பலம்; அனுசரணைப் படையின் அட்டூழியங்கள் போன்றவற்றின் உதவியுடன் நடத்திவந்த அரச நிர்வாகத்தைத்தான் மக்கள் வேண்டாமென்று தெளிவாகக் கூறிவிட்டார்களே என்பதை மேற்படி அரச சார்பான அதிகாரம் படைத்தவர்கள் புரிந்து கொண்டு நடக்கப் பழகவேண்டும்.

இராணுவத்தைத் தொடர்ந்து மாகாணத்தில் இருக்கவிட்டு அதன் அரவணைப்பில் குளிர்காயலாம் என்று எண்ணுவது மடமை. எனவே மக்கள் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றவர்கள். தத்தமது கடமைகளில் ஈடுபட வழியமைத்துக் கொடுப்பதன் அவசியத்தை சகலரும் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம்.

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு முன்னேற்பாடாக நடந்த இந்திய -இலங்கை ஒப்பந்த விவாதங்கள் நாட்டின் சகல மாகாணங்களிலும் மாகாண சபைகளை அமைக்கும் வண்ணமாக அமையவில்லை. அப்போதைய ஜனாதிபதிதான் சகல மாகாணங்களுக்கும் ஏற்புடையதாக்கினார். காரணம் தான் தமிழர்களுக்கு ஏதேனும் சலுகைகளை கொடுத்து உதவியதாக சிங்கள மக்கள் அவரை அடையாளம் காணக்கூடாது என்பதற்காகவே.

ஆனால் அதிகாரப்பரவலே 13ஆவது திருத்தச் சட்டத்தின் குறிக்கோள். அது போதுமானதாக திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதா இல்லையா என்று பரிசீலிக்க இதுவரை காலமும் போதிய சந்தர்ப்பம் எழவில்லை.

ஆனால் வட மாகாணம் அப்படியல்ல. நாங்கள் கட்சியால் மட்டுமல்ல கலைகளால், மொழியால், மதத்தால் நிலத்தின் அமைப்பால் வேறுபட்டவர்கள். காலாதிகாலமாக தனித்து வேறுபட்ட வாழ்க்கை முறையில் வளர்ந்து வந்தவர்கள். எமக்குத்தான் அதிகாரப் பகிர்வு தேவைப்பட்டது.

சுமார் 25 வருடங்களாக அது எமக்குக் கிட்டவில்லை. தற்போதுதான் தெரிகிறது ஆளுநருடன் சேர்ந்து அரசாங்கம் எந்தளவுக்கு எமது அதிகாரப்பகிர்வை அர்த்த மற்றதாக்கலாம் என்பதை.

அதாவது எமது அதிகாரப் பகிர்வுக்காகவே 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதனை 25 வருடங்களுக்கு மேல் எம்பூமியில் நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால் நடைமுறைப்படுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் அதைச் சிதைக்கச் சதி நடக்கிறது. ஆனால் தேர்தலின்போது நடக்கக்கூடும் என்பது நாம் அறிந்து வைத்திருந்ததுதான்.

அடுத்த கட்டமாக இப்பேற்பட்ட சதிச் செயல்கள் நாடறிய உலகறியப் பேசப்பட வேண்டியவைகளாக மாறக் கூடியன என்பதை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும்.

ஆயிரம் ஆயிரம் தமிழ் மக்கள் தமது உயிர்களைப் பலி கொடுத்தது இப்பேற்பட்ட சில்லறைச் சதிகளுக்கு ஆளாகவல்ல.

மாகாண சபையை நாம் போதுமானதாக நிர்வகிப்பதற்கு எதிராகச் செய்யப்படும் சதிகள் யாவும் நாடு இதுகாலும் தமிழர்களுக்கு அநீதி இழைத்து வந்ததை வெளிக்காட்ட உதவுவன.

எனினும் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அது எமக்குப் போதிய அதிகாரப் பகிர்வை வழங்கப் போவதாக அறிவித்துள்ளது.


ஆனால் நடைமுறையைப் பார்த்தால் அரசாங்கத்துடன் சேர்ந்தியங்கும் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் சிலர் தமிழ் பேசும் அலுவலர்கள் சிலருடன் சேர்ந்து எம்மை இயங்க விடாமல் செய்யப் பார்க்கின்றார்கள்.

ஒருவேளை அரசாங்கத்திற்கும் எமக்கும் இடையில் நெருங்கிய உறவு அடுத்த தேர்தலின் போது ஏற்பட்டால் தமதுபாடு இக் கட்டானதாக அமைந்து விடுமோ என்ற கிலேசம் தான் அவர்களை அவ்வாறு செய்யத் தூண்டுகின்றதோ தெரியவில்லை.

எது எவ்வாறு இருப்பினும் உள்நாட்டு விடயங்களை இப்பொழுதும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்றே நான் நம்புகின்றேன்.

எனினும் அந்த நம்பிக்கைக்கு மாறான ஒரு செயலாகத்தான் மேற்கூறிய சதிகள் அரங்கேற்றப்படுகின்றன. விரைவில் சிங்களப் பொது மக்கள் எமது யதார்த்த தேவைகளையும் இன்று எமக்கு நடக்கும் சதிகள் பாற்பட்ட நடவடிக்கைகளையும் புரிந்து கொண்டு தமது அரசாங்கங்களுக்குப் போதுமான நெருக்குதல்களை அளிக்க முன்வருவார்கள் என்றும் நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-9-29)



இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய யாழ்.உயர் தொழில்நுட்பவியல் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப் பணிப்பாளர் சகாயன், மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழக கிளை முகாமையாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# பொது நூலக நிறைவு நாள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபையின் பொதுநூலக நிறைவு நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு சபையின் தேவா திறந்த வெளி அரங்கில் நடைபெறும்.

வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் க.கமலேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வலயக் கல்விப் பணிப் பாளர் தி.யோண்குயின்ரஸ், வேலணைப் பிர தேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், ஊர் காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் ம. ஜெயகாந்தன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்க ளாக சபை யின் உறுப்பினர்களும் கலந்து கொள்வர்.

இதில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டி யோருக் கான பரிசளிப்பும் நடைபெறவுள்ளது என சபை யின் நூலகர் செல்வி சண்முகலிங்கம் வித்யா தெரிவித்துள்ளார். (அ-2)

# மாலைதீவின் புதிய ஜனாதிபதிக்கு ஜனாதிபதி மஹிந்த வாழ்த்து

மாலைதீவில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற அப்துல்லா யாமின் அப்துல் கையூமிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள வாழ்த் துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது, மாலை தவு மக்கள் உங்கள் கொள்கைகள் மீதும் உங்கள் தலைமைத்துவத்தின் மீதும் வைத் திருந்த நம்பிக்கையை இந்த வெற்றி எடுத் துக்காட்டுகிறது.

1960ஆம் ஆண்டு காலப் பகுதி யில் இரு ந்து இலங்கைக்கும் மாலைதீவிற்கும் இடை யில் இராஜதந்திர தொடர்புகள் காணப்படுகிற ன்றன. அன்று முதல் இருநாடுகளும் நெரு ங்கிய தொடர்புகளை பேணி வருகின்றன.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடை யிலான உறவுகள் நட்புறவின் பாரம்பரியத்தை யும் நெருங்கிய கூட்டுறவையும் பரஸ்பர கௌரவத்தையும் எடுத்துக் காட்டுகின்றன. மாலைதீவு சர்வதேச அரங்கில் இலங்கை க்கு தனது ஒத்துழைப்பையும் கூட்டொரு மைப்பாடடையும் தெரிவித்துள்ளது.

இது இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவை மேலும் பலப்படுத்தியுள்ளது.

இலங்கையும் மாலைதீவும் வலுவான வர்த்தக உறவுகளை பகிர்ந்து கொண்டு ளளன. இலங்கையுடனான குறிப்பிடத்தக்க ஏற் றுமதி இறக்குமதிகளில் குறிப்பாக மாசி ஏற்றுமதி செய்யப்படுவதும் அரிசி இறக்குமதி செய்யப்படுவதும் இடம்பெறுகின்றமை குறிப் பிடத்தக்கதாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ-2)

# கடலில் மூழ்கியவரை மீட்க சென்றவர் பலி

கடலில் மூழ்கிய இருவரை மீட்பதற்காக சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் வாழை ச்சேனை நாசிவன்தீவு பகுதியில் இடம்பெ ற்றுள்ளது. குறித்த இளைஞர், நேற்று முன் தினம் காலை குடும்பத்தாருடன் நாசிவன்தீவு கடற் கரைக்குச் குளிக்கச் சென்றபோது இச்சம் பவம் நேர்ந்துள்ளது.

தங்களுடன் வந்த இருவர் நீரில் மூழ்கிய தைக் கண்டு அவர்களைக் காப்பாற்றுவதற்கு இவர் முயற்சித்த சமயம் இச்சம்பவம் நிகழ்ந் ததாக உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரி விக்கின்றனர். (அ-2)

# நாவலர் குருபூஜை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குரு பூஜை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாயன்மார்கள் ஆலயத்தில் விசேட அபி டேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து காலை10 மணிக்குபாட சாலை அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமை யில் குருபூஜை நிகழ்வுகள் இடம்பெறவு ள்ளது.

இந் நிகழ்வில்கந்தசத்தியதாசன் சிறப்பு சொற் பொழிவுடன் மாணவர்கள் கலை நிகழ்ச்சியும் பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது.(அ-2-136)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வாடகைக்கு/ குத்தகைக்கு வீடுகள்/ கட்டடங்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்கு வதற்காக சகல வசதிகளுடனும் கூடிய 1500 சதுர அடிகளுக்கு மேற்பட்ட பெரிய நடுத்தர வீடுகள்/கட்டடங்கள் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு/தத்தகைக்கு தேவை.

காலத்திற்கு காலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேலதிக மாணவர்கள் உள்வாங்கப்படும்போது மாணவர்களுக்கான மேலதிக தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு, மேலதிகமான திருத்தங்களையோ/விரிவாக்கங்களையோ ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்கள் மேலும் விரும்பப்படுகின்றது.

வீட்டை வாடகைக்கு தர விரும்புவோர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம்இ அவர்களுடன் தொடர்பு கொண் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 09.12.2013 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் தனித்தனியாக கடித உறையின் இடது மேல் மூலையில் "மாணவர்களின் விடுதிக்கான வீடு/கட்டடம்" என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

(சி/5542) பதிவாளர்.

# மயான அபி. சபை பொதுக்கூட்டம்

தாவடி இந்து மயான அபிவிருத்திச் சபை யின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தாவடி வடக்கில் அமைந்து ள்ள காந்தி கலை வளர்ச்சி மன்ற (சனசமூக நிலைய) மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

எனவே, தாவடி இந்து மயான பாவனை யாள ர்கள்மற்றும்நலன் விரும் பிகள் சமூக ஆர்வலர் கள் அனைவரையும் இக் கூட்டத்திற்கு தவ றாது சமுகம் அளிக்கு மாறு சபையின் செய லாளர்பா.கஜந்தன்அறி வித்துள்ளார். (அ)

# வெளிக்கள நிலையம்- தொண்டைமானாறு

FWC

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெற இருப்பதனால் பிரேரணைகளை சமர்ப்பிக்க விரு ம்பும் அங்கத்தவர்கள் தங்கள் பிரேரணைகளை M.M. அல் போன்ஸ், செயலாளர், தொண்டைமானாறு வெளிக்கள நிலை யம், சென்மேரிஸ் வித்தியாலயம்(O.L.R) யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு 07.12.2013 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

செயலாளர்

(சி/4548) தொண்டைமானாறு, வெளிக்கள நிலையம்.


# பொன் விழா

வட இலங்கையில் டயர் நிரப்பும் தொழிலில் முன்னோடி நிறுவனம்

நோர்தேன் இன்டஸ்ரிஸ்

தனது 50 வருட சேவையை இன்று (23.11.2013) பூர்த்தி செய்கிறது.

வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள், முகவர்கள்,
வங்கியாளர்கள் மற்றும் ஊழியர்கள்
அனைவருக்கும் எமது மனமார்ந்த
நன்றிகளை
தெரிவித்துக் கொள்கின்றோம்.



ஸ்தாபகர்-அமரர்
தம்பியப்பா
சண்முகலிங்கம்
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4556)


# கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா : 33உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: B/465 | பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா : 28 ¾ செவ் 2 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BBA / Clerk<br>தொ.இ: G/728 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா : 90 செவ் 7 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / அரச உத்தியோகம்<br>தொ.இ: B/1264 | பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா : 70 ¾உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: G/729 |
| பிறப்பு: 1977 இந்து (Naadar)<br>நட்சத்திரம்: ரேவதி 4கி.பா : 46<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L / பொது சுகாதார பரிசோதகர் (PHI)<br>தொ.இ: B/1216 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா : 69 செவ் 12 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDM / Financial Assistant<br>தொ.இ: G/1248 |
| பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா : 15உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC / நிரந்தர அரச உத்தியோகம்<br>தொ.இ: B/1724 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா : 28உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L, NCICT<br>தொ.இ: G/2018 |


சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

# வடமாகாண கல்வி திணைக்களத்தின் 46 மில்லியன் ரூபா திரும்பும் நிலையில்

## வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதமாம்

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் (TSEP) வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் உள்ள துணுக்காய், வவுனியா வடக்கு, வலிகாமம், மடு, கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களுக்கு புதிய கட்டடங்கள் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட 46 மில்லியன் ரூபா பணம் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படாத நிலையில் மீண்டும் திரும்பி திறைசேரிக்குச் செல்லும் நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பில் தெரியவருவது,

கடந்த மார்ச் மாதம் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலைகள் வேலைப் பணிப்பாளரும் பொறியியலாளருமான க.குகநேசனால் கல்வித் திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் துணுக்காய் கல்வி வலயத்திற்கு 90× 20 அடி கொண்ட இரு மாடிகளைக் கொண்ட அலுவலகம் 15 மில்லியன் ரூபா செலவிலும் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 15 மில்லியன் ரூபா செலவில் அலுவலக கட்டடமும் மடு கல்வி வலயத்தில் 5 மில்லியன் ரூபா செலவில் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றும் கிளிநொச்சி கல்வி வலயத்தில் விசேட கல்வி மாணவர்களுக்கான செயற்பாட்டு அலுவலகமும் 4 மில்லியன் ரூபா செலவிலும் வலிகாமம் கல்விவலயத்தில் அலுவலகங்கள் அமைப்பதற்கு 7 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 46 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

வேலைத்திட்டங்களை அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களின் கீழ் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்கள் தெரிவு செய்யப்பட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட இருந்த நிலையில் வடக்கு மாகாண கட்டடத் திணைக்களத்தின் கீழ் அவ்வேலைகள் செய்யப்படவுள்ளதாக கடந்த ஜுன் மாதம் 3ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் வடக்கு மாகாண கட்டட திணைக்களத்தினால் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஆயினும் இன்றுவரை அவ்வேலைகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதியுடன் அனைத்து திணைக்களங்களின் கணக்குகளை நிறைவு செய்து மீதிப்பணங்கள் யாவும் திறைசேரிக்கு அனுப்பப்படவேண்டிய நிலையில் மேற்படி 46 மில்லியன் ரூபா பணமும் திருப்பி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ம-15)

# 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்பு

(பூநகரி)

வாசிப்பு மாதத்தையொட்டி பூநகரியில் இருந்து புலம்பெயர்ந்து நோர்வே நாட்டில் வசிக்கும் நிர்மலாதேவி என்பவர் பல்லவராயன் கட்டு பொதுநூலகத்துக்கு பத்தாயிரம் ரூபா பெறுமதியான நூல்களை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இந்நூல்களை நூலகப் பொறுப்பாளர் இ.செல்வியிடம் உறவினர் ஒருவர் மூலம் கையளித்துள்ளார். (ம-84)

# பள்ளிக்குடாவில் மீன்வளர்ப்பு பண்ணை

(பூநகரி)

பள்ளிக்குடா மீன்பிடித்துறையில் சோ ஆ நிறுவன நிதியுதவியுடன் 2இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் மீன்வளர்ப்பு பண்ணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வளர்மதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவோடு பராமரிக்கப்பட்டு வரும் இப்பண்ணையில் விடப்பட்ட மீன் வகைகள் 3 மாத முடிவில் முதிர்ச்சியடைந்த பின் பிடிக்கப்படும் இம்மீன்களின் மூலம் பெறப்படும் வருமானம் அச்சங்கத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படுமெனவும் சங்கத் தலைவர் செ.யஸ்ரின் தெரிவிக்கிறார். (ம-84)

# பயன்தரு மரங்கள் வெட்டப்பட்டு கடத்தல்

## மக்கள் சுட்டிக்காட்டு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பெறுமதி வாய்ந்த பயன்தரும் மரங்கள் தறிக்கப்பட்டு தென்னிலங்கைக்கு கடத்தப்படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக கரைதுறைப்பற்று பிரதே செயலர் பிரிவில் உள்ள கொக்குத் தொடுவாய், முள்ளியவளை மத்தி, முள்ளியவளை மேற்கு, முள்ளியவளை வடக்கு கிராமங்களிலும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மாங்குளம் ஆகிய கிராமத்திலுமே மரங்கள் வெட்டி கடத்தப்படுகிறது.

அத்தோடு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள தேவிபுரம், மன்னாகண்டல் ஆகிய கிராமங்களிலும் மரங்கள் வெட்டிக் கடத்தப்படுகின்றது. இதில் முதிரை, தேக்கு, வேம்பு ஆகிய பயன்தரு மரங்களே வெட்டி கடத்தப்படுகின்றது.

எனவே, இவ்விடயம் தொடர்பில் உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)




# வட்டக்கச்சி வைத்தியசாலையும் நோயாளர்களின் அவதியும்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி வைத்தியசாலை ஒழுங்காக இயங்காமையால் நோயாளர்கள் பெரும் இன்னல்களை எதிர் நோக்குவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கிய கிராமங்களில் ஒன்றாக வட்டக்கச்சி கிராமம் திகழ்கின்றது. இங்கு சிவிக் சென்ரர் வட்டக்கச்சி, மாயவனூர், மாவடியம்மன், இராமநாதபுரம், கல்மடுநகர் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இக்கிராமத்தில் பல ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள்.

இங்கு ஏழு பாடசாலை உள்ளன. இப்படியான ஊரில் இன்னும் ஒழுங்காக வைத்தியசாலை இயங்கவில்லை. இடம்பெயர்வுக்கு முன் இங்குள்ள அரசினர் வைத்தியசாலை சீராக இயங்கியது. இவ்வைத்தியசாலையில் மகப்பேற்று மருத்துவமனை இயங்கியது. நோயாளர் தங்கி சிகிச்சை பெறுகின்ற வசதி இருந்தது. தினமும் பலநூறு மக்கள் வந்து தங்கள் நோய்களுக்குரிய மருந்து வகைகளைப் பெற்றுச் சென்றார்கள். கடும் நோயாளர்களை வேறு வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கு நோயாளர் காவு வண்டியும் சீராக இயங்கியது.

இன்று இவ் வைத்தியசாலை கிழமையில் இரண்டு தினங்கள் மட்டும் நோயாளர்களை பார்வையிட்டு மருந்து கொடுக்கின்றார்கள் அந்த இரண்டு தினங்களும் மட்டுப்படுத்தப் பட்ட நேரம் தான்.

அதன் காரணமாக இங்குள்ள மக்கள் அதுவும் வறிய மக்கள் மிகுந்த சிரமத்தை எதிர் நோக்குகிறார்கள். பொருளாதாரக்கஷ்டம் அத்துடன் வீண்நேரவிரயம் இப்படியான சிரமங்களை கடந்த நான்கு வருடங்களாக மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

எனவே இவ்விடயத்தை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் நோயாளர்களும் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-254)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் அசௌகரியம்

கிளிநொச்சி மாவட்ட உதயநகர் மேற்கு 30 வீட்டுத்திட்டத்திற்கு அருகாமையில் உள்ள வீதி மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது.

பிரதான வீதிகளில் இருந்து உட்பகுதிகளுக்கு செல்லும் பயணிகளும் பாடசாலை மாணவர்களும் இக்கிராமத்தில் உள்ள உள் வீதிகள் திருத்தம் செய்யப்படாமையால் மிகவும் கஷ்டத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே பிரதான வீதியோரங்களில் வசிக்கும் மக்களை மட்டும் கவனத்தில் கொள்ளாது கிராமங்களின் உட்பகுதிகளில் வாழும் மக்களின் நலனிலும் பாடசாலை மாணவர்களின் நலனிலும் அக்கறை எடுத்து செயற்பட வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களிடம் இப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-254)


# முல்லைத்தீவு மாவட்டத்தில் 39660 குடும்பங்கள் குடியமர்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து கடந்த ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி வரை நண்பர்கள், உறவினர்கள் வீடுகள் மற்றும் நலன்புரி நிலையங்களில் இருந்த 39 ஆயிரத்து 660 குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 92 உறுப்பினர்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இதில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 611 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 130 உறுப்பினர்களும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 706 குடும்பங்களை சேர்ந்த 8 ஆயிரத்து 648 உறுப்பினர்களும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 562 குடும்பங்களைச்சேர்ந்த 18 ஆயிரத்து 226 உறுப்பினர்களும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 12 ஆயிரத்து 657 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 302 உறுப்பினர்களும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 11 ஆயிரத்து 788 குடும்பங்களைச் சேர்ந்த 37 ஆயிரத்து 427 உறுப்பினர்களும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 3ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 189 உறுப்பினர்களும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ம-267)



யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினால் அண்மையில் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கொன்று வித்தியானந்தாக் கல்லூரியில் நடத்தப்பட்ட போது....

# ஜனாதிபதி தேர்தலின் போது மூன்று பெண்களில் ஒருவர் பொது வேட்பாளர்

(கொழும்பு)

**எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால், மூன்று பிரபலமான பெண்களில் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்துவது என எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.**



அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் என அரசியல் வட்டாரத்தகவல தெரிவிக்கின்றன.

அப்படி தேர்தல் அறிவிக்கப்பட்டால் முன்னாள ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமார துங்க, இலங்கையின் 43ஆவது பிரதம நீதியரசர கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, முன்னாள இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா ஆகிய மூவரில் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட வைப்பது என எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

பொது வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை நிறுத்துவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் கடந்த வாரத்தில் இருமுறை பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டதாக தெரியவருகிறது.

அதேபோல், கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை பொது வேட்பாளராக போட்டியிட வைக்க முடியும் என சிரேஷ்ட சட்டத்தரணிகள் சிலர் அண்மையில் ரணில் விக்ரமசிங்கவுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனிடையே ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக அனோமா பொன்சேகாவை நிறுத்துவது என சரத் பொன்சேகாவின் ஜனநாயக் கட்சி தீர்மானித்துள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில போட்டியிடாது போனால் அனோமா பொன்சேகாவை பொது வேட்பாளராக போட்டியிடவைப்பது தொடர்பில் சரத் பொன்சேகா, ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு பதிலாக வேறு ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அனோமா பொன்சேகா கட்டாயம் வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

மின்பரிமாற்றல் வலையமைப்பில் இணைப்புகளை சீர்செய்வதற்காகவும், பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5.30 மணிவரைஉரும்பிராய், கோண்டாவில், மருத்து வபீடப்பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப்பகுதி, கலட்டி, தட்டார்தெரு, மனோகரா, கஸ்தூரியார் வீதி, குருநகர், ஆடியபாதம் வீதிப்பிரதேசம், மாதகல், அளவெட்டி, இளவாலை, மெய்கண்டான், மாரீசன் கூடல், வித்தகபுரம் ஒருபகுதி, கீரிமலை ஒரு பகுதி, பெரியவிளான், நுணாவில், வேம்பிராய், சரசாலை, மட்டுவில், சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கட்டைப்பிராய், கல்வியங்காடு, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி, மூளாய், காரைநகர்பிரதேசம், தீவகப்பிரதேசம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இன்றைய தினம் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, ஈவினை, முகாவில், மல்வம், கரந்தாய், கோவில்வயல், இயக்கச்சி, பனிக்கையடி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் மீள அமைக்கப்படும்

(சென்னை)

நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மீண்டும முள்ளிவாய்க்கால் நினைவு முற்றச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைத்துறை சொத்தை சேதப்படுத்திய வழக்கில் கைது செய்யப்பட்ட பழ.நெடுமாறன் உட்பட 83 பேருக்கு மதுரை உயர் நீதிமன்ற கிளை பிணை வழங்கியது.

இந்நிலையில், திருச்சி மத்திய சிறையில இருந்து நேற்று காலை 9.05 மணிக்கு பழ.நெடுமாறன் உடபட 83 பேர் விடுதலையானார்கள்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில்,

இலங்கையில் தமிழர்களுக்கு ஆதரவாக பேசிய பிரிட்டன் பிரதமருக்கு நன்றி தெரிவித்ததுடன் தஞ்சாவூரில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் கட்டப்பட்டதில் விதிமீறல் இல்லை என்றும், முள்ளிவாய்க்கால் நினைவு முற்றச் சுற்றுச்சுவரை இடித்தது சட்டவிரோதமானது என்றும் கூறினார்.

மேலும், நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மீண்டும் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றச சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

## வரவு-செலவுத்திட்டத்தில் மக்களின் நலன் கருத்தில் கொள்ளப்படவில்லை

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தில் மக்களின் நலன கருத்திற் கொள்ளப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

எனினும், இந்த வரவு செலவுத் திட்டம் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சாதாரண பொதுமக்கள் பற்றிய எந்தவொரு விடயமும் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மாறாக பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலேயே அதிகளவில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ள போதிலும், இந்தப் பரிந்துரைகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## குடும்பப் பெண்ணுடன் நட்பு கொண்டுள்ள நாகபாம்பு

(மொனராகலை)

இளம் பெண் ஒருவர் பெரிய நாகபாம்பு ஒன்றிடம் வசப்பட்டுள்ளதால் அவரது குடும்ப வாழ்க்கை நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது.

வெல்லவ ஹேரத்கம என்ற பிரதேசத்தில் திருமணமான 30 வயதான பெண்ணுடன் பெரிய நாகபாம்பு நட்புடன் பழகி வருவதுடன் அந்த பெண்ணை தினமும் பின் தொடர்ந்து வருகிறது.

இதனால் பெண்ணின் வீட்டில் தகராறு ஏறபட்டு, வெல்லவ பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். பெண்ணை பின் தொடர்ந்து வரும் குறித்த பாம்பு இரவில அந்த பெண்ணின் அறைக்குள் புகுந்து கொள்வதோடு வெளியில் செல்வதில்லை.

உயிரிழந்த உறவினர் ஒருவர் நாகபாம்பாக பிறந்துள்ளதாக நம்பும் இந்த பெண், தான் உறங்கும் கட்டிலுக்கு அருகில் நாகம் படுப்பதற்காக பெட்டியை ஒன்றையும் வைத்துள்ளார்.

வீட்டில் நாகபாம்பு இருப்பதால் பெண்ணின் கணவரும் பிள்ளைகளும் இரவில் வீட்டுக்கு வெளியில் நித்திரை செய்கின்றனர்.

பெண்ணுக்கு எவரும் தீங்கிழைக்க நாகபாம்பு இடமளிப்பதில்லை எனவும் நாகத்தை அடிக்கவோ அதனை துன்புறுத்தவோ பெண் இடமளிப்பதில்லை எனக் கூறப்படுகிறது. (அ-2)

## மனித உரிமை மீறல்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்

### அமைச்சர் சிதம்பரம் வலியுறுத்தல்

(சென்னை)

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட அனைவரையும் இலங்கை அரசாங்கம் தண்டிக்க வேண்டுமென மத்திய அமைச்சர் பா.சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமை மீறல் விவகாரங்கள் குறித்து விசாரணை நடத்தி தண்டிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அவர்களுக்கு தண்டனை விதிக்க வேண்டியது இலங்கை அரசாங்கத்தின முதன்மைப் பொறுப்பாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதனை வைத்து எதனையும் நிர்ணயித்து விட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலாபம் கிடைக்கும் என்ற காரணத்தினால் அதிகமானவர்கள் முதலீடு செய்வதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)






ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட துவிச்சக்கரவண்டிப் போட்டி மகரகம தேசிய இளைஞர் மன்றத்தின் முன் ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் முடிவடைந்தது. இதன்போது வெற்றிபெற்ற வீரருக்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி பரிசில் வழங்குவதையும், யாழ்.நோக்கி வந்த வீரர்கள் மீண்டும் போட்டியின் ஆரம்ப இடத்தை நோக்கி பயணிக்க ஆரம்பமாவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)




# தாயன்பு

**வை**ரபுரி என்ற நாட்டில் பல கோடிகளுக்கு அதிபரான சீலன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் தயாளகுணம் கொண்டவன். அந்நாட்டு மன்னன் பர்வதனனின் ஆருயிர் நண்பன். பொக்கிஷத்தில் பணக் குறைவு ஏற்பட்ட போதெல்லாம் மன்னனுக்குத் தேவைப்பட்ட பணத்தைக் கொடுத்து பிறகு வாங்கிக் கொள்வான் சீலன். அப்படி கிடைத்த வட்டிப் பணத்தை ஏழை எளியவர்களுக்கு கொடுத்து உதவி வந்தான் சீலன்.

ஓவியக் கலையில் கைதேர்ந்தவன் சீலன். மற்ற கலைகளிலும் அவனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அழகான சிற்பங்கள், வண்ண ஓவியங்கள், வேலைப் பாடுடன் கூடிய கைவினைப் பொருள்கள் என றால் என்ன விலை கொடுத்தாவது வாங்கி விடுவான். ஆனால், அப்படி வாங்கும் பொருள்களை யார் கேட்டாலும் கொடுக்கவும் மாட்டான்.

மன்னன் பர்வதனுக்கு, சீலனின் இந்தப் பிடிவாதக் குணம் ஒன்றுதான் பிடிக்காமல் இருந்தது. அதனால் சீலனிடமிருந்த அழகிய பொருள்களில் ஒன்றைக் கூடப் பெறமுடியாது போனது.

ஒருநாள் சீலனைக் காண வாலிபன் ஒருவன் வந்தான். கிழிந்த ஆடைகளை அணிந்து தாடி வளர்த்துக் கொண்டிருந்த போதிலும் அவன் உயர் குடியில் பிறந்தவன் என்று சீலனுக்குத் தெரிந்துவிட்டது. அவன் அந்த இளைஞனை வரவேற்று உட்காரும் படி சொன்னான்.

"ஐயா! என்னை இந்தக் கோலத்தில் கண்டவர்கள் எல்லாரும் விரட்டினார்களே ஒழிய என்னை "உட்கார்" என்று இதுவரை யாரும் சொல்லியதில்லை. மிக்க நன்றி. நீங்கள் கலை அம்சம் கொண்ட பொருள்களை விலைக்கு வாங்கிக் கொள்வதாகக் கேள்விப்பட்டேன்.

என் பெயர் சக்தி. என் முன்னோர்கள் ஜமீன்தாரர்கள். எங்களுக்குச் சொந்தமான அபூர்வ ஓவியம் ஒன்றைத் தங்களுக்கு விற்க எடுத்து வந்துள்ளேன்," எனக் கூறித் தான் கொண்டு வந்த ஓவியத்தை அவனிடம் காட்டினான்.

அந்த ஓவியத்தைக் கண்டு சீலன் பிரமித்தான். ஒரு தாய் குழந்தையை எடுத்துக் கொஞ்சுவது போன்ற படம் அது. குழந்தை தன் பொக்கை வாயை விரித்து சிரிப்பது மிக அழகாக தீட்டப்பட்டிருந்தது. வண்ணங்கள் கண்களுக்குக் குளிர்ச்சி தரும் விதமாகத் தீட்டப்பட்டிருந்தன.

"இது கற்பனையில் தோன்றிய படமாக இல்லை. நேரில் நடப்பதை பார்த்து இதனை வரைந்திருக்கிறார் ஓவியர். என்ன நான் சொல்வது சரிதானே?" என்று கேட்டான்.

"நீங்கள் நினைத்தது சரியே. அந்த ஓவியத்தில் உள்ள பெண்மணி என் தாய். அந்தக் குழந்தை நானே. இதனை வரைந்த ஓவியனுக்கு என் தந்தை நூறு ஏக்கர் நிலம் பரிசாக அளித்தார். ஆனால், இப் போதோ நான் அந்த ஓவிய த்தை விற்றுப் பிழைக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப் பட்டிருக்கிறேன்," என்றான்.

"இந்த ஓவியத்திற்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். நீயே இதன் விலையைச் சொல்." என்றான் சீலன்.

"எனக்கு இதற்காக நூறு பவுன்கள் கொடுத்தால் போதும். அதைக் கொண்டு நான் முன்னுக்கு வந்துவிடுவேன்," என்றான்.

"இவ்வளவு குறைவா கக் கேட்கிறாயே..." என்று கேட்டான் சீலன். "அதற்கு மேல் நான் கேட்கமாடடேன்" என்றான் சக்தி. நூறு பவுன் களைக் கொடுத்து அனுப்பி னான் சீலன்.


அன்று மாலை சீலன், தான் வாங்கிய ஓவியத்தை மன்னனிடம் காட்டினான். "ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது. இதை எனக் குக் கொடுத்துவிடு," என்றான் மன்னன்.

"நான்தான் இந்த மாதிரி பொருள்களை யாருக்கும் கொடுக்கமாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமே. நீங்கள் கேட்டும் பயனில்லை!" என்று கூறிவிட்டான்.

சில வருடங்கள் சென்றன. ஒருநாள் சீலன் மன்னனுடன் பேசிக் கொண்டிருக்கையில் அங்கு வந்தான் சக்தி. அவனை அன்புடன் வரவேற்று மன்ன னுக்கும் அறிமுகம் செய்து வைத்தான் சீலன்.

"நீ எப்படி இருக்கிறாய்?" என்று விசாரித்தான் சீலன்.

"ஐயா! நீங்கள் கொடுத்த நூறு பவுன் களைக்கொண்டு வியாபாரம் செய்யத் தொடங்கி இப்போது உயர்நிலையில் இருக்கிறேன். உங்களி டம் ஒரு உதவியை நாடியே இப்போது வந்திருக்கிறேன்," என்றான்.



"என்ன வேண்டும்?"

"நான் அந்த ஓவியத்தைத் தங்களுக்கு விற்ற நாளிலிருந்து எனக்கு மன நிம்மதியே இல்லை. தயவுசெய்து அதை நீங்கள் எனக்குத் திருப்பிக் கொடுத்து விடுங்கள். அதற்காக நீங்கள் என்ன கேட்டாலும் நான் கொடுக்கிறேன்," என்றான்.

சக்தியின் மனநிலை அவனுக்கு புரிந்தது. ஆனால், மன்னனோ, தான் கேட்டும் அந்த ஓவியத்தைக் கொடுக்க முடியாது என்று கூறிய சீலன் என்ன செய்யப்போகிறான் என்று கூர்ந்து கவனிக்கலானான்.

"நான் ஒருமுறை ஒரு பொருளை வாங்கி விட்டால் அதை யாருக்கும் கொடுக்கமாட்டேன். இது என் கொள்கை," என்றான்.

"என்தாயின் மீது வைத்துள்ள பாசத்தால்தான் அந்த ஓவியத்தைக் கொடுக்கும்படிக் கேட்கிறேன். எனக்காக உங்கள் கொள்கையைக் கொஞ்சம் தளர்த்துங்கள்," என்று வேண்டினான்.

அவனுக்கு எப்படி உதவலாம் என யோசித்த சீலன், "சக்தி நீ உன் தாயின் மீது எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறாய் என்பது தெரிகிறது. அதனால் உனக்கு ஒரு வாய்ப்பு அளிக்கிறேன். நான் ஓவியக் கலையில் ஓரளவு பயிற்சி பெற்றவன் என்பது உனக்கும் மற்றவர்களுக்கும் தெரியும்.

"அதனால் நீ கொடுத்த ஓவியம் போலவே நான் மற்றொரு ஓவியம் தீட்டுகிறேன். இதற்கு ஒருவார காலம் பிடிக்கும். இரண்டு ஓவியங்களில் எது உனது ஓவியம் என்று கண்டு பிடித்து, உன் ஓவியத்தை எடுத்துச் செல். இந்தப் பரீட்சைக்கு நம் மன்னரே நடுவர்!" என்றான். சக்தியும் அதற்குச் சம்மதித்தான்.

சீலன் ஒருவார காலத்தில் சக்தி கொடுத்த ஓவியம் போல மற்றொரு ஓவியதை வரைந்துவிட்டான். இரு ஓவியங்களையும் அவன் குறித்த நாளன்று மன்னன் முன் கொண்டு போய் வைத்தான். அதேநாளில் அங்கு வந்தான் சக்தி.

அந்த இரு ஓவியங்களையும் பார்த்துவிட்டு, தான் சீலனுக்கு விற்ற ஓவியம் எது என்பதைக் கண்டு பிடித்துக் காட்டினான்.

"சக்தி! நீ வென்றுவிட்டாய். அதுதான் நீ எனக்கு விற்ற ஓவியம். அதனை நீ எடுத்துக் கொண்டு போகலாம்," என்றான்.

மன்னனும் அந்த இரு ஓவியங்களையும மாறி மாறிப் பார்த்துவிட்டு, "இரண்டு ஓவியங்களும் ஒன்று போலத்தானே உள்ளன. எப்படி ஓவியத்தைக் கண்டுபிடித்தாய்?" என்று கேட்டான்.

"அரசே! சீலன் மிகச் சிறந்த ஓவியர் என்பதில் சந்தேகமே இல்லை. அவர் எவ்வளவு கூர்ந்து கவனித்து ஓவியம் தீட்டி இருக்கிறார் என்பதற்கு இந்த ஓவியத்தில் என் தாயின் இடது காதின் ஓரமாக உள்ள சிறு மச்சத்தைக்கூட ஓவியத்தில் தீட்டி இருப்பதை எடுத்துக் காட்டலாம்.

"நான் விற்ற படத்தில் என் தாயாரின் மூக்குத்திக் கல் நீல நிறத்தில் உள்ளது. ஆனால், சீலன் தீட்டிய ஓவியத்தில் அது சிவப்பு நிறத்தில் உள்ளது. இந்த சிறு வித்தியாசத்தைக் கொண்டு என் ஓவியம் எது என்று கண்டு கொண்டேன்" என்று கூறி அவர்களை வணங்கிவிட்டுத் தன் ஓவியத்தை எடுத்துக் கொண்டு சென்றான்.

"சீலா... நீ ஏன் தவறு செய்தாய் என்பது சக்திக்கு புரியாமல் இருக்கலாம். ஆனால், எனக்குத் தெரியும். தாய் மீது அன்பு கொண்டு சக்தி படத்தை கேட்டதும் உனக்கு அவன் மீது இரக்கம் வந்துவிட்டது. அதே சமயம் தவறு செய்வதுபோல் செய்து சக்தியிடம் படத்தை கொடுத்து விட்டாய். உன்னுடைய திறமையை பாராட்டுகிறேன்!" என்றான்.




- 1227-போலந்து இளவரசன் முதலாம் லெஸ்செக் படுகொலை செய்யப்பட்டான்.
- 1248-காஸ்டிலின் மூன்றாம் பேர்டினண்ட் மன்னனின் படையினர் செவில் நகரைக் கைப் பற்றினர்.
- 1499-பிரித்தானியாவின் அரசாட்சிக்கு உரிமை கோரிய பேர்க்கின் வோர்பெக் பிரித்தானியக் கோபுரத்தில் இருந்து தப்பியோட முயல்கையில் கைதாகி தூக்கிலிடப்பட்டான். இவர் 1499 இல் நான்காம் எட்வேர்ட்டின் மகன் என உரிமை கோரி பிரித்தானியாவை முற்றுகையிட்டான்.
- 1867- இரண்டு ஐரியர்களைச் சிறையிலிருந்து வெளியேற உதவியமைக்காக மூன்று ஐரியத் தேசியவாதிகள் பிரித்தானியா, மாக்செஸ்டரில் தூக்கிலிடப்பட்டனர்.
- 1890-நெதர்லாந்து மன்னன் மூன்றாம் வில்லியம் ஆண் வாரிசு இல்லாது இறந்தான். அவனது மகள் இளவரசி வில்ஹெல்மினா அரசியாவதற்கு ஏதுவாக சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டது.
- 1936-முதலாவது லைஃப் இதழ் வெளியிடப்பட்டது.
- 1940-இரண்டாம் உலகப்போர்: ருமேனியா அச்சு அணி நாடுகளுடன் இணைந்தது.
- 1955- கொக்கோஸ் தீவுகள் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு கைமாறியது.
- 1971-மக்கள் சீனக் குடியரசின் பிரதிநிதிகள் முதற் தடவையாக ஐக்கிய நாடுகள் அவையில் சீனாவுக்காகப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.
- 1978-இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் சூறாவளி தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.
- 1979-மவுண்ட்பேட்டன் பிரவுவைக் கொலை செய்த குற்றத்துக்காக ஐரிஸ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த தோமஸ் மக்மாகன் என்பவருக்கு ட்ப்ளினில் ஆயுள் தண்டனை வழங்கப் பட்டது.
- 1998-கம்போடியத் தலைவர் ஹூன் சென்னுக்கும் இளவரசர் நொரொடோம் ரனாரிட்டுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 2003- வாரக்கணக்கில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களை அடுத்து ஜோர்ஜிய ஜனாதிபதி எட்வேட் ஷெவர் நாட்சே பதவி விலகினார்.
- 2005-லைபீரியாவின் தலைவராக எலன் ஜான்சன் சல்லீஃப் தெரிவு செய்யப்பட்டார். ஆபிரிக்க நாடொன்றின் முதலாவது பெண் தலைவர் இவராவார்.
- 2007-இந்தியாவின் மாவட்டம் உருவாக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1921-சுரதா, கவிஞர் (இ.2006)
- 1926-சத்திய சாயி பாபா, இந்திய ஆன்மீகவாதி (இ.2011)

### இறப்புக்கள்

- 19713-வி.அ.அழகக்கோன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர்.
- 1990-ருவால் டால், ஆங்கில எழுத்தாளர் (பி.1916)

### அச்சு நாடுகள்



அச்சு அணி நாடுகள் என்பவை இரண்டாம் உலகப் போரின் போது நட்பு அணி நாடுகளை எதிர்த்த நாடுகள் ஆகும். நாஜி ஜெர்மனி, பாசிச இத்தாலி மற்றும் ஜப்பான் அரசு ஆகியவை முதன்மையான அச்சு நாடுகள் ஆகும். இந்நாடுகள் ஒரு நேரத்தில் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஆசிய-பசுபிக் ஆகியவற்றின் பெரும்பாலான பகுதிகளில் மேலோங்கியிருந்தனர். எனினும் போரின் முடிவில் அச்சு அணி நாடுகள் பெரும் தோல்வியை தழுவின.

இரண்டாம் உலகப்போரின் நட்பு அணி நாடுகள் அல்லது நேச நாடுகள் என்பவை இரண்டாம் உலகப்போரின் போது அச்சு அணி நாடுகளை எதிர்த்த நாடுகளைக் குறிக்கும். நட்பு அணி நாடுகளின் வெற்றியை அடுத்து இப்போர் முடிவுக்கு வந்தது. ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் ஆகியவை நட்பு அணி நாடுகளில் இருந்த முதன்மையான நாடுகள் ஆகும்.

# வாழ்வின் அழகிய தருணங்கள்!



ஆன்மீகம் 46

### குழப்பமும் நல்லதற்கே!

கற்றுக் கொள்ளுதல் என்பது இயற்கையாகவே மனிதனிடம் இருக்கும் குணம். இதுவரை தெரியாத ஒன்றைக் கற்றுக்கொள்ளும்போது, அது உங்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும். அப்படி இருக்கையில், கற்றுக் கொள்ளுதல் என்பது குழந்தைகளைத் துன்பத்தில் ஆழ்த்தினால், எப்படி கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்.

ஒவ்வொரு சுற்றுப் புறமும் உங்களுக்கு எதிராக மாறும் வலிமை கொண்டதென நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அமைதியான மகிழ்ச்சியான சுற்றுப்புறத்தை நீங்கள் உருவாக்கத் தவறிவிட்டால், ஒவ்வொரு நட்பும், சுற்றமும், வீடும், நாடும், நகரமும் உங்களுக்கு எதிரான ஒரு போர்க்களமாக மாறக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

எங்கே போதனைகள் இருக்கிறதோ, அங்கே வழிபடுதலும் வணங்குதலும்தான் இருக்கிறது. எங்கே வழிமுறைகள் இருக்கிறதோ, அங்கேதான் மாற்றங்கள் நிகழச் சாத்தியம் இருக்கிறது.

உங்கள் வாழ்வுச் சூழலில் குழப்பம் இருந்தால், அதை நல்லது எனச் சொல்வேன். குழப்பத்தின் அடிப்படை எதுவென அலசக் கிடைத்த அரிய வாய்ப்பு அது. உண்மையில் நீங்கள் யார் என்பதை விடுத்து, வேறுவிதமாக கற்பனை செய்திருக்கும் அறியாமைதான் உங்கள் குழப்பத்தின் ஆணிவேர். ஆகவே, என்னிடம் அச்சம் கொண்டீர்கள் என்றால், அதை முழுமையாக, சாதகமாக பயன்படுத்தி, பிரச்சினையின் மையத்துக்கு உங்களை அழைத்துச் செல்வேன்.

### சிறு விடயங்களுக்கு பெரும் போராட்டம்

மனிதமனம் பெரும்பாலும் போராட்டத்திலேயே இருக்கிறது. பலரும் சின்னச்சின்ன விடயங்களுக்குக் கூட போராடிக் கொண்டிருக்கிறார்கள். மனதில் துயரம் இருக்கிற வரைக்கும் இந்த போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

## உள்ளத்தில் ஆனந்தம் நிலைத்திருக்குமானால் புறவுலக வாழ்வின் இன்ப துன்பங்கள் நம்மை சிறிதும் பாதிப்பதில்லை



வாழக்கையை இயல்பாக அதன் எல்லாத் தன்மைகளையும் ஏற்றுக் கொண்டால் ஏற்றத் தாழ்வுகள் மறைந்துவிடும். ஆனந்தம் மட்டுமே அப்போது நிலைத்திருக்கும். உள்ளத்தில் ஆனந்தம் நிலைத்திருக்குமானால் புறவுலக வாழ்வின் இன்பதுன்பங்கள் நம்மை சிறிதும் பாதிப்பதில்லை.

நாம் சில விடயங்களை வேண்டும், வேண்டாம் என்று சொல்லும் போதே நம் மனதில் சில எதிர்பார்ப்புகள் தொடங்கிவிடுகின்றன. எதிர்பார்ப்பு உண்டாகும்போது வாழ்வில் விருப்பு, வெறுப்புக்கள் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

மனிதர்கள் அன்பாகவும் ஆனந்தமாகவும் இருப்பது என்பது என்றோ எப்போதோ நிகழும் அனுபவம் என்று எண்ணுகிறார்கள். அதற்கான வாய்ப்பு விநாடிக்கு விநாடி இருக்கிறது. அன்பும், ஆனந்தமும் நிலையான உணர்வாக நம்மிடத்தில் இருக்க வேண்டியவையாகும்.

ஒரு மனிதர் தான் எண்ணுவது சரி என்று உணர்ந்து, மிக அமைதியாக இருப்பாரேயானால் அவர் இறைத் தன்மைக்கு மிக நெருக்கமானவர். அவர் வீண்விவாதங்கள், தேவையற்ற வாக்குவாதங்கள் போன்றவற்றில் சிறிதும் ஈடுபடமாட்டார்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# விடுதலைப் புலிகளின் மீறல்களைக் காரணம் காட்டி, இலங்கை அரசு தனது குற்றங்களை மறைக்க முடியாது!

## -கலும் மக்ரே-

...தமிழீழ விடுதலைப் புலிகளால் இழைக்கப்பட்ட மீறல்களை நான் ஒரு போதும நியாயப்படுத்தவில்லை. ஆனால், இலங்கை அரசாங்கமானது தான் ஜனநாயக ஆட்சியை நடாத்துவதாகவும், அனைத்துலக உயர்மட்டச் சட்டங்களை மதிப்பதாகவும் கூறுகின்றது.

நான் இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக விசாரணையை முன்னெடுப்பதால் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என எனக்கு முத்திரை குத்தப்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தானது. நான் கொழும்பு வீதிகளில் தனியாக நடந்து செல்ல முடியாதுள்ளது. இது பாதுகாப்பற்றது. கிளிநொச்சி நோக்கி நான் தொடரூந்தில் பயணித் போது பாதுகாப்பற்ற தன்மையை நான் உணர்ந்தேன். இது மக்களின் குற்றம் அன்று. அவர்களுக்கு கூறப்படுகின்ற மிகப் பெரிய பொய்யை மக்கள் நம்புகின்றனர்.

**கேள்வி:** எதுஎவ்வாறிருப்பினும், நீங்கள் உங்களது ஆவணங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளால் இழைக்கப்பட்ட மீறல்களைவிட இலங்கை இராணுவத்தால் இழைக்கப்பட்ட மீறல்களையே அதிகம் முதன்மைப்படுத்தியுள்ளீர்கள். இந்நிலையில் இவ்விரு தரப்புக்களாலும் இழைக்கப்பட்ட குற்றங்களை நீங்கள் சமமான பார்வையுடன் நோக்கியுள்ளீர்கள் என நீங்கள் எவ்வாறு கூறமுடியும்?

**பதில்:** அனைத்துலகச் சட்டங்களை மதித்து நடக்கின்ற ஜனநாயக அரசாங்கம் எனத் தன்னைத் தானே கூறிக்கொள்ளும் இலங்கை அரசாங்கமானது பெருமளவான மனித அழிவுக்கு காரணமாகியுள்ளது. இந்த அரசாங்கம் தொடர்பாகவே நாம் விசாரணை செய்கிறோம். இந்த மக்களா அல்லது அந்த மக்களா பெருமளவில் கொல்லப்பட்டனர் என்பது தொடர்பாக நான் விவாதிக்க விரும்பவில்லை. ஆனால், பெருமளவான மீறல்களைப் புரிந்துள்ள இலங்கை அரசாங்கத்தின் சில குறிப்பிடத்தக்க குற்றங்களை நாம் விசாரணை செய்ய வேண்டும். இலங்கை அரசாங்கத்தை விட தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் மோசமானவர்கள் எனக் கூறுவது போதுமானதல்ல.


**கேள்வி:** இந்த ஆவணங்களைத் தயாரிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் புலம் பெயர் ஆதரவாளர்கள் உங்களுக்கு நிதி செலுத்தியுள்ளார்களா?

**பதில்:** சனல் 04 திறந்த கணக்கைக் கொண்டுள்ள ஒரு தொலைக்காட்சி நிறுவனமாகும். இது ஒரு நம்பகமான, தெளிவான நிறுவனமாகும். எவரேனும் இதனை ஆய்வு செய்து கண்காணிக்க முடியும். நாங்கள் முதலாவது காணொலியைத் தயாரித்த போது, இதற்கான நிதியை யார் தந்து உதவினார்கள் என்பதை குறிப்பிட்டிருந்தோம். இதற்கான நிதியானது முற்றிலும் தொண்டர் நிறுவனங்களிடமிருந்தே கிடைக்கப்பெற்றன. தமிழ் மக்களிடமிருந்து நாம் ஒரு சல்லிக் காசுகூடப் பெறவில்லை.

தற்கொலைக் குண்டுதாரிகள், தமது சொந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள், பாதுகாப்பு வலயத்தை விட்டு வெளியேற முயன்ற மக்களைத் தடுத்தவர்கள் என்றெல்லாம் விடுதலைபுலிகள் மீது நான் குற்றம் சுமத்தியுள்ள நிலையில், தம்மைப் போர்க் குற்றவாளிகள் என அறிவித்த ஒருவருக்கு அவர்கள் நிதி வழங்கியிருக்க முடியுமா என்பதை கற்பனை செய்து பாருங்கள். இது முட்டாள்தனமானது.

**கேள்வி:** ஆனால், புலம்பெயர் தமிழ் மக்களிடமிருந்து பெருமளவான நிதியைச் சேகரிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு நீங்கள் இதனைப் பயன்படுத்தினீர்களா?

**பதில்:** இந்த ஆவணப் படத்தைத் தயாரிப்பதற்கான நிதியைவிட இதனால் மேலதிகமாக நான் எவ்வளவு நிதியைப் பெற்றேன் என்பதை எனது மனைவியிடம் கேட்டுப் பாருங்கள். எனது மனைவி இந்த ஆவணத்தைத் தயாரித்தது தொடர்பில் என்னுடன் கோபமாக உள்ளார். இதனை நீங்கள் ஏன் செய்தீர்கள் என என்னிடம் கேட்கிறார். நான்



ஒரு வெற்றிகரமான திரைப்பட இயக்குநர். ஏனைய திரைப்படங்களை இயக்குவதன் மூலம் நான் நிறையப் பணம் சம்பாதிக்க முடியும். அது மிகவும் இலகுவானதும் ஆபத்துக் குறைந்ததாகவும் இருக்கும். ஊடகவியலாளன் என்ற வகையில், நான் விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகளைக் கண்டறிந்துள்ளேன். நான் கண்டறிந்த உண்மை பொய் எனக் கூறப்படுகிறது. சாட்சிகள் பொய் எனக் கூறப்படுகின்றன. நான் விடுதலைப்புலிகளின் கூலிப்படையாக இருப்பதன் மூலம் ஊடகத்துறையைப் பாதுகாக்க வேண்டியதில்லை.

**கேள்வி:** நீங்கள் எதையும் எழுதலாம் அல்லது தயாரிக்கலாம் ஆனால் ஒருவருக்காக நீங்கள் பரப்புரை செய்யக் கூடாது என்பது ஊடகத்திறையின் பண்புகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. நீங்கள் நான்கு ஆவணங்களைத் தயாரித்துள்ளீர்கள். அதாவது அடுத்த ஆவணத்தை தயாரிக்க உள்ளீர்கள். நீங்கள் எதனைச் செய்துள்ளீர்கள் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே தற்போது இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளீர்கள். இந்தக் கருத்துச் சரியானதா?

**பதில்:** இன்னொரு ஆவணத்தைத் தயாரிப்பதற்கான திட்டத்தை நான் இதுவரை கொண்டிருக்கவில்லை. பிறிதொரு ஆவணத் திரைப்படத்தைத் தயாரிப்பதற்கான சாட்சியங்களை நான் பெற்றால் அதனைச் செய்வேன். பாதுகாப்பு வலயம் என்கின்ற ஆவணப் படமானது ஒரு சிறப்புத் திரைப்படமாகும். இலங்கையின் கொலைக் களங்கள் தொலைக்காட்சிக்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்களாகும். எவ்வாறெனினும், சிறப்புத் திரைப்படம் என்பது தொலைக் காட்சிக்கான ஆவணப்படத்திலிருந்து சிறிது வேறுபட்டதாகும். இது திரையரங்குகளில் பார்ப்பதற்காக ஒன்றரை மணித்தியால நீளமான காட்சிகளைக் கொண்டு தயாரிக்கப் பட்டுள்ளது. ஆகவே இது ஒரு தரமான திரைப் படமாகும். இவ்வாறான திரைப்படங்களைத் தயாரிக்கும் எந்தவொரு தயாரிப்பாளரும் இதனைத் திரையிடுவதற்காக சுற்றுலாக்கள் செல்வது வழமையானதாகும்.

**கேள்வி:** நீங்கள் உண்மையான, நம்பத்தகுந்த காணொலிப் பதிவுகளைக் கொண்டிருந்தால், ஏன் இவற்றை ஆதாரமாகக் கொண்டு இலங்கைக்கு எதிராக அனைத்துலக சமூகம் நடவடிக்கை எடுக்கவில்லை? எமது பார்வையில் உங்களது பதிவுகள் உண்மையற்றவை என்பது தெளிவாகிறது.

**பதில்:** நாங்கள் மட்டுமல்ல, இந்தப் பதிவுகள் போலியற்றவை என்பதை அது சார்ந்த வல்லுநர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். நாஙகள் இந்தப் பதிவுகளில் சிலவற்றை சுயாதீன தடயவியல் வல்லுனர்களுக்கு அனுப்பி வைத்தோம். இதனை அவர்கள் நம்பத்தகுந்தவை என உறுதிப்படுத்தியுள்ளனர். பல தொடர்ச்சியான ஆய்வுகளின் பின்னரே இவை உண்மையானவை என உறுதிப் படுத்தப்பட்டுள்ளன.

(தொடரும்)

# உலக மீனவர் தினத்தன்று மீனவர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

## பிரச்சினைகள் தொடர்பான மகஜரும் கையளிப்பு



உலக மீனவர் தினத்தில் மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகள், இந்திய சிறைகளில் வாடும் இலங்கை மீனவர்களின் விடுதலை மற்றும் பல்வேறு பட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மீனவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

காலை 9.30 மணியளவில் மன்னார் மீனவ கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலகத்தில் கூடிய மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து பின் பல கோரிக்கைகள் மீனவ சங்கங்களினால் முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் காலை 10 மணியளவில் மன்னார் மீனவ கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலகத்தில் இருந்து மீனவ சங்கங்களின பிரதிநிதிகள் மன்னார் பொலில் நிலைய வீதியூடாக ஊர்வலமாக சென்று மன்னார் நகரத்தை அடைந்து அதன்பின் மன்னார் மாவட்ட செயலகத்தை சென்றடைந்தனர்.

✦ இந்திய இழுவைப்படகுகளின் தொழில் ஆக்கிரமிப்பு

✦ இந்திய அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் விரைந்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தல்

✦ தென்பகுதி மீனவர்களின் வருகையால் ஏற்படும் பாதிப்புகள்

✦ தடைசெய்யப்பட்ட சிலிண்டர் தொழிலினால் ஏற்படும் பாதிப்புகள்

✦ அனர்த்தத்தின் போது பாதிக்கப்படும் மீனவர்களுக்கான இழப்பீடு வழங்கப்படாமை

✦ எரி பொருள் மானிய முத்திரை நிறுத்தத்தின் தாக்கம் என்பவற்றை முன்நிறுத்தி இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்து வருவதால் இம் மீனவர்கள் கடன் சுமைக்கும் வறுமைக்கும் சிக்குண்டு தங்கள் தொழில்களை கைவிட்டு தங்களது உயிர்களை மாய்க்கவும் அல்லது நாட்டைவிட்டு அயல் நாட்டுக்கு இடம்பெயர்ந்துசெல்லவும் வழிவகுக்கி ன்றது. எனவே இவர்களின் இந் நியாயமான கோரிக்கைக்கு தீர்வினை வழங்குமாறு மனனார்மாவட்ட மீனவ சமூகம் சார்பாக கேட்டு நிற்கின்றோம் என தெரிவித்து மகஜர் கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரை மாவட்ட மீனவ கூட்டுறவு சமாசங்களின் தலைவர் ஆலம், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ஸ்டான்லி டி மெல் மற்றும் கடற்றொழில் பிரதி பணிப்பாளர் மிராண்டாவிடம் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட மேலதிக அர சாங்க அதிபர் குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்தார். இந்த மகஜரின் பிரதிகள் வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன். வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் டெனிஸ்வரன், மன்னார் கடற்றொழில் திணைக்கள உதவி கடற்றொழில் பணிப்பாளர், மன்னார் கூட்டுறவு திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், மன்னார் மாவட்ட அனைத்து ஊடகவியலாளர்கள், நீர் கொழும்பு தேசிய மீனவர் ஒத்துழைப்பு பேரவை அமைப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ம)

## விவசாயிகளுக்கு குளத்துநீரை வழங்குவதில் பாரபட்சம்

(கிளிநொச்சி)



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள புதுமுறிப்பு குளத்தின் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் நீர்வரி இடாப்பில் இடம் பெற்றுள்ள சிறு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அண்மைக்காலத்தில் பருவமழை இல்லாமையால் விதைப்பு செய்த நெற் பயிர்களுக்கு களைகளுக்குரிய மருந்துகளை விசிறிவிட்டு வானத்தை அண்ணார்ந்து பார்த்தவாறு இவ் விவசாயிகள் உள்ளனர்.

இந்த புதுமுறிப்பு குளத்தில் உள்ள நீர் அத்துமீறி காணிகளுக்கும் நீர்வரி இடாப்பில் பதிவில் இல்லாத ஏனைய இடங்களுக்கும் இக் குளத்திற்கு பொறுப்பாகவுள்ளவர் அனுசரணையுடன் வழங்கப்பட்டு வருவதாகவும் நீர்வரி இடாப்பில் பதிவு உள்ள சிவநகர் விவசாயிகள் இந்த நீரைப் பாய்ச்ச முடியாது மிகவும் கஷ்ட நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னதாகவே இந்தப் பகுதியில் உள்ள குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்து தர வேண்டுமென நலன்விரும்பிகளால் வடமாகாண விவசாய கால்நடை அமைச்சருக்கு நேரடியாகவே கடிதம் வழங்கப்பட்டுள்ள போதிலும் எவ்வித நடவடிக்கைகளும் இது தொடர்பில் அவர்களால் எடுக்கப்படவில்லை.

எனவே, திணைக்களங்கள் அனைத்திற்கும் பொறுப்பான அரச அதிபர் தமது செயலக அலுவலர்களை இப்பகுதிக்கு அனுப்பி நேரடியாக பார்வையிடச் செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலனுக்கு உடனடியாக உதவ வேண்டுமென மிகவும் விநயமாக வேண்டுகோள் விடுக்கின்றனர். (ம-254)

## பிரதான போக்குவரத்துப் பாதை பொதுமக்களால் புனரமைப்பு செய்யப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை

(மல்லாவி)



மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கான பிரதான போக்குவரத்து பாதைகள் அனைத்தும் நிரந்தர புனரமைப்புக்கு உட்படுத்தப்படாமையினால் பேருந்து சேவை உட்பட அனைத்து போக்குவரத்து சேவைகளும் முற்றாக பாதிப்படைந்துள்ளன.

பிரதான போக்குவரத்து பாதையையாவது உடனடியாக புனரமைத்ததருமாறு பிரதேச சபையினால் மாவட்ட திணைக்களங்கள், மாகாண திணைக்களங்கள், அபிவிருத்தி குழுவினரிடமும் கடந்தகாலங்களில் விடப்பட்ட கோரிக்கைகள் கருத்தில் எடுக்கப்படவில்லை. பல மில்லியன்கணக்கான பணம் வடமாகாணத்தில் செலவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் மாந்தை கிழக்கு பிரதேசம் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கரும்புள்ளியான், பாண்டியன்குளம் பிரதேசமக்களும் பிரதேசசபையும் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக பாண்டியன்குளம், மல்லாவி நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான இணைப்பு வீதி கரும்புள்ளியான் பிரதேசத்தில் புனரமைக்கப்படுவதற்கு இந்த கரும்புள்ளியான் பாண்டியன்குளஉழவியந்திர உரிமையாளர்களும் பொதுமக்களும் வாகன உதவியையும் பண உதவியையும் புரிந்திருந்தனர்.

இவ்வீதி புனரமைப்புக்காக பயன்படுத்தப்பட்ட கனரக வாகனச் செலவை மாந்தை கிழக்கு பிரதேசசபை உபதலைவர் சி.செந்தூரன் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கியிருந்தார். (ம-15)

## தேசிய வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(பூநகரி)

பூநகரி பிரதேசசபையின் கீழுள்ள பல்வராயன்கட்டு பொதுநூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**முன்பள்ளி சிறுவர்களுக்கான கதை சொல்லும் போட்டி**

ச.சாளினி (முழங்காவில் கலைமகள் முன்பள்ளி), க.கயல்விழி (ஜெயபுரம் அன்னை திரேசா முன்பள்ளி), பி. பிப்சிகா (கிராஞ்சி ஐக்கியம் முன்ப்ள்ளி)

**ஆரம்பப் பிரிவு- தரம் 01-02**

**திருக்குறள்**

கமலேந்திரன் தமிழினி (கிளி/ கரியாலை நாகபடுவான் அ.த.க.பா. இல.02),அன்ரனி ஜெயக்குமார் அன்ரனி டொறிங்டன் (கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயம்), மகேஸ்வரன் மதுஷா (கிளி/கிராஞ்சி அ.த.க.பா)

**ஆரம்பப் பிரிவு- தரம் 01-02**

**கொன்றைவேந்தன்**

சசிகரன் சங்கீர்த்தனன் (கிளி/கரியாலை நாகபடுவான் அ.த.க பா. இல.03), கேதீஸ்வரன் எப்சிபா (கிளி/ஜெயபுரம் ம.வி), சீலன் தமிழழகன் (கிளி/ முழங்காவில் ஆரம்பப் பாடசாலை)

**ஆரம்பப் பிரிவு- தரம் 01-02**

**ஆத்திசூடி**

சந்திரகுமார் டினுர்சன் (கிளி/ முழங்காவில் ஆரம்பப் பாடசாலை), இசைப்பிரியா மகேந்திர சர்மா (கிளி/கரியாலை நாகபடுவான் அ.த.க பா. இல.02), பரமநாதன் கயானந்த வதனி (கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம்)

**ஆரம்பப் பிரிவு- தரம் 03-05**

**வாசிப்பு**

மகேந்திரலிங்கம் பவசாளி (கிளி/கிராஞ்சி அ.த.க.பா),குபெந்திரன் துஷாமினி (கிளி/ முழங்காவில் ஆரம்பப் பாடசாலை),சசிகுமார் நேசன்(கிளி/கரியாலை நாகபடுவான் அ.த.க பா. இல.02)

**பேச்சு**

சற்குணநாதன் டிலக்சி (கிளி/ முழங்கா வில் ஆரம்பப் பாடசாலை),இராஜகேகர் விதுஷா (கிளி/ முழங்காவில் ஆரம்பப் பாடசாலை), சிவநாதன் தமிழ்விழி (கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம்)

**மேற்பிரிவு தரம் 11-12**

**கவிதை**

செல்வராசா தர்சிகா (கிளி/ஜெயபுரம் ம.வி), செல்லத்துரை டனுஜா (கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்), நவசிவம் யாழினி (கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்)

**மேற்பிரிவு தரம் 11-12**

**சிறுகதை**

ஏசியாழின் யுக்சினா (கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்), வசந்தகுமார் குசேந்தினி (கிளி/ஜெயபுரம் ம.வி), விக்னேஸ்வரன் தமிழரசி (கிளி/ஜெயபுரம் ம.வி)

**வாசகர்களுக்கான பொது அறிவுத் திறன்போட்டி முடிவுகள்**

மணிசேகரம் சிந்துஜன் ( சோலை ), மகேந்திரம் தர்சிகா (ஜெய புரம்), குலசேகரம் சுதர்சினி (சோலை) *(தொடரும்)*

(ம-84)




## பள்ளிக்குடா கடற்கரை வீதி பாவனைக்கு விடப்பட்டுள்ளது

(பூநகரி)

மீன்பிடிக்கு பிரதான இடமான பள்ளிக்குடா கடலுக்குச் செல்லும் ஆயிரத்து 200 மீற்றர் கடற்கரை வீதியின் பனரமைப்பு வேலைகள் சோ ஆ நிறுவன நிதி ஒதுக்கீட்டில் நடைபெற்று முடிந்து மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்களின் நன்மைகருதி 7 இலட்சம் ரூபா செலவில் இவ்வீதி அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(ம-84)

# மார்ச் மாத ஐ.நா. கூட்டத்தொடரில் அரசாங்கத்திற்கு பலத்த சவால்

## தமிழ்க் கூட்டமைப்பு எச்சரிக்கை

**எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத தொடரில் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது இழைத்த மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி அனைத்துலக நாடுகளினால் தீர்மானம் நிறைவேற்றப்படும்.**

இந்த நம்பிக்கையை கனடா, அமெரிக்கா வரிசையில் தற்போது பிரிட்டனும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. எனவே, கண்துடைப்பு நாடகங்களை அரங்கேற்றி வரும் இலங்கை அரசு, மார்ச் மாதம் ஐ.நாவில் பலத்த சவால்களை எதிர்கொள்ளப் போகின்றது என்றும் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழருக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டுமெனில், போர்க்குற்றங்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணை நடத்தப்பட்டே ஆகவேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. பொதுநலவாய மாநாட்டுக்காக இலங்கை வந்து சென்ற பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இலங்கை அரசு, தன் மீதான போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் ஆரம்பிக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் இதில் அனைத்துலகத் தலையீடு இடம்பெறும் என்றும் பிரிட்டன் பிரதமர் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரிட்டன் பிரதமரின் இந்தக் கருத்து தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை நேற்று முன்தினம் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிராக இரண்டு தீர்மானங்கள் சர்வதேச நாடுகளின் பேராதரவுடன் நிறைவேற்றப்பட்டன. இந்தத் தீர்மானங்களையும் இலங்கை அரசு கவனத்தில் எடுக்கவில்லை.

கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை முள்ளிவாய்க்கால் வரை சென்று யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் நிலைமைகளைக் கேட்டறிந்துவிட்டு சென்றார். அதன் பின்னர் கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவர் ஐ.நாவில் மார்ச் மாதம் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையிலும் சர்வதேச விசாரணையை மீண்டும் வலியுறுத்தி இலங்கை அரசுக்கு பாரிய அழுத்தங்களைக் கொடுக்கவுள்ளார்.

பிரதமர் கமரூன் இலங்கையிலிருந்து செல்லும் முன்னரே சர்வதேச போர்க்குற்ற விசாரணை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்வுக்கு எச்சரிக்கை விடுத்தும் இருந்தார். இந்நிலையில், பிரிட்டன் நாடாளுமன்றிலும் அவர், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசினால் நடத்தப்பட்ட விசாரணைகளில் பிரிட்டனுக்குத் திருப்தி இல்லை என்றும் எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணையை இலங்கை அரசு நடத்தாவிட்டால், சர்வதேச விசாரணைக்கு முகம்கொடுக்க வேண்டி வரும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார். உண்மையில், மார்ச் மாதத்துக்குள் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுயாதீன விசார்ணை எதனையும் இலங்கை அரசு மேற்கொள்ளாது. ஏனெனில், கடந்த கால செயற் பாடுகளில் இதனை அரசு நிரூபித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழருக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்கவேண்டுமெனில், போர்க்குற்றங்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணை நடத்தப்பட்டே ஆகவேண்டும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமே இல்லை என்றார். (அ-2)

## முன்பள்ளியின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை முன்பள்ளியின் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் முன்பள்ளியின் நல்லூர் பண்டார மாளிகை வளவில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, சிறப்பு விருந் தினர்களாக ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் ஜெயா தம்பையா, யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் திருமதி சறோஜா சிவச்சந்திரன், யாழ்ப்பாண கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

## ஈரானின் நீர்மூழ்கி கப்பல் இலங்கை வருகிறது

ஈரானின் நீர்மூழ்கி கப்பல் ஒன்று இலங்கை வருவதுடன் மும்பைக்கும் பயணிக்கவுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை இந்த நீர்மூழ்கி கப்பல் இலங்கையை வந்தடையவுள்ளது. ஈரானிய கடற் படையின் 28ஆவது புளோ டில்டா என்ற நீர்மூழ்கி கப்பலே இலங்கைக்கு வரவுள்ளது.

இந்நிலையில் குறித்த கப்பல் இலங்கை உட்பட்ட நாடுகளுக்கு செல்வதன் காரணம் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

இந்த நீர்மூழ்கி கப்பல் இலங்கைக்கு வரும்போது அதனுடன் அப்பாஸ் ஹெலிகொப்டர் மற்றும் அல்போர்ஸ் தாக்குதல் விமானம் ஆகியவற்றை உள்ளடக்கிய போர்க் கபபலும் அதற்கு துணையாக வரும் என ஈரானிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## வாஸிற்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல்

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன, புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவுக்கு அச்சுறுத்தல் விடுத்தமைக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், வாஸ் குணவர்தனவை எதிர்வரும் டிசெம்பர் 14 ஆம் திகதி நீதிமன்ற த்தில் ஆஜர்படுத்துமாறு உத்தர விட்டுள்ளது.

பம்பலப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகரான மொஹமட் ஷியாம் கொலை வழக்கில் வாஸ் குணவர்தன ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த கொலை வழக்கில் வாஸ் குணவர்தனவை கைது செய்த போது அவர், ஷானி அபேசேகர மற்றும் ஏனைய இரண்டு பேருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஷியாம் கொலை வழக்கு குறித்து விசாரணை நடத்தி வரும் அதிகாரிகளை அச்சுறுத்தியமை தொடர்பில் கோட்டை நீதவான் திலின கமகே கடந்த செப்டெம்பர் மாதம் வாஸ் குணவர்தனவுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கில் பிணை வழங்கிய போதே நீதவான் இந்த எச்சரிக்கை விடுத்திருந்ததுடன், விசாரணையில் ஈடுபடும் அதிகாரிகளை அச்சுறுத்தினால் பிணை இரத்துச் செய்யப்படும் என்றும் எச்சரித்திருந்தார். (அ-2)

# கசினோ சூதாட்டத்தினால் கலாசாரத்துக்கு பாதிப்பில்லை

## அமைச்சர் வீரவன்ச தெரிவிப்பு

கசினோ சூதாட்டம் இலங்கைக்கு பொருத்தமானது என தெரிவித்த அமைச்சர் விமல் வீரவன்ஸ, இதனால் நாட்டின் நாகரிகத்திற்கும் கலாசாரத்திற்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது என கூறினார். அத்துருகி ரிய விகாரை ஒன்றில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்ட வாறு குறிபபிட்டார்.

அங்கு மேலும் கூறுகையில்,

இந்நாட்களில் பெரும்பாலானவர்கள் அதிகமாக கசினோ சூதாட்டத்தை பற்றி பேசி வருகின்றனர். கோடிக்கணக்கில் பணம் புரளும் இந்த சூதாட்டத்தை வெளிநாட்டவர்களும் செல்வந்தர்களுமே விளையாட முடியும்.

கசினோ சூதாட்டம் மூலம் நாட்டின பொருளாதாரத்திற்கு உதவி கிடைத்தால் நாம் ஏன் அதனை எதிர்க்க வேண்டும்?.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவே முதலில் இலங்கையல் கசினோவை அறிமுகம் செய்து வைததார். இதனால் எதிர்காலத்தில் நாங்கள இதனை விரிவுபடுத்துவோம்.

கசினோ சூதாட்டத்தினால் நாட்டின் நாகரிகத்திற்கோ கலாசாரத்திற்கோ பாதிப்புகள் ஏற்படபோவதில்லை. நாட்டுக்கு அந்நிய செலாவணி திரண்டு வரும் என்றார். (அ-2)

# பிரி. பிரஜை கொலை விவகாரத்தில் நீதியான விசாரணை வேண்டும்

குராம் ஷேக்கின் கொலை தொடர்பில் நீதி வழங்கப்பட வேண்டும் என பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சிமன் டன்ஸ்சுக் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த கொலை தொடர்பான வழக்கு இன்னும் முடிவடையவில்லை. குராம் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற பிரசாரத்துடன் சம்பந்தப்பட்டுள்ள பரித்தானியாவை சேர்ந்த இரண்டு பலமிக்க நபர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் இளவரசர் சார்ள்ஸ ஆகியோர் இந்த வழக்கு குறித்து ஆர்வம் கொண்டுள்ளதுடன் இந்த கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள சட்டத்தின் படி தண்டனை வழங்கப்படுவது தாமதமாகியுள்ளமை குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

கொலை நடைபெற்று இரண்டு வருடங்களாகப் போகிறது. கொலை தொடர்பில் நீதி வழங்க தாமதிக்கப்படுவது தொடர்பில் காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

கொலைக்கான சாட்சியங்கள் உள்ளன. முழு உலகமும் என்ன நடக்க போகிறது என்பதை எதிர் பார்த்து கொண்டிருக்கின்றது.

இந்த கொலை தொடர்பில் பிரித் தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உறவுகள் பாதிக்கப்படுவது குறித்து நான் கவலையடைகின்றேன்.

நீதி வழங்கப்படுவதற்கான நீண்ட காலதாமதம் மற்றும் சாக்கு போக்குகள் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பாதித்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு முடிந்துள்ளது. இந்த நிலையில் நதிமன்றம் ஊடாக நடவடிக்கைகள் முன்னேற்றம் அடைந்து சிறந்த பெறுபேறு கிடைக்கும் என அனைவரும் நம்புகின்றனர் என்றார்.

குறித்த நபர் இலங்கையின் தங்காலை பிரதேசத்தில் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொலை செய்யப்பட்ட பிரித்தானிய சுற்றுலாப் பயணி என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)







சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சைவச் சிறுவர் இல்லத்தில் புதிய மண்டபத்தை அண்மையில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் விருந்தினர் மண்டபத்திற்குள் அழைத்து வரப்படுவதையும் தி.விஸ்வரூபன் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# கொமன்வெல்த் மாநாடு: பொல்லைக் கொடுத்து வாங்கிய அடி...



கொமன்வெல்த் மாநாட்டை நடத்தப்போய், இலங்கை அரசாங்கம் பல்வேறு சிக்கல்களில் மாட்டிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2009 இல் போர் முடிவுக்கு வந்த சில மாதங்களில் ரின்ட்டாட் அன் டுபாகோ நாட்டில் நடந்த கொமன்வெல்த் மாநாட்டில், 23 ஆவது கொமன்வெல்த் உச்சி மாநாட்டை கொழும்பில் நடத்த விருப்பம் தெரிவித்திருந்தது இலங்கை. அப்போது, அது இலங்கைக்குப்பெரும் புகழையும், உலகளாவிய அந்தஸ்தையும் தேடித்தரும் என்றும், போரினால் தமிழர் பிரச்சினையாலும் சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள கறைகளைக் கழுவிவிடும் என்றும் கணக்குப் போட்டிருந்தது அரசாங்கம். அந்தக் கற்பனை, கொழும்பில் 23 ஆவது கொமன்வெல்த் உச்சி மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை (15.11.2013) ஆரம்பமாகுவரை நீடித்தது. ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை (15.11.2013)க்கு சில நாட்களுக்கு முன்னதாகவே இது ஒரு சிக்கலான நிலைக்குள் தம்மைத் தள்ளப்போகிறது என்ற உண்மை அரசாங்கத்துக்கு விளங்கி விட்டது.

கனடா எழுப்பிய போர்க்குரலும், இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் வருகைக்கு எழுந்த எதிர்ப்பும், இந்த மாநாடு சர்ச்சைக்குரியதாக மாறப்போகிறது என்ற சமிக்ஞையை வெளிப்படுத்திவிட்டது. இலங்கை அரசாங்கம் போட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால், பிரித்தானியா செயற்படத் தொடங்கிய போது கிட்டத்தட்ட ஒட்டுமொத்த கொமன்வெல்த் மாநாட்டின் பார்வையும் அதன்மீது திரும்பிவிட்டது.

இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்கைப்போலவே, பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரூனும், மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளினதும் ஊடகங்களினதும் புலம்பெயர் தமிழர் களினதும் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

ஆனால், மாநாட்டைப் புறக்கணிக்கும் அழைப்புக்களை உறுதியாக நிராகரித்துவிட்ட கெமரூன், தனது பயணத்தை கொமன்வெல்த் மாநாட்டுக்கான பயணமாகவோ, அல்லது இலங்கையின் எழிலைத் தரிசிப்பதற்கான ஒரு சுற்றுலாப் பயணமாகவோ கருதாது, இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கான ஒரு கருவியாக மாற்றிக் கொண்டார்.

அவரது அந்த முடிவும் தற்துணிவும் இன்று பிரித்தானியப் பிரதமர் டேவிட் கொமரூனை உலகெங்கும் உள்ள தமிழர்கள் மத்தியில ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அரசியல்வாதிகளால் டேவிட் கொமரூன் ஹீரோவாகவே போற்றப்பட்டிருக்கிறார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை வ்ருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள்- இலங்கையில் கொமன்வெல்த் மாநாடு நடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ்நாட்டுத் அரசியல் தலைவர்கள்- டேவிட் கொமரூனின் பயணத்தை ஆஹா... ஓஹோ... என்று பாராட்டுகிறார்கள், கொண்டாடுகிறார்கள். அதற்குக் காரணம், டேவிட் கெமரூன்- கொமன்வெல்த் மாநாட்டைப் பயன்படுத்திக் கொண்ட விதமும், அதற்காக பிரித்தானியா வகுத்த வியூகமும்தான்.

போர்க்குற்றங்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த நான்கு மாதங்களுக்குள்- அதாவது வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர், விசாரணை நடத்தத் தவறினால், சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்ற டேவிட் கெமரூனின் எச்சரிக்கை, ஒட்டுமொத்த கொமன்வெல்த் மாநாட்டையுமே, புதிய தளத்துக்குள் கொண்டுபோய் விட்டது. அதாவது, கொமன்வெல்த் மாநாட்டின் பிரதான கருப்பொருள் எதுவாக இருந்தாலும், மாநாட்டு அரங்கங்களுக்குள் பேசப்பட்ட விடயங்கள் எதுவாக இருந்தாலும் இலங்கையின் மனித உரிமை மீறல் விவகாரமே உலகளாவிய பேச்சுக்குரிய விவகாரமாக மாறியது. இந்த மாநாட்டுக் காலகட்டத்தில் உலகளாவிய ஊடகங்கள் அனைத்துமே இதைப் பற்றித்தான் விவாதித்தன. எழுதிக் குவித்தன.

கொமன்வெல்த் மாநாட்டின் அடிப்படை அம்சங்கள், இருதரப்பு பேச்சுக்கள், வர்த்தக இணக்கப்பாடுகள், தலைவர்களின் சந்திப்புக்கள், மாநாடு நடத்தப்படும் நாட்டின் எழில், மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்தெல்லாம் விவாதிப்பதில் உலகளாவிய ஊடகங்கள் கவனம் செலுத்தவில்லை. அதற்கு மாறாக, இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் குறித்தும், இந்த மீறல்கள் பற்றிய விசாரணைகள் நடத்தப்படாதது குறித்தும், போருக்குப் பின்னர் தமிழர்கள் எதிர்கொள்ளும், ஊடகங்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்தும், பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூனின் கருத்துக்கள் குறித்தும், கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பரின் புறக்கணிப்புக் குறித்தும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வராதது குறித்தும், மொறிசியஸ் பிரதமரின் நவீன் ராம்கூலமின் புறக்கணிப்புக் குறித்துமே ஊடகங்கள் கவனம் செலுத்தின.

போர் முடிவுக்கு வந்த பின்னர், கடந்த நான்கரை ஆண்டுகளில் ஊடகங்களில் இலங்கை இந்தளவுக்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டு முதன்மைப்படுத்தப்பட்டு விமர்சிக்கப்பட்டது இதுவே முதன்முறை எனலாம்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கு எதிராக இரண்டு தீர்மானங்கள் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட போது இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து உலகளவில் செலுத்தப்பட்ட கவனத்தை விடவும் ஊடகங்களில் விமர்சிக்கப்பட்டதை விடவும், அதிகமாகவே கொமன்வெல்த் மாநாட்டின் போது விமர்சனங்களை இலங்கை எதிர்கொண்டது.

2009 இல் முடிந்து போன போரின் அவலங்கள் மறக்கப்பட்ட விவகாரமாகிவிடுமோ என்று தமிழர் தரப்பிலுள்ள பலரும் பயந்துகொண்டிருந்த சூழலில், தான் இன்று அது உலகளவில் பேசப்படும் விவகாரமாக மாற்றிவிட்டுள்ளது கொமன்வெல்த் உச்சி மாநாடு. அதற்கும் அப்பால் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச நடவடிக்கையைத் தூண்டுவதற்கான ஒரு கருவியாகவும் இந்த மாநாடு பயன்பட்டிருக்கிறது.

உண்மையில், கொமன்வெல்த் மாநாடு, கொழும்பில் நடத்தப்பட்ட நிலையில் இலங்கையின் மேன்மையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் புகழும்தான் சர்வதேச அளவில் உயர்த்திப் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். வழக்கமாக எந்தவொரு சர்வதேச மாநாடு நடத்தப்பட்டாலும் அந்த மாநாட்டை நடத்தும் நாட்டுக்கும் நாட்டின் தலைவருக்கும் உயர்ந்தளவிலான கௌரவம் அளிக்கப்படும். ஊடகங்களில் அதிகளவு முக்கியத்துவம் கிடைக்கும். ஆனால், கொழும்பில் நடந்த கொமன்வெல்த் மாநாடு அத்தகைய பெருமையை இலங்கைக்கோ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கோ கொடுத்திருக்கவில்லை. மாறாக, கடுமையான விமர்சனங்களையும் அவப் பெயர்களையும் தான் தேடிக் கொடுத்திருக்கிறது.

சில சர்வதேச ஊடகங்களில் மஹிந்த ராஜபக்ச போர்க்குற்றவாளியா- கதாநாயகனா என்ற தலைப்பில் அலசல்கள் வெளியாகின.

இத்தகையதொரு நிலையைத் தேடித் தருவதற்காக இலங்கை இந்த மாநாட்டை நடத்தியிருக்கவுமில்லை. இதை நடத்த ஆசைப்பட்டிருக்கவுமில்லை. இப்படியொரு நெருக்கடியான நிலை ஏற்படும் என்று தெரிந்திருந்தால் நிச்சயமாக இலங்கை அரசாங்கம் கொமன்வெல்த் மாநாட்டை கொழும்பில் நடத்த விரும்பியிருக்கவும் மாட்டாது. அரசாங்கம் எதிர்பார்த்தது ஒன்று. நடந்தது வேறொன்றாகிவிட்டது.

அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தையுமே கொமன்வெல்த் மாநாடு தவிடுபொடியாக்கியுள்ளது. இந்த மாநாடு இலங்கைக்கு பொருளாதார முதலீடுகளைக் கொடுக்கலாம். வர்த்தக வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கலாம். ஆனால், நற்பெயரையோ புகழையோ கொடுக்கத் தவறிவிட்டது. அதுமட்டுமன்றி அரசாங்கம் கழுவிவிட நினைத்த போரின் கறைகளையும் காயங்களையும் இந்த மாநாட்டினால் கழுவி மறைத்துவிட முடியவில்லை. இவற்றுக்கெல்லாம் அப்பால், இந்த மாநாடு, இலங்கை மீதான சர்வதேச பிடியை மேலும் இறுக்கிக் கொள்வதற்கான களமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அரசாங்கம் சற்றும் எதிர்பாராது நடந்துவிட்டது.

கொமன்வெல்த் மாநாட்டில் இலங்கைக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதற்கு போர்க்குற்ற விவகாரங்களும் மனித உரிமை மீறல் விவகாரங்களும் வாய்ப்பளித்துவிட்டன. அரசாங்கம் பெருமளவு பணத்தை வாரியிறைத்தும் உலகத் தலைவர்களை அழைத்து வந்தும் தனக்குத் தானே நெருப்பு வைத்துக் கொண்டது தான் மிச்சம்.

கே.சஞ்சயன்

# சமாதானத்திற்கான நன்மைகள் மக்களுக்கு கிடைக்கவில்லை

## ரவி எம்.பி. தெரிவிப்பு

சமாதானத்தின் நன்மைகள் மக்களுக்கு கிடைக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் சமாதானத்தின் நன்மைகள் மக்களுக்கு சென்றடையவில்லையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


இந்த அரசாங்கம் எதேச்சதிகார போக்கில் ஆட்சியை நடத்தி வருகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதன் மூலம் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மக்களை சற்று பொறுத்துக் கொள்ளுமாறு கோரிய அரசாங்கம் யுத்தம் நிறைவடைந்த நிலையிலும் நன்மைகளை வழங்க மறுத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையிலும் நாட்டின் பாதுகாப்புச் செலவுகள் பாரியளவில் உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கைச் செலவு மிகவும் உயர்வடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். நாடு பாரியளவில் கடன் சுமைகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் அபிவிருத்தி குறித்து குறிப்பிடப்படும் எனவும் உண்மையில் நாட்டின் வறிய மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



எழுத்தாளர் தெணியான் எழுதிய **குடிமைகள்** எனும் நாவல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் சட்டத்தரணி தே.ரெங்கன் வெளியீட்டுரை நிகழ்த்துவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# சர்வதேச விசாரணையை பிரிட்டன் நாடாளுமன்றம் வலியுறுத்துகிறது

## சஜித் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கட்சி பேதமின்றி அனைவரும் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானிய அரசுக்கு கடந்த கால வரலாறு ஞாபகத்தில் வந்துள்ளதுடன் இலங்கையை காலனித்துவ நாடாக மாற்ற போகிறது. ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்த நாடாக இலங்கையை மாற்ற பிரித்தானியா கட்சி பேதமின்றி செயற்பட்டு வருகிறது.

இதேபோன்று இராணுவத்தினருக்கு எதிரான சர்வதேச விசாரணைகளுக்கு ஆதரவாக இலங்கையில் உள்ள எந்த அரசியல் கட்சியும் கைகளை உயர்த்தக் கூடாது என்ற யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த யோசனை இலங்கை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். அதற்கான யோசனையை நானே நாடாளுமன்றத்தில் கொண்டு வர தயாராக இருக்கின்றேன். அதே வேளை இலங்கை ஏகாதிபத்திய சக்திகளின் கைகளுக்கு சென்று கொண்டிருக்கின்றது. ஏகாதிபத்திய அடிமையாக இலங்கையை மாற்ற சர்வதேசம் முயற்சித்து வருகிறது.

இன்று நாட்டிலும் ஏகாதிபத்தியம் இருக்கின்றது. நாட்டில் சுதந்திரமில்லை. எனினும் இப்படியான பிரச்சினைகளை நாட்டுக்குள் தீர்த்து கொள்ள வேண்டும் என்றார். (அ-2)

# நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார சுதேச வைத் தியத்துறை அமைச்சு செயலாளரின் பரிந்துரைகளுக்கமைவாக யாழ் வலயத்தின் சகல பாடசாலை அதிபர் களும் பாடசாலை சமூகத்தை ஒன்றிணைத்து நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை கடைப்பிடிக்குமாறு யாழ்ப்பாண வலய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

டெங்கு நோய் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுத்து அது தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் அவர் பாடசாலைகளின் அதிபர்களைக் கேட்டுள்ளார். (அ)

# பொதுநலவாய மாநாட்டால் கிடைத்த நன்மை என்ன?

## ஐ.நா விசாரணையா விஜித எம்.பி கேள்வி

(கொழும்பு)

அரசாங்கம் கடன் வாங்கி கல்யாணம் செய்து இறுதியில் ஆடைகளை அவிழ்த்து கொண்டதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரும் கோஷங்களுடன் நடத்தப்பட்ட பொதுநலவாய நாடுகளின் மாநாடு என்ற கண்காட்சி முடிந்து விட்டது.

கோடிக்கணக்கில் பணத்தை செலவிட்டமை. பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனின் கருத்துக்கள், ஜேம்ஸ் பாக்கர் வர்த்தக சமூகத்தின் முன் உரை நிகழ்த்தியமை, பொதுநலவாய நாடுகள் அமைப்பிற்கு சம்மந்தம் இல்லாத சீன வர்த்தகர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டமை இப்படி இம்மாநாட்டில் பல நிகழ்ந்தன.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தவிசாளர் பதவி மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்தபோதிலும் அதன் பிரித்தணியத் தலைவி இரண்டாவது எலிசபெத் மகாராணி. மாநர்ட்டின் மூலம் மீண்டும் காலனித்துவத்தை உறுதிப்படுத்துவது மட்டுமே நடந்தது.

மாநாட்டில் கண்காட்சிகளையும் அரங்கேறிய நாடகங்களையும் நாம் அதிகமாக பார்த்தோம். மாநாட்டுக்கு வந்த எந்த தலைவர்களுமே பிரித்தானியா தொடர்ந்தும் காலனித்துவ ஆதிக்கம் செலுத்துவது தவறு எனக் கூறவில்லை. பொதுநலவாய அமைப்பின் தலைமைத்துவத்தில் இருந்து பிரித்தானியா விலக வேண்டும் என்றும் எவரும் தெரிவிக்கவில்லை.

தலைமைத்துவப் பதவியை ஏற்றுக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ, காலனித்துவ தலைமைத்துவத்தை எலிசபெத் மகாராணி வைத்திருப்பது தவறு என்று கூறியிருக்க வேண்டும். அத்துடன் இலங்கையில் இருந்து கொள்ளையிடப்பட்ட வளங்களை மீண்டும் தாருங்கள் என்று கேட்பதற்கு மாநாட்டை பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பம் இருந்தது.

பல நூறு ஆண்டுகளாக நாடுகளைத் தமது பிடிக்குள் வைத்து கொண்டு கொள்ளையிட்ட பௌதீக வளங்களை மீண்டும் தருமாறு பிரித்தானியாவிடம் கேட்டிருக்கலாம்.

இலங்கையில் கொள்ளையிடப்பட்ட பௌதீக வளங்கள் இன்னமும் பிரித்தானியாவின் அருங்காட்சியகங்களில் இருக்கின்றன.

எந்தவொரு நாடுகளின் தலைவர்களும் அப்படியான கோரிக்கை விடுக்காதது கவலைக்குரிய விடயம்.

அத்துடன் மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளுக்கு பல நோக்கங்கள் இருந்தன. ஜேம்ஸ் பாக்கரின் கசினோ வர்த்தகத்தை இலங்கைக்கு கொண்டு வரவும், நாட்டில் வேலையின்மை காரணமாக சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் இலங்கையர்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கமும் அந்த நாட்டுக்கு இருந்தது.

இது பற்றி பேச்சுவார்த்தைகளை நடத்திய அந்த நாடு. இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக அங்கு செல்லும் நபர்களை பிடிப்பதற்காக இரண்டு படகுகளையும் கொடுத்தது.

மனிதவுரிமை தொடர்பான பிரச்சினையை பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பேச வேண்டும் என்ற நோக்கம் பிரித்தானியாவுக்கு இருந்தது. எனினும் பொதுநவாய நாடுகள் அமைப்பின் தலைவர் பதவியை பெறவேண்டும் என்ற நோக்கம் மட்டுமே மகிந்த ராஜபக்ஷவுக்கு இருந்தது.

அத்துடன் இந்த மாநாட்டில் முக்கிய விடயமாக அமைந்தது பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனின் கருத்துக்கள். நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட எந்த நாட்டுக்கும் உரிமையில்லை. இலங்கை சுயாதீனமான நாடு. ஜே.வி.பியின் நிலைப்பாடும் அதுதான்.

இலங்கை பிரித்தானியாவின் காலனித்துவ நாடு என்று கருதியே கமரூன் அத்தகைய கருத்துக்களை முன்வைத்துள்ளாராயின் அவருக்கு அதற்கான உரிமையில்லை.

பிரித்தானிய பிரதமர் அவ்வாறான கருத்தை தெரிவிக்கும் நிலைமைக்கு நாட்டை தள்ளியது அரசாங்கமே. அவர் சர்வதேச விசாரணை குறித்து தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி முன்வைத்தது போன்று போரில் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை அறிய உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை நியமித்திருந்தால். இப்படியான கருத்துக்களை முன்வைக்க கமரூனுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்காது.

பிரித்தானிய இளவரசர் இலங்கைக்கு வருகைதந்த போது அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளித்து விட்டு திருட்டுப் பூனைகள் போல் மறைந்திருந்த இந்த கட்சிகள் பல தற்பொழுது பொய்யாக சத்தமிட்டு வருகின்றன.

அரசாங்கம் மக்களுக்கு எதிரில் சண்டித்தனம் காட்டுகிறது. எனினும் எழுத்து மூலம் சர்வதேச விசாரணைகளுக்கும் இணங்கியுள்ளது.

போர் முடிந்த பின்னர் பான்-கீ-மூன் இலங்கைக்கு விஜயம் செய்த போது அரசாங்கத்துடன் இணைந்து கூட்டறிக்கையை வெளியிட்டார். சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக செயற்படுவோம் என அதில் கூறப்பட்டது.


அத்துடன் 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் செயற்படுவோம் என்றும் உறுதியளிக்கப்பட்டது. இந்த இணக்கப்பாடுகளின் அடிப்படையிலேயே தாருஸ்மனின் அறிக்கை வெளியிடப்பட்டது.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் இந்த இணக்கப்பாடுகளையே சுட்டிக்காட்டுகிறார்.

மனித உரிமை பேரவை இலங்கைக்கு எதிராக முன்வைத்த அறிக்கை குறித்தே இவ்வாறான இணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்வதாக இலங்கை மீண்டும் ஒருமுறை இணக்கம் வெளியிட்டு விட்டது.

அரசாங்கம் ஊடகங்களில் அறிக்கைகளை வெளியிட்டு வருவதால் பயனில்லை. அடுத்த மனித உரிமை கூட்டத்தில் நவநீதம்பிள்ளை இந்த ஆவணத்தையே சுட்டிக் காட்டுவார் என்றார். (அ-2)

# அவதார புருஷர் ஸ்ரீ சத்ய சாயி பாபா



இறைவன் மனித உரு எடுத்து 85 வருடங்கள் எமது மத்தியில் வாழ்ந்து காட்டி , போதித்து சென்றமை மனித குலத்தின் ஒரு வரப்பிரசாதமாகும். அவரோடு வாழ்ந்தவர்கள், பார்த்தவர்கள் சாயி நிறுவனங்களில் இணைந்து பணியாற்றுபவர்கள் எல்லோரும் பாக்கியம் செய்தவர்களே!

உலகெங்கிலுமுள்ள 167 நாடுகளில் ஒரு ஆன்மீக வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு மத நல்லிணக்கம் ஏற்படுத்தியவர். தத்தமது சமய உண்மைகளை உணர்த்துவித்தார். அவர் எத்தனையோ துறைகளில் வழிகாட்டியாக இருந்து போதித்து ஜெகத்குரு என்று போற்றப்படுகிறார்.

ஆயினும் இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தைப் பொறுத்த வரை அவருடைய மனித மேம்பாட்டுக் கல்வி முறையே இன்றைய காலத்தின் தேவையாகும். ஐரோப்பியர்கள் கிழக்கு நாடுகளைக் கைப்பற்றி இங்கு தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முன்பாக கீழைத்தேசங்களில் கல்வியும் ஆன்மீகமும் ஒன்றாக ஆச்சிரமங்களில் குரு மூலமாகப் போதிக்கப்பட்டு வந்தது.

அன்றும் விஞ்ஞானக் கல்வி உச்சத்தில் இருந்தது. இராமாயணம், மகா பாரதங்களில் புஸ்பக விமானம், ஒரே அம்பில் 7 மரங்களைத் துளைத்த கதை, ஒரு அம்பு பலவாகப் பிரிந்து சென்று தாக்கும் வித்தையெல்லாம் இருந்துள்ளது. அதேபோல ஆன்மீகத்துறையிலும் வேதங்கள், உப நிடதங்கள், புராணங்கள் எல்லாம் இயற்றப்பட்டன. அவை இன்றளவும் நிலைத்து நிற்கின்றன.

ஐரோப்பியர் வருகையின் பின்பு கல்வியை வளர்க்க வித்தியாலயங்கள் (பாடசாலைகள்) உருவாக்கப்பட்டன. ஆன்மீகம் வளர ஆலயங்கள் நிறுவப்பட்டு இரண்டு துறைகளும் வேறாக்கப்பட்டன. அதன் விளைவு மிக மோசமாகிவிட்டது. வித்தியாலயங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சிமையங்கள் என வளர்ந்து இன்று விண்ணைத் தொட்டுவிட்டது. சந்திரன், செவ்வாய், சூரியன் போன்ற கோள்களை ஆராயும் அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. தொலைத் தொடர்புத் துறை அபரிமிதமான வளர்ச்சி கண்டு வருகின்றது. ஆனால் மறுபுறம் ஆன்மீக வளர்ச்சிக்காக ஸ்தாபிக்கப்பட்ட ஆலயங்கள் ஆன்மாவைத் தொடவில்லை. அர்ச்சனைகள், பூசைகள், திருவிழாக்களுடன் நின்று விட்டது.

அதன் அர்த்தங்கள், விளக்கங்களும் மக்களுக்கு தெரியாத ஒரு சம்பிரதாய பூர்வமாக கிரியைகளைச் செய்து வருகின்றனர்.

இதனால் அறிவுத்துறை வளர்ச்சி யடைந்து விட்டது. ஆன்மீகத் துறை சுருங்கிவிட்டது. தனிமனிதனின் தலை (மூளை) வீங்கிவிட்டது. இதயம் சுரங்கிவிட்டது. அதன் விளைவைத்தான் இன்று நாம் அனுபவித்து வருகின்றோம்.

இரக்கம், அன்பு, புரிந்துணர்வு, தியாகம், பகிர்ந்துகொள்ளும் பண்பு இவையெல்லாம் வரண்டு விட்டது. எப்படிப்பட்டாவது பணம் சேர்க்க வேண்டும் என்ற நிலையே மனிதனில் காணப்படுகின்றது. பணம், வசதிகள், சுகபோகம் என்பவைதான் இன்றைய முக்கிய தேவைகளாக உள்ளன.

இன்று பத்திரிகைகளில் முதலிடம் பிடிக்கும் செய்திகளாக கொலை, கற்பழிப்பு, களவு, ஏமாற்று என்பவையே உள்ளன. மது விற்பனை

## பாபாவின் 88 ஆவது அவதாரதினம் இன்று

நிலையங்கள் தாராளமாக எங்கும் திறக்கப்பட்டுள்ளன. யாழ்.பல்கலைக் கழகச் சுற்றுச் சூழலிலேயே 10 இற்கும்மேற்பட்ட மது விற்பனை நிலையங்கள் இருப்பதாக பத்திரிகைச் செய்தி யொன்று தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் மது விற்பனை ஒரு நாளைக்கு சராசரியாக ஒரு கோடி ரூபா என கடந்த வாரம் தொலைக்காட்சி செய்தி விமர்சனம் ஒன்றில் கூறப்பட்டது.

இன்னும் ஒரு செய்தியில் உலகிலேயே மதுப்பிரியர்கள் உள்ள நாடுகளில் நான்காவது இடம் இலங்கைக்கு கிடைத்துள்ளது. இலங்கையிலும் யாழ்ப்பாணம் முதலாம் இடத்தில் உள்ளதாம். எமது சாதனைகள் எப்படி உள்ளது? சமய நிறுவனங்கள் ஆலய நிர்வாகிகள் இச்செய்தியைப் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. மது பாவனை அதிகரித்தால் என்ன நடக்கும் என்பதற்கு ஸ்ரீசத்திய சாயி பாபா அவர்கள் ஒரு கதை கூறினார்.

ஒரு அரசன் பிராமணனுக்கு தண்டனை கொடுக்க வேண்டிய நிலை. பிராமணன் என்பதால் சற்று யோசித்து தண்டனையை இலகுவாக்கி விரும்பிய தண்டனையை எடுத்துக் கொள்ளும்படி கூறினார்.

கொடுக்கப்பட்ட தண்டனைகள்:- வேதத்தை தூற்றுதல், பிறர் மனை விரும்பல், மது அருந்துதல். இவற்றில் ஏதாவதொன்றைச் செய்யும் படி உத்தரவிட்டான் அரசன். பிராமணன் யோசித்தான். வேதத்தை பழிப்பது கூடாது. பிறர் மனை விரும்புவது அவமானம் தரக்கூடியது. மது அருந்துதல் பரவாயில்லை என்று நினைத்து மது அருந்தினான்.

மது அருந்தியவுடன் மது மயக்கத்தில் ஏனைய இரண்டு பாவங்களும் சேர்ந்து வந்து எல்லாப் பாவத்தையும் செய்தான். அது போலத்தான் இன்று யாழ்ப்பாணத்திலும் மதுப்பிரியர்களைத்திட்டமிட்டு அதிகாரத்தில் இருந்தவர்களால் ஊக்குவிக்கப்பட்டது. இன்று கலை, கலாசாரம், பண்பாடு எல்லாம் கேள்விக் குறியாகிவிட்டது.

கலாசாரச் சீரழிவுக்கு முக்கிய காரணம் மது. ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தை 1848 இல் கைப்பற்றியவுடன் முதல் செய்த அபிவிருத்தி வீதி அமைத்தது. இரண்டாவது அவர்களைச் சிந்திக்காமல் வைக்க மது பாவனையை ஊக்குவித்தது.

இந்தக் கட்டத்தில்தான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்கள் அறிமுகப்படுத்திய மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டம் மிக அவசியமானதொன்றாக உணரப்படுகின்றது. இந்தக் கல்வித் திட்டத்தில் அறிவும் பண்பும் இணைந்து கற்பிக்கப்படும்போது மூளையும் இதயமும் இணைந்து செயற்படுகிறது. அன்பு இக்கல்வி முறையில் அழுதமாகப் போதிக்கப்படுகிறது. அன்பு எல்லா நல்ல குணங்களும் விருத்தியாகும்.

அன்புநெஞ்சில் இருந்தால் அது சத்தியமாகும். அன்பு செயலில் இருந்தால் அது தர்மம் ஆகும். அன்பை இதயத்தில் உணர்ந்தால் சாந்தி உண்டாகும். இவை எல்லாம் ஒன்றிணைந்து செயற்படும் போது அகிம்சை என்ற உயர் பண்பு தோன்றும்.

இதனை இன்று பல கோணங்களில் நடைமுறைப்படுத்த சத்திய சாயி நிறுவனம் வடமாகாணத்தில் பல விதத்தில் முயற்சி செய்து வருகிறது. பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆசிரியர்களுக்கான கருத்த ரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மனித மேம்பாட்டுடன் கூடிய தலைமைத்துவம் என்ற தலைப்பில் மணித்தியால கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

சில பாடசாலைகளைத் தெரிவு செய்து வாரம் ஒருமுறை 10 தொடக்கம் 15 நிமிடம் பிரார்த்தனை நேரத்தில் நற்சிந்தனை வழங்கப்பட்டு வருகிறது. இவற்றை இன்னும் விரிவாக்கவேண்டும். ஆளணி பற்றாக் குறையாக உள்ளது.

வடமாகாணத்திலும் மது அரக்கனை விரட்ட விழிப்புணர்வு போராட்டம் தேவை. இதன்மூலம்தான் நல்ல பண்புகளை வளர்த்தெடுக்கமுடியும். இதற்கு ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்களுடைய மனித மேம்பாட்டுப் போதனைகளே காலத்தின் இன்றைய தேவையாகும். உலகத்தில் சுமார் 167 நாடுகள் சாயிபாபாவின் போதனைகளை ஏற்று அவருடைய போதனைப்படி நடந்து வருகிறார்கள்.

உலகத்தில் அதிகரித்துவரும் வன்முறைகளுக்கு இந்த மனித மேம்பாட்டுக் கல்விமுறைதான் தீர்வு எனக்கருதி பல நாடுகளின் அரசாங்கங்களே ஏற்று நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இலங்கையிலும் ஒரே ஒரு சத்திய சாயி பாடசாலை மானிப்பாயில் இயங்கி வருகிறது. இதனை நாடு முழுவதும் விரிவாக்க வேண்டும். கல்வி பற்றிய பகவான் பாபாவின் கூற்று சிந்திக்கத்தக்கது.

**கல்வி வாழ்க்கைக்காக, சீவியத்திற்காக அல்ல**

**கல்வியின் நிறைவு ஒழுக்கம்**

ஜெய் சாயிராம்

**எஸ்.ஆர்.சரவணபவன்**
**உபதலைவர்,**
**வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனம்.**

# மகிழ்ச்சிகரமாக வாழ பாபா வழிகாட்டுகிறார்

எந்தளவு செல்வம் படைத்தவனும் அல்லது எந்த மதத்தை சேர்ந்தவனும் மரணத்தில் இருந்து தப்ப முடியாது.

ஆனால், மகிழ்ச்சிகரமாக வாழ வழியுண்டு என்பதை மார்க்கண்டேயர், சாவித்திரி போன்ற பலர் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அந்த வகையில் நாங்கள் என்ன செய்ய லாம்?

உள்ளத் தூய்மையுடன் இறைவன்நாமத்தை உச்சரித்த வண்ணம் உலக கருமங்களில் ஈடுபடுதல், தாம் பிறந்த மதத்தை விட்டு மதம் மாறாமல் வாழுதல், ஒரு கிணற்றை ஆழமாய் வெட்டாமல் பல கிணற்றை வெட்டி என்ன பயன்?

பிறர்பொருளை, பணத்தை கூறையாடக் கூடாது, பிறர் மனம் வருந்த வாழக் கூடாது, வயோதிபர்களை மதிக்க வேண்டும், தெருவில் செல்லும் பெண்களை கேலி செய்து மனம் வருத்தக்கூடாது, என்னுடைய தாய், சகோதரி, மனைவி போன்றோரை யாராவது கேலி செய்தால் தாங்க முடியுமா? நாம் பிறருக்கு என்ன செய்கிறோமோ அதுவே பல மடங்காக பெருகி வந்து எம்மைத் தாக்கும். நன்மை செய்தால் நன்மை. தீமை செய்தால் தீமை என்பதை நாம் உணர வேண்டும்.

ஆயினும் இவ்வாறான செயற்பாடுகள் அண்மைக் காலமாக அதிகரித்து செல்வது ஆரோக்கியமான சமூகத்திற்கு இழுக்காகும். எனவே, சாயிபாபாவின் அருள்மொழிகளை பின்பற்றி மகிழ்வுடன் வாழலாம்.

உலகில் வாழும் எல்லா உயிரினங்களும் இறைவனால் படைக்கப்பட்டவை. எந்த உயிரைக் கொன்றாலும் இறைவன் மன்னிக்கமாட்டார்.

எந்நேரமும் இறை நாமத்தை சொல்லியவாறு சேவைப் பணிகளில் ஈடுபடுவோம். இரவு சாப்பிட முன்அரைமணித்தியாலமாவதுகுடும்பமாக ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்வோம். தூய்மையான பிரார்த்தனையால் வீட்டில் மட்டுமல்லாது நாட்டிலும் அமைதி உண்டாகும்.

இறைநாமம்- பிரார்த்தனையின் சக்தி அளப்பரியது. பொல்லா வினைகளையும் பொடிபட அறுத்திடும், நோய் குறைந்து விடும், வயோதிபம் சுகமாய் கழியும், மரணம் மகிழ்ச்சிகரமாய் அமையும். மரணமில்லா பெருவாழ் வும் உண்டு.

பாடசாலை கல்வியில் காலைப் பிரார்த்தனை இன்றியமையாதது. மாணவர்களை ஒழுக்கசீலர்களாக மாற்றுவதற்குதியானம், பிரார்த்தனை முக்கிய பங்கை வகிக்கின் றது.

அந்த வகையில் மாண வர்களை தினமும் குறைந்தது அரை மணி நேரமாவது பிரார்த்தனையில் ஈடுபடுத்துவது பாடசாலைக் கல்வியின் அரைப்பங்கை பூரணப்படுத்துகின்றது.

காலையில் நித்திரைவிட்டு எழும் போது அப்பாடா! எழும்பி விட்டோமே என எழும்ப வேண்டும் இன்னமும் ஒரு மணிநேரம் நித்திரை செய்தால் என்ன என்று இல்லாமல் தியானத்தில் ஈடுபட்டு அன்னைய கருமங்களை ஆற்ற வேண்டும்.

எனவே, எல்லோரையும் நேசித்து எல்லோருக்கும் உதவி செய்து நாமும் நன்றாக வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்போம்.

**பசுபதி பாலமுருகன்**

# காங்கிரஸ் மட்டும் தனித்து முடிவெடுக்க முடியாது-ஞானதேசிகன்



(சென்னை)

டெசோ அமைப்பு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக காங்கிரஸ் மட்டும் தனித்து முடிவெடுக்க முடியாது என்று ஞானதேசிகன் கூறியுள்ளார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் சத்திய மூர்த்திபவனில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது,

'இலங்கை அரசின் போர்க் குற்றம் குறித்து சர்வதேச விசாரணை நடத்த வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்' என்று டெசோ அமைப்பு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது அனைத்து கட்சிகளும் கூடி பேச வேண்டிய விடயம். காங்கிரஸ் கட்சி மட்டும் தனித்து முடிவெடுக்க முடியாது. ஒரு பெண்ணை வேவு பார்க்க அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தவர் மோடி. அபாயகரமான செயலில் ஈடுபட்ட அவரை பா.ஜ.க. பிரதமர் வேட்பாளராக அறிவித்துள்ளது என ஞானதேசிகன் கூறினார். (2)

# தெலுங்கானா வரைவு மசோதாவிற்கு இறுதி வடிவம் கொடுக்க முடிவு

தெலுங்கானா வரைவு மசோதாவுக்கு இறுதி வடிவம் அளிப்பது தொடர்பாக தெலுங்கானாவுக்காக அமைக்கப்பட்டுள்ள மத்திய அமைச்சர்கள் குழு எதிர்வரும் 27ஆம் திகதி கூடுகிறது.

இந்த வரைவு மசோதாவை அடுத்த மாதம் கூடும் நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில் அறிமுகம் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று அமைச்சர்கள் குழுவின் தலைவர் சுஷில்குமார் ஷிண்டே கூறியுள்ளார்.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தனித் தெலுங்கானா மாநிலம் உருவாக்குவது தொடர்பான அமைச்சர்கள் குழுக் கூட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இரு மாநிலங்களுக்கு சரிசமமாக இயற்கை வளங்களைப் பிரிப்பது தொடர்பாக பல்வேறு தரப்பினர் அளித்த ஆலோசனைகளை அமைச்சர்கள் குழு பரிசீலித்தது.

மேலும், தெலுங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பான அறிக்கை குறித்தும் தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவதற்கு ஏதுவாக ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு வரைவு மசோதா குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இருப்பினும், இந்த விவகாரங்கள் குறித்து அமைச்சர்கள் குழு இறுதி செய்யவில்லை. ஆகையால், அமைச்சர்கள் குழு எதிர்வரும் 27ஆம் திகதி மீண்டும் கூடி ஆலோசிக்க முடிவு செய்துள்ளது. அந்தக் கூட்டத்தில் ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு வரைவு மசோதா இறுதி செய்யப்பட்டு அடுத்த சில தினங்களில் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மசோதாவை மத்திய அமைச்சரவை பரிசீலித்த பின்பு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும். குடியரசுத் தலைவர் பரிந்துரையின் பேரில் ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு மசோதா, ஆந்திர மாநில சட்டப் பேரவையின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

அதன் பின்னர் மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த பின்பு மீண்டும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படும்.

பின்னர் இந்த மசோதா குளிர்கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என்றும் ஆந்திர மாநில சட்டப் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை கட்டுப்படுத்தாது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடர் டிசெம்பர் 5ஆம் திகதி ஆரம்பமாகி 20ஆம் திகதி வரை நடைபெறுகிறது. (2)

# குற்றம் சாட்டப்பட்டவர்களை சித்திரவதை செய்யத் தடை

## நீதிமன்றம் அதிரடி உத்தரவு

(பீஜிங்)

சீன சுப்ரீம் மக்கள் நீதிமன்றம் நேற்று அதிரடி உத்தரவை பிறப்பித்தது.

குற்றம் சாட்டப்பட்டவர்களை சித்திரவதை செய்து ஒப்புதல் வாக்கு மூலம் பெறக்கூடாது. பட்டினி போடுதல், குளிர்நீரில் வைத்தல், சூடு உலர வைத்தல், கடின உழைப்பு கொடுத்து சோர்வடையச் செய்வது போன்ற சித்திரவதைகள் நீக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.

குறித்த அதிரடி உத்தரவு நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டது.

மேலும் மரண தண்டனைக்குரிய வழக்கு விசாரணையிலும் கடும் விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்திய துடன் குற்றச்சாட்டுக்கு போதுமான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், இதுபோன்ற வழக்குகளை அனுபவம் வாய்ந்த நீதிபதிகளே விசாரிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது.

கடந்த வாரம் இறுதியில் சுப்ரீம் நீதிமன்றில் வெளியிட்ட ஒரு பக்க அறிக்கை ஒன்றில் நீதிமன்றங்களால் இலஞ்சம் ஒழிக்கப்பட வேண்டும். நீதிமன்ற நடவடிக்கையில் அதிகாரிகள் தலையிடக்கூடாது எனக் கூறியிருந்தது. இதனை அடுத்த கட்டமாக தற்போது அதிரடி உத்தரவை வெளியிட்டுள்ளது. (2)

# 'மங்கள்யான்' அனுப்பிய முதல் புயல் படம்



ஆந்திரக் கரையோரம் நிலை கொண்டுள்ள ஹெலன் புயலை மங்கள்யான் விண்கலம் தெளிவாகப் படம்பிடித்து அனுப்பியுள்ளது.

இது மங்கள்யான் எடுத்துள்ள முதல் படம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா மற்றும் ஆபிரிக்காவின் சில பகுதிகள் இடம்பெற்றுள்ள இந்தப் படம் இஸ்ரோ இணையத் தளத்தில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.


மங்கள்யான் விண்கலத்தில் உள்ள கருவிகளைச் சரிபார்க்கும் ஒரு முயற்சியாகவே இந்த கமராவில் படங்கள் எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிக படங்கள் எடுக்கப்பட்ட போதும் அவற்றில் ஒரு படத்தை மட்டுமே இஸ்ரோ வெளியிட்டுள்ளது. ஹெலன் புயல் ஆந்திரக் கரையை வெள்ளிக்கிழமை கடக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் டிசெம்பர மாதம் முதலாம் திகதி செவ்வாய் கிரகத்தை நோக்கிய பாதையில் விண்கலம் செலுத்தப்படவுள்ளது. (2)

# பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அமைந்ததும் மீனவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு

## பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



பா.ஜ. ஆட்சி அமைந்தவுடன் மீனவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு அளிக்கப்படும் என்று பொன்ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

தமிழக பா.ஜ. சார்பில் உலக மீனவர் தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

அப்போது, பொன்.ராதாகிருஷ்ணன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

இலங்கை கடற்படையால தொடர்ந்து தமிழக மீனவர்கள் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். அடுத்த ஆண்டு மத்தியில் பா.ஜ. ஆட்சி அமையும். அப்போது, மீனவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கைக்கு ஆதரவாக எந்த நாடு வந்தாலும், அதை பா.ஜ. தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபடும். காங்கிரஸ் அரசு தமிழக மீனவர்கள் மட்டுமல்லாமல், இந்திய மக்களுக்கு எதிராக தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. எல்லோருக்கும் இந்த ஆட்சி இருக்கும் வரை தொல்லை தான் என அவர் கூறினார். (2)

# மீனவர்கள் பிரச்சினைகள் குறித்து நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்

## முதல்வர் ரங்கசாமி வலியுறுத்து



இலங்கை கடற்படையினரால் தமிழக, காரைக்கால் மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதல்வர் என்.ரங்கசாமி வலியுறுத்தியுள்ளார்.

உலக மீன்வளம் மற்றும் மீனவர் தின விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ் விழாவைத் தொடக்கி வைத்து முதல்வர் ரங்கசாமி உரையாற்றுகையில்,

இலங்கை கடற்படையினரால் காரைக்கால், நாகை மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதற்கு மத்திய அரசு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்திய-இலங்கை அரசுகள் இடையிலான பேச்சுவார்த்தையில் புதுவை-காரைக்கால் மீனவர்களும் பங்கேற்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன்.

மீனவர்கள் பஞ்சாயத்தை எதிர்வரும் ஆண்டு ஜனவரியில் கூட்ட அரசு முடிவு எடுத்துள்ளது. (2)

# ஆசிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வார் பராக் ஒபாமா

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அப்போது, இந்தியாவில் மக்களவைத் தேர்தல் என்பதால், அவர் இந்தியாவுக்கு பயணிக்கமாட்டார் என்று தெரிகிறது.

அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, ஜனாதிபதி ஒபாமா கடந்த மாதம் மேற்கொள்ளவிருந்த ஆசியப் பயணம் இரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் அவரது அடுத்த ஆசியப் பயணம் குறித்த தகவலை, அந்நாட்டின் ஜனாதிபதி மாளிகையின் மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பினும் பயணத் திட்டம் குறித்த எவ்வித விபரங்களும் வெளியிடப்படவில்லை.

இது தொடர்பாக அந்நாட்டின் தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் சூசன் ரைஸ் கூறியதாவது,

பொருளாதார நெருக்கடியால் ஜனாதிபதியின் ஆசியப் பயணம் ஒக்டோபரில் இரத்து செய்யப்பட்டிருந்த போதிலும், ஒபாமா அடுத்த ஆண்டு ஏப்ரலில் ஆசிய நாடுகளுக்குச் செல்வார் என்ற அறிவிப்பு ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் உறவுகளை வலுப்படுத்தும்.

ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்துவது என்பது ஒபாமா நிர்வாக வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக உள்ளது. அந்தப் பிராந்தியத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அமெரிக்கா தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும்.

ஆசிய நாடுகளில் நிரந்தரப் பாதுகாப்புக்கான சூழ்நிலைகளை உருவாக்குதல், தெளிவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல், சுதந்திரமான அரசியலை அமைத்தல், உலகளாவிய உரிமைகளைப் பெறுதல் போன்றவை அமெரிக்காவின் நோக்கம் என்றார். (2)


# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

## விஞ்ஞானம்
## பகுதி -I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக
❖ 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு 1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிவு செய்க.
❖ உங்களுக்கு தரப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குரிய சரியான விடையின் இலக்கத்தினுள் (X) புள்ளடி இடுக.

(நேற்றைய தொடர்ச்சி)

21.




மேலே தரப்பட்டுள்ள அமைப்புக்களில் எந்த ஓ ளிகாலும் இருவாயி ஒ ளிரும்

1.A 2.B 3.C 4.D

22. இலத்திரன் 6, நியூத்திரன் 6 கொண்டுள்ள அணுவொன்றின் சமதானியை அட்டவணையில் இருந்து தெரிவு செய்க.

| | புரோத்தன் | நியுத்திரன் | இலத்திரன் |
|---|---|---|---|
| A | 7 | 6 | 9 |
| B | 6 | 6 | 10 |
| C | 6 | 7 | 6 |
| D | 8 | 6 | 7 |

1.A 2.B 3.C 4.D

23. 20g சோடியம் ஐதரொட்சைட்டின் உள்ள ஒட்சிசனின் திணிவு (Na-23, O=16, H=1)

1.8g 2.10g 3.12g 4.15g

24. உலர் பனிக்கட்டி (Dry ice) தீயணை கருவி மூலம் கடதாசியில் ஏற்படும் தீயை அணைக்க முடியும். இங்கு y எவ்வாறு அணைக்கப்படுகின்றது?

a எரிபற்று நிலையை விடக் குறைவான வெப்பநிலைக்கு எரியும் பொருளின் வெப்பநிலையைக் குறைத்தல்


b. எரிகின்ற பொருளை அகற்றுதல்

c. தகனத் துணையி கிடைப்பதைத் தடுத்தல்

இவற்றுள் சரியானது / சரியானவை

1.aமட்டும் 2.bமட்டும் 3.c மட்டும் 4.abc எல்லாம்


25




ஆணியில் தொங்க விடப்பட்ட படத்தை மேலே காணலாம். அதன் சமநிலை தொடர்பான பிழையான கூற்று


1.P,Q விசைகள் இரண்டினதும் கூட்டுத் தொகை படத்தின் நிறைக்குச் சமனாகும்.
2. படத்தின் நிறை ஆணி மூலம் ஏற்படுத்தப்படும் மறுதாக்கத்திற்குச் சமனாகும்.
3. படத்தின் ஈர்ப்பு மையத்தின் தாக்கக்கோடு ஆணியினூடாகப் பயணிக்கும்.
4.P,Q விசைகள் இரண்டினது விளையுள் விசை ஆணியினால் ஏற்படுத்தப்படும் மறுதாக்கத்திற்குச் சமனாகும்.

26. படத்தில் காட்டப்பட்டுள்ள பொன்னிலை மின் காட்டியை நேர் (+ல் ஏற்றக் கோலினால் தொடும் போது ஏற்படும் மாற்றத்தைச் சரியாக விளக்குவது




1. கோலில் உள்ள நேர் ஏற்றம் பொன்னிலைமின் காட்டியை நோக்கிக் கடத்தப்படும்.
2. பொன்னிலை மின்காட்டியின் தட்டில் உள்ள (+) ஏற்றம் பொன்னிலையை நோக்கிக் கடத்தப்படும்
3. கோலில் உள்ள (-) ஏற்றம் பொன்னிலை மின் காட்டியை நோக்கிக் கடத்தப்படும்
4. பொன்னிலை மின் காட்டியில் உள்ள (-) ஏற்றம் கோலை நோக்கிக் கடத்தப்படும்.

27. இங்கு தரப்பட்டுள்ள சுற்றில் மின் கலத்தினூடாகப் பாயும் மின்னோட்டம்




1. 2/3A 2.3/4A 3.3/2A 4.9/4A

28




மேலே முதலாம் சந்தர்ப்பத்தில் நெருக்கற்தராசின் வாசிப்பு 150g ஆகும். இரண்டாம் சந்தர்ப்பத்தில் நெருக்கற் தராசின் வாசிப்பு யாது?

1.150g 2.300g 3. 290g 4.160g

29. ஒளி முதலில் இருந்து வெளிப்படும் ஒளியை மிகக் கூடிய தூரத்திற்கு அனுப்புவதற்கு ஒளி முதல் வைக்க வேண்டிய இடம்




1. P,f இடையில் 2.F,C இடையில்
3.F இல் 4.C இற்கு அப்பால்

30. இலத்திரனியல் உபகரணங்கள் சிலவற்றினால் ஆற்றப்படும் தொழில்கள் சில சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

a. சீராக்கியாகத் தொழிற்படும். b. மின் விரியலாக்கியாகத் தொழிற்படும்.
c. மின்னோட்டத்தைக் கட்டுப்படுத்தும் d மின்னை ஒப்பமாக்கும்.


மேற் கூறிய தொழில்களை புரியும் இலத்திரனியல் உபகரணங்கள் முறையே

1. தடையி, திரான்சிஸ்டர், இருவாயி, கொள்ளளவி
2. இருவாயி, திரான்சிஸ்டர், தடையி, கொள்ளளவி
3. இருவாயி, திரான்சிஸ்டர், கொள்ளளவி, தடையி
4. கொள்ளளவி, திரான்சிஸ்டர், இருவாயி, தடையி.

31. கடிகாரம் ஒன்றில் உள்ள விற்சுருள் கொண்டுள்ள சக்தியை விளக்குவதற்கு பொருத்தமான சொல்

1. மீள் இயக்கச் சக்தி 2. புவியீர்ப்பு அழுத்தச் சக்தி
3. மீள் அழுத்தச் சக்தி 4. புவியீர்ப்பு இயக்கச் சக்தி

32.




சமநிலையில் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கடவையொன்றைப் படத்தில் காணலாம். இங்கு இழையில் தொழிற்படும் இழுவை T இன் பெறுமானம் (புவியீர்ப்பு ஆர்முடுகல் $10ms^{-2}$)


1. 25N 2.50N 3.100N 4.25N

33. சோடா போத்தல் ஒன்றில் மூடி அகற்றப்படும் முறையை படத்தில் காணலாம். அதில் தொழிற்படும் எத்தனம், சுழலிடம், சுமை ஆகியவற்றை ஒழுங்காகக் குறிப்பிடப்படுவது?





1.C,A,B 2.A,B.C
3.B.C,A 4.B,A,C

34. வீட்டு மின்சுற்றில் காணப்படும் அமைப்பை படத்தில் காணலாம். இங்கு ஒவ்வொரு துளையிலும் பொருத்தப்படும் கம்பி தொடர்பான சரியான கூற்று.





1.A- உயிர்க்கம்பி B-நொதுமற்கம்பி C-புவிக்கம்பி
2.A- புவிக்கம்பி B- உயரிக்கம்பி C-நொதுமற்கம்பி
3.A- புவிக்கம்பி B- நொதுமற்கம்பி C- உயிர்க்கம்பி
4.A- புவிக்கம்பி B,C- ஆகியவற்றில் உயிர்க்கம்பி

35. படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சுற்றொன்றுக்கு மின்கலத்தின் மூலம் 3V நேரோட்ட மின்னோட்டம் ஒன்று வழங்கப்பட்டது. இதன்போது ஒ ளிகாலும் இருவாயி A ஒளிர்ந்தது. மின்கலத்தின் முனைகள் மாற்றப்பட்ட போது ஒளிரும் இருவாயிக்கள்




1.A. மட்டும்
2.A,B மட்டும்
3.A,C மட்டும்
4.B,D மட்டும்.

36. படத்தில் காட்டப்பட்டுள்ள வேக நேர வரைபு தொடர்பான சரியான கூற்று




1. பந்தொன்று மேல் மாடியில் இருந்து சுயாதீனமாக கீழ் நோக்கி விழுவதைக் காட்டுகின்றது.
2. ஒப்பமான தளமேற்பரப்பில் அசையும் பந்தின் இலக்கத்தைக் காட்டுகின்றது.
3. நிலைக்குத்தாக மேல்நோக்கி எறியப்பட்ட பந்தின் இயக்கத்தைக் காட்டுகின்றது.
4. சாய்தளத்தின் வழியே பந்து அசையும் இயக்கத்தைக் காட்டுகின்றது.

37.எரிபொருளாகப் பயன்படுத்தக் கூடிய பிட்தாதுப்பொருள் காணப்படும் இடம்

1.ஆனைவிழுந்தான் ஈரநிலம்
2.முத்துராஜவல ஈரநிலம்
3.பெல்லன்வில சதுப்பு நிலம்
4.புத்தல ஈரநிலம்

38.இரப்பை அழற்சி சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் அமில எதிரியில் காணப்படும் பிரதான சேர்வைகள்

1.அலுமினியம் ஐதரொட்சைட்டு, மக்னீசியம் ஐதரொட்சைட்டு
2.மக்னீசியம் ஐதரொட்சைட்டு, மக்னீசியம் ஒட்சைட்டு
3.ஈய ஐதரொட்சைட்டு, மக்னீசியம் ஐதரொட்சைட்டு
4.அமோனியம் ஐதரொட்சைட்டு, மக்னீசியம் ஐதரொட்சைட்டு

39.குயில் தொடர்பான பொருத்தமான கூற்று

1.இது இலங்கைக்கு குடிபெயர்ந்த பறவையாகும்
2.இது இலங்கைக்கே உரிய பறவையாகும்
3.இனப்பெருக்க காலத்தில் மட்டும் கூவுகின்றது
4.சில காலங்களில் இவை காட்டுக்கு இடம் பெயர்கின்றது

40.இயற்கை சூழல் தொகுதி பாதிப்புக்குள்ளாவது மிகக் குறைவாயின் விவசாயச் சூழற் தொகுதி விரைவில் பாதிப்புள்ளாகின்றது. இதற்கு முக்கிய காரணமாக அமைவது

1.விவசாய சூழல் தொகுதிக்கு பசளை இடப்படுதல்
2.விவசாய சூழல் தொகுதியில் இருந்து விளைபொருள் அகற்றப்படுதல்
3.விவசாய சூழல் தொகுதியில் பல்வேறு பயிர்கள் பயிரிடப்படுதல்
4.விவசாய சூழல் தொகுதியில் ஒரே பயிரை தொடர்ச்சியாக பயிரிடப்படுதல்

(தொடரும்)

ஒவ்வொரு தலைமுறையிலும் மனித இனத்தை காத்துவரும் கடவுளே குழந்தை. - யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பிஞ்சு மனங்களை பிசக்கும் புலமைப்பரிசில் பரீட்சை போய் அகல...

ஒரு காலத்தில் ஏழை மாணவர்களின் கல்விக்கு நிதி உதவி செய்யும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டதே ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையாகும்.

எனவே தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை சித்தியடைதல் என்பது ஏழை மாணவர்களுக்கு சாதகமாக இருந்ததேயன்றி அது வசதி படைத்த மாணவர்களுக்கு அவசியமற்றதாயிற்று.

எனினும் இன்றைய சூழலில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பது பிரபலமான பாடசாலைகளில் அனுமதியைப் பெறுவதற்கு மிகவும் அவசியமானது என்ற நிலையில், இப்போது ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை என்பது வசதிபடைத்த மாணவர்களுக்கான கடும் போட்டி நிறைந்த பரீட்சையாக மாறிப்போயிற்று.

ஏழை மாணவர்களின் கல்விக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பரீட்சை ஒன்று எங்ஙனம் வசதி படைத்த மாணவர்களின் பரீட்சையாக மாறியது என்பது தொடர்பில் ஆராய்ந்தால் எங்கள் கல்வியின் மற்ற நிலை குறித்து முக்கிய தகவல்களை பெறமுடியும்.

எதுவாயினும் ஏழை மாணவர்களின் கல்விக்கு நிதியுதவி செய்யும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வசதி படைத்த – அரச உத்தியோகத்தர்களைச் சார்ந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் சித்தியடைவதனால் புலமைப்பரிசில் நிதி ஒதுக்கீட்டுக்கு அதிகளவு நிதி தேவைப்படுவதில்லை என்ற யதார்த்தம் அரசுக்கு ஆறுதலைக் கொடுத்திருக்கலாம்.

எனினும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவப் பிஞ்சுகளை உடல் ரீதியிலும் உள ரீதியிலும் கடுமையாக வதைக்கின்றது.

இந்த வதைப்பால் மாணவர்கள் பிஞ்சுப் பருவத்திலேயே நசிந்து போய் விடுகிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவல்கள் சகல தரப்புக்களாலும் உணரப்பட்டன.

அதேநேரம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் தொடர்பில் மேற்கொண்ட ஆய்வுகள் இன்னுமொரு அதிர்ச்சித் தகவலைக் கொடுத்திருந்தது.

அதாவது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் எதிர்பார்த்த அடைவு மட்டத்தைப் பெற்றிருக்கவில்லை என்பதுடன் குறிப்பிட்ட தொகை மாணவர்கள் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சவ சித்தியடையவில்லை என்பதுதான் அந்த அதிர்ச்சித் தகவல்.

மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெரும் சுமையாக இருக்கக்கூடிய தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாற்றுவழி தேடவேண்டும் என்ற கருத்து வலுப்பெறலாயிற்று.

இதன் காரணமாக கடந்த மூன்று வருடங்களாக புலமைப் பரிசில் பரீட்சையின் கடுமைத்தனத்தைக் குறைக்கும் முயற்சிகள் நடந்துள்ளன. இருந்தும் அது மாணவர்களின் சுமையைப்பெற்றோர்களின்ஏக்கத்தைக்குறைப்பதாகஇல்லை.

இந்நிலையில்இப்போது தரம் 5 மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சையை ரத்துச் செய்வது என்ற முடிவு குறித்து ஆராயப்படுகிறது என்ற தகவல்கள் ஆறுதல் தருவதாக உள்ளன. கல்வி என்றால் ஒரு சுமை என்ற நினைப்பை எங்கள் மாணவச் செல்வங்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

மாணவர்களிடையே தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி விடுகின்றதான பரீட்சையை வேரறுப்பது மிகவும் அவசியமானதாகும்.

முன்பெல்லாம் புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறும் அதேநேரம் பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான அனுமதிப் பரீட்சைகளும் நடைபெற்றன.

அந்தந்தப் பாடசாலைகள் அனுமதிப் பரீட்சையை நடத்தி மாணவர்களை உள்ளீர்ப்புச் செய்தபோது புலமைப் பரிசில்பரீட்சை என்பது மாணவர்களுக்கு சுமையாக இருக்கவில்லை என்ற உண்மையின் மத்தியில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு ஜனாதிபதி மாளிகை வரை கவனம் செலுத்தப்படுவதால் அந்தப் பரீட்சை தொடர்பான அக்கறைப்பாடும் ஏக்கமும் மேலும் மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்களும் உண்டு.

இது மாணவர்களின் மனநிலையைப் பெரிதும் பாதிக்கும் என்பதால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை இல்லாதொழிக்கும் பணியை விரைவாக செய்தாக வேண்டும். இது விடயத்தில் எடுக்கப்படுகின்ற மாற்றுவழிகள் மீளவும் ஏழை மாணவர்கள் நன்மை பெறும் வகையில் அமைவது அவசியம்.

குறிப்பாக வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதியுதவி கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுடன் சகல பாடசாலைகளையும் தரமான – சகல வளங்களுடைய பாடசாலைகளாக மாற்றுவதும் அவசியமாகும்.

இத்தகையதொரு திட்டத்தின் கீழ் பிரபலமான பாடசாலையை நோக்கிய மாணவர் குவிவு என்பது தடுக்கப்பட்டு தத்தம் ஊர்ப் பாடசாலைகளில் கற்றல் என்ற நல்லதொரு நடைமுறை அமுலாகும் வாய்ப்பு ஏற்படும்.

ஆகவே மாணவர்களின் பிஞ்சு மனங்களை நோகடிக்கும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இல்லாது போக கல்வியாளர்கள் உரத்த குரல் கொடுக்க வேண்டும்.

# புனித பாப்பரசர் - கோத்தபாய சந்திப்பு சர்வதேசத்தை திசை திருப்பும் முயற்சி

(கொழும்பு)

கத்தோலிக்கத் திருச்சபையின் புனித பாப்பரசர் பிரான்சிஸை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சந்தித்து, அவரை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

வத்திக்கானில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, கோத்தபாய ராஜபக்ஷவின் துணைவி அயோமா ராஜபக்ஷ, வத்திகானுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க, இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் பேனார்ட் குரே மற்றும் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த கொலம்பகே ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது, பாப்பரசர் பிரான்சிஸை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சார்பில் கோத்தபாய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை ஏற்று பாப்பரசர் பிரான்சிஸ் அடுத்த வருடம் மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு மேன்மேலும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வரும் நிலையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் சுயாதீனமான ஒரு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் கடந்த சனிக்கிழமை கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், இலங்கை அரசாங்கம் இவ்வாறு விசாரணைகளை மேற்கொளள்ளாது விட்டால், அது தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் பிரித்தானியா கோரிக்கை விடுக்கும் என அவர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் அரசாங்கம் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், பாப்பரசர் பிரான்சிஸை இலங்கைக்கு அழைத்து உலகின் கவனத்தைத் திசை திருப்ப இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. (எ-11)

# இ.போ.ச. பேருந்து மீது கல்வீச்சு தாக்குதல்

(கரணவாய்)

பருத்தித்துறை - கொழும்பு வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பேருந்தின் மீது இனந்தெரியாதோர் கல்வச்சுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பருத்தித்துறைச் சபைக்குரிய கொழும்பு - பருத்தித்துறை சேவையில் ஈடுபடும் பேருந்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2.15 மணிக்கு இனந்தெரியாதோரின் கல் வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9 மணிக்கு குறித்த பேருந்து கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கி புறப்பட்டது.

மதவாச்சி பகுதியிலுள்ள இக்கிரிகொலாவ எனும் இடத்திலுள்ள உணவகமொன்றிற்கு முன்னால் பேருந்து நிறுத்தப்பட்டது.

அவ் வேளை உணவகத்தின் அருகிலிருந்த பற்றையொன்றினுள்ளிருந்து வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் கல்வீச்சு மேற்கொண்டு பேருந்தின் முன் பக்க கண்ணாடியை சேதமாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட வேளை சாரதி மற்றும் பயணிகள் அவ்விடத்தில் இல்லாமையினால் காயம் எதுவுமின்றி தப்பினர்.

இது தொடர்பில் சாரதி மற்றும் நடத்துநரால் மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பேருந்து இதே இடத்தில் வைத்து அண்மையிலும் கல் வீச்சுக்கு இலக்காகியதாக தெரியவருகிறது. (அ-9,60,15)

# யாழ்ப்பாணத்தில் திடீரென ஆரம்பித்த வாகனப் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் பொலிஸாரின் உதவியுடன் இராணுவத்தினர் வாகனங்களை பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் 21 ஆம் திகதி முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரம் என்பதால் அதற்கான பாதுகாப்பு நடவடிக்கையாக இவ் வாகனப்திவு இடம்பெறலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

கடந்த வருட மாவீரர் தினத்தின் போது யாழ்.பல்கலைக்கழகம் உட்பட பல இடங்களில் மாவீரர்களிற்கான அஞ்சலிகள், நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டன.

இதனால் கடந்த வருட மாவீரர் வாரம் மிகவும் பதற்றதுடனும் அச்சத்துடனுமே கடந்தது.

எனினும் இராணுவத்தின் பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியிலும் யாழ். பல்கலை மாணவர்கள் மாவீரர் தினமான நவம்பர் 27 இல் ஈகைச்சுடர் ஏற்றியிருந்தனர்.

இந்த நிலையில் தற்போது யாழ். குடாவின் பல்வேறு இடங்களில பொலிஸாரும் இராணுவத்தினரும் வாகனங்களினை வழிமறித்து பதிவு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக நேற்றையதினம் யாழ் பண்ணை, அராலி வீதி, ஏ 9 வீதியை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பதிவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுக் காலை முதல் மாலை வரை இப்பதிவு நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தமையினை அவதானிக்க முடிந்தது. (அ-4)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



**அம்மா பகவானுக்கு இத்தனை சக்தி எப்படி வந்தது?**

அவர்கள் சித்தியடைந்த சித்தப்புருஷர்கள் அல்ல. சாதாரண மனிதர்களை தங்கள் தெய்வ சக்தியினால் சித்தப் புருஷர்களாக்கும் அவதார மூர்த்திகள். மனிதனின் மீதுள்ள கருணையே அவர்களின் சக்திக்கு மூலம். துக்கத்தில் மூழ்கியுள்ள மனித சமுதாயத்திற்கு முக்தியை அளிக்க வேண்டும் என்ற மஹா சங்கல்பத்துடன் அவதரித்த லீலா மூர்த்திகளே இவர்கள்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## துணிவுடன் செயலாற்று



❖ தியாகம் செய்தால் மட்டுமே பிறரின் இதயத்தை வெல்ல முடியும். நாம் நம்மைப் பற்றி எண்ணாத நேரத்தில் மட்டுமே நன்மையும், உண்மையான வாழ்வையும் அனுபவிக்கிறோம்.

❖ எனக்கு எதுவும் தெரியாது என்ற மனநிலை இருக்கும் வரை, எதையும் வாழ்வில் சாதிக்க முடியாது.

❖ கோழையும், முட்டாளும் விதியை நம்புகிறார்கள். ஆனால், ஆற்றல் மிக்கவனோ என் விதியை நானே வகுப்பேன் என்று உறுதியைப் பெற்றிருப்பான்.

❖ சுதந்திரமான நிலையில் தான் அன்பு பிரகாசிக்க முடியும். அன்பின் வழியாக மட்டுமே நம் கடமையை இனிதாக நிறைவேற்ற முடியும்.

❖ எந்த வேலையாக இருந்தாலும், அதை ஒரு வழிபாடாக செய்யுங்கள். அதற்கு அப்பாலுள்ள எந்த விஷயத்தைப் பற்றியும் சிந்தனை செய்ய வேண்டாம்.

❖ பலவீனத்திற்குப் பரிகாரம் பலத்தை சிந்திப்பதே. துன்பம் வந்த சமயத்தில் துணிவுடன் செயலாற்றுங்கள்.

# காலநிலை மாற்றம் எமது பிரதேச விவசாயத்தையும் விவசாயஞ்சார் கைத்தொழிலையும் பாதிக்கும் அபாயம்!




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 37-II

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பருவகாலந்தொடங்கிவிட்டது! ஆனால் பருவந்தப்பி மழைபெய்து கொண்டிருக்கின்றது. வரவேண்டிய மழை ஆரம்பத்தில் வராமலே இருந்துவிட்டது. அவனியில் நடைபெறும் சத்தியாக்கிரகங்கள் மற்றும் பகிஷ்கரிப்புக்களைக் கண்ணுற்றோ என்னவோ மழையும் அவ்வப்போது பகிஷ்கரித்துவிடுகின்றது. பெய்ய வேண்டி மழையினளவு இதுவரையிலும் கிடைக்கவில்லை. கிளிநொச்சியில் பெய்ய வேண்டிய 1200-1400 மி.மீ மழையில் இதுவரையில் 700 மி.மீ மழையே பதிவாகியிருக்கின்றது. இதற்கிடையில் பனிபெய்ய ஆரம்பித்து விட்டது. பனியின் வேகமும் இம்முறை ஆரம்பத்திலேயே அதிகமானதாக இருப்பது இதற்கு சான்றாகும். இது ஒரு அபாயகரமான நிலைமை. விவசாயிகளுக்கு மிகவும் சோதனையான காலமுங்கூட. திட்டமிட்ட முறையில் விவசாயத்தை செய்ய முடியாது விவசாய பெரு மக்கள் திணறிக்கொண்டிருக்கின்றார்கள். எமது கையில் என்ன இருக்கின்றது என நாம் கையை விரிக்கின்றதைத் தவிர எதுவுமே செய்ய முடியாதென வல்லுநர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆனால் இது அனுமானித்ததொன்று என்றாலும் நாம் இதனை எதிர்வுகொள்ள எம்மை தயார்ப்படுத்தவில்லை. காரணம் இதுபற்றிய தகவல்களை துல்லியமாக நாம் பெறமுடியவில்லை. வளிமண்டல திணைக்களத்தின் தகவலின் படியே நாம் மழை வருவதற்கான கணிப்பீடுகளை செய்ய முடியும. ஆனால் மழைவந்த பின் னர் பெய்த மழையை கணித்தெடுக்க வழிவகைகளும் பொறிமுறைகளுமுண்டு. வளிமண்டல ஆய்வுபற்றியும் காலநிலை பற்றியுமான கற்பித்தலும் ஆராய்ச்சியும் இப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க இனிவருங் காலங்களில் உதவும். ஆனால் அதற்கான வசதிவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

கிளிநொச்சியிலமையவிருக்கும் விவசாய பீடம் மற்றும் பொறியியல் பீடங்களின் இணைப்பாக வளிமண்டலவியல் பிரிவு உள்வாங்கப்படலாம். அதில் காலநிலை மாற்றம் (climate change) பற்றிய ஆய்வினை முடுக்கிவிடலாம். அவசியம் இதுபற்றிய கற்பித்தலும் ஆராய்ச்சியும் ஏற்படுத்தப்பட வேண்டும். பருவகாலத்திலுள்ள மாற்றம் விவசாயிகளை மட்டும் பாதிக்கவில்லைமாறாக ஏனைய தொழிற்றுறைகளையும் பாதிக்கவே செய்கின்றது. உலகளாவிய அளவில் காலநிலை மாற்றத்தை முகாமைத்துவப்படுத்துவதற்கு பாரிய திட்டங்கள் தீட்டப்பட்டு செயற்படுத்தப்பட்டும் வருகின்றது. ஆனால் அந்தந்த பிரதேசத்தில் செய்யப்படும் நடவடிக்கைகளே இப்பிரச்சினையை விவசாயிகள் எதிர்கொள்ள வழிவகுக்கும். காலநிலை மாற்றம் பற்றிய துல்லியமான கணிப்பீடுகள் அதனது தன்மையை ஓரளவுக்கேனும் எதிர்வு கூற வழிசெய்யும். சிறந்த மிகவும் துல்லியமான உபகரணங்களைக் கொண்டு வளிமண்டல வெப்பநிலை, மழைவீழ்ச்சி, வளிமண்டல ஈரப்பதன், காற்றின் வேகம், இன்னும் பலவற்றை அளந்தறிந்து கொள்ளலாம். சூழல் பற்றிய ஆய்வுக்கும் கற்றலுக்கும் காலநிலை பற்றிய அறிவு முக்கியம். எமது பிரதேசம் வரண்ட வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பினும் இங்கே குளிர்மையாக பயிர்கள் பயிரிடப்படுவது அனைவருக்குமே அதிசயமாக இருக்கின்றது. வீட்டுக்கொரு கிணறு, தண்ணீர் பாய்ச்சும் வசதி என்பன எமக்கு கிடைத்துள்ள வாய்ப்புக்கள். இதனை நாம் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டால் எதிர்கொள்ளும் பிரச்சினைகளிலிருந்து நாம் தப்பிக்கொள்ள முடியும்.



சென்ற வருடம் இரணைமடு வான்கதவுகள் திறந்தது இம்முறை நடக்கவில்லை – மழை இம்முறை பொய்த்துவிட்டது !

விவசாயிகள் பயிர்வகைகளை திட்டமிட்டும் புதிய பயிர்களை பயிரிடவும் முயற்சிக்கின்ற இவ்வேளையில் காலநிலையில் ஏற்படுகின்ற மாற்றத்தினால் பல பின்விளைவுகள் ஏற்பட காரணமாயிருக்கின்றது. இவ்வாறான பின் விளைவுகள் எமது உற்பத்தியில் கணிசமான பின்னடைவை ஏற்படுத்தவல்லன. குறிப்பாக பயிர்ச்செய்கை பாதிக்கப்படும் போது விவசாய பெருமக்களால் அதனை உடனடியாக நிவர்த்தி செய்வது கடினமாக இருக்கின்றது. இந்த நிலையில் அக்கராயன் பகுதி விவசாயிகளினால் கரும்பு செய்கை பணணப்பட்டு கரும்பு வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது பற்றி சென்ற கிழமை விரிவாகப் பார்த்தோம். புதிய முயற்சிகள் கைகூடும் இந்நாளில் இம்முயற்சிகளுக்கு காலநிலை மாற்றத்தினால் பங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது. இயற்கையின் விபரிதமாக இருப்பினும் இயறகையை நம்பிய விவசாயம் செய்யப்படுவதனால் நாம் முன்னெச சரிக்கையாக இருப்பது என்றுமே நல்லது. இயற்கையை நாம் மாற்ற நினைத்ததனால் அது தற்போது தன்னிலையை எமக்கு உணரவைக்கின்றது போல அனைத்து நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

உள்ளூர் உற்பத்திகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவது போல வெளியிலிருந்து உள்வருகின்ற தேவையற்ற குடிபானங்களை மட்டுப்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். வெளிநாடுகளில் குறிப்பாக அவுஸ்திரேலியா நாட்டில் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு பொருட்களை கொண்டு செல்வதாயின் அதற்கான கட்டுப்பாட்டு முறைகளுக்கூடாகவே கொண்டு செல்லலாம். இந்த நடைமுறையை மக்களைப் பாதிக்கா வண்ணம் நடைமுறைப்படுத்துவது உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க உதவும். வெளியிலிருந்து வரும் தினிசு தினிசான பொருட்களுடன் உள்ளூர் பொருட்கள் போட்டியிட முடியவில்லை. இங்கும் தரமான சிறந்த பொருட்களை உற்பத்திசெய்ய வழிவகை செய்து கொடுத்தால் அதற்கான இயந்திரங்களை தருவித்து கொடுத்தால் இங்கும் அதே தரத்தில் உற்பத்திசெய்ய முடியும். எமது மக்களால் எதுவும் முடியும் என இருக்கும் போது வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க நாம் முன்னிற்க வேண்டும். வெளிநாடுகளிலிருந்து கிடைக்கவிருக்கும நிதிகளை இதற்கான திட்டமிடலுககுள்ளே நாம் உள்வாங்கிக்கொண்டால் எமது பிரதேசத்தின் தொழிற்றுறை எதிர்பார்த்ததை விட சிறப்பாக இருக்கும். இதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து முயற்சி செய்தல் அவசியமாகும்.

எம்முன்னால் எமது மக்களுக்காக செய்ய வேண்டிய பணிகள் நிறையவே உண்டு. வெறுமனே நேரத்தை தட்டிக்கழித்துக் கொண்டிருக்காது பிரயோசனமான முறையல் பயன்படுத்தவேண்டும். இதற்கான வேண்டுகோளை இதிலே விடுத்து எமது மக்களுக்காக, பிரதேசத்திற்காக நாம் செய்ய வேண்டியனவற்றை பொறுப்பெடுத்து செய்ய வாருங்கள். இது காலத்தின் கட்டாயமும் கூட.

# இலங்கை மீனவர்கள் 121 பேர் வெளிநாட்டு சிறைகளில்

(கொழும்பு)

இந்தியாவில் 107 மீனவர்களும், மியன்மாரில் 12 மீனவர்களும் மொரீசியஸில் இரண்டு மீனவர்களும் மஎன இலங்கை மீனவர்ககள் 121 பேர் தற்போது வெளிநாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்தொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த மீனவர்களுடன் 24 மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளதுடன் இவற்றில் 20 இந்திய அரசாங்கத்தின் பொறுப்பிலும் மியன்மார் மற்றும் மொரீசியஸ் ஆகிய நாடுகளில் தலா இரண்டு படகுகளும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிப்பதற்கு இராஜதந்திர மட்டத்திலான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 4 கோடி பெறுமதியான சிகரெட்டுக்கள் மீட்பு

(கொழும்பு)

டுபாயிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான சிகரெட்டுகளை ஒருகொடவத்த சுங்க பரிசோதனை மத்திய நிலைய அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சுங்க விசேட வருமானத்துறை அதிகாரிகளாலேயே இந்த சிகரெட்டுகள் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டன.

டுபாயிலிருந்து பாவனைப் பொருட்கள் என்ற பெயரில் அனுப்பப்பட்டிருந்த கொள்கலன் ஒன்றிலிருந்தே இந்த சட்டவிரோத சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 150 இலட்சம் சிகரெட்டுக்கள் இவ்வாறு சுங்கப்பிரிவினரால் கைப்பற்றப்பட்டதாக சுங்கத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெட்டிகளில் அடைக்கப்பட்ட நிலையில் இந்த சிகரெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவை சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

சிகரெட் பெட்டிகளை பெரிய பெட்டியொன்றில் மறைத்து அதில் பாதணிகள் போன்ற பாவனைப் பொருட்களை மேலால் வைத்திருந்தனர். மீட்கப்பட்ட சட்டவிரோத வெளிநாட்டு சிகரெட்டுக்களின் பெறுமதி 4.3 ரூபா கோடி பெறுமதியானது என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சுங்க திணைக்களத்தின் விசேட விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். (அ-2)


18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கனகசபை
சண்முகசுந்தரம்
ஸ்தாபகர்: சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
தோற்றம்:
03.11.1941



அமரர் சண்முகசுந்தரம்
சிவரூபன்
மாணவன்: யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
தோற்றம்:
18.08.1983

மறைவு:–
23.11.1995

கார்த்திகையில் உங்களைக் காலன் கவர்ந்து
ஈரொன்ப தாண்டுகள் இன்றுடன் தாண்டின
நேர்ந்ததை நினைத்து நொந்து வாடினும்
சீருடன் நாம் வாழ சிவனருள் புரிகிறார்

துர்க்கா இல்லம்
இல. 29, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:–
குடும்பத்தினர்.

(சி/5522)

## வலி கிழக்கு பிரதேசசபை,புத்தூர்.
## கேள்வி அறிவித்தல் -2014

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2014 ஆம் ஆண்டிற்கு (01.01.2014 - 31.12.2014) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 25.11.2013– 09.12.2013.
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 10.12.2013 பி.ப 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 10.12.2013 பி.ப 02.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு,மூலப்பிரதியை "தவிசாளர்,வலி கிழக்கு பிரதேசசபை,தலைமை அலுவலகம் ,புத்தூர்" எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் ,எதிர்வரும் 10.12.2013ம் திகதி பி.ப 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ,அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம்( வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம்(வரி நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை( வரிநீங்கலாக) | மாதாந்த வாடகை (வரிநீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டித்தரிப்பிடம், மின்சாரக்கட்டணம் உட்பட) துவிச்சக்கர வண்டி 5/=மோட்டார்சைக்கிள் 10/= | 2000.00 | 10,000.00 | 5,126,000.00 | |
| 02 | அச்சுவேலி வாகன தரிப்பிடம் | 500.00 | 2000.00 | 50,000.00 | |
| 03 | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 569,000.00 | 500.00 |
| 04 | அச்சுவேலி கோழியிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 182,000.00 | 500.00 |
| 05 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 46,500.00 | 500.00 |
| 06 | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 118,000.00 | |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01 | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 194,000.00 | 500.00 |
| 02 | புத்தூர் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 130,000.00 | |
| 03 | புத்தூர் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 11,500.00 | 500.00 |
| 04 | ஆவரங்கால் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 16,500.00 | |
| | நீர்வேலி உப அலுவலகம் | | | | |
| 01 | நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 62,700.00 | 500.00 |
| 02 | நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 03 | நீர்வேலி மீன்சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| 04 | நீர்வேலி பொதுச்சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 01 | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 661,000.00 | 500.00 |
| 02 | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 03 | கோப்பாய் கோழியிறைச்சி கடை | 500.00 | 2000.00 | 38,500.00 | 500.00 |
| 04 | இருபாலைச் சந்தி மாட்டிறைச்சிக் கடை(இடத்தினை தாங்கள் ஒழுங்கு செய்தல் பொதுசுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் ) | 500.00 | 2000.00 | 660,000.00 | |
| 05 | இருபாலை ஆட்டிறைச்சிக் கடை (இடத்தினை தாங்கள் ஒழுங்கு செய்தல் பொதுசுகாதார பரிசோதகரின் அனுமதியுடன்) | 500.00 | 1000.00 | 25,300.00 | |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 133,100.00 | 500.00 |
| 02 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 99,000.00 | 500.00 |
| 03 | உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 200,000.00 | |
| 04 | ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 80,300.00 | 500.00 |
| 05 | ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1000.00 | 22,000.00 | 500.00 |

01. சந்தையிலிருந்து 01 கி.மீற்றர் சுற்றாடலில் மீன்,மரக்கறி விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ்,கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவக் கட்டணம் ,கேள்வித்தொகை ,மாத வாடகை என்பவற்றுக்கு 12%பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் ,காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் ,முன்பு கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
07. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம் .
08. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர்.
23.11.2013

திரு.அன்னலிங்கம் உதயகுமார்,
தவிசாளர்
வலி கிழக்கு பிரதேசசபை
புத்தூர்.

(C-5548)


## சாள்ஸ்...

இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே ரவி கருணாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாட்டுக்கு கொண்டு வரப்பட்ட கார்களை எதிர்காலத்தில் பயன்படுத்தப போவது யார்?, பல கோடி ரூபாய்களை செலவழித்து 81 வெளி நாடுகளுக்கு பயணம் செய்து மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால 26 நாடுகளின் தலைவர்களே மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டுக்காக செல வழித்த பணத்தை பயன்படுத்தி மக்களின் மின் கட்டண குறைப்பை யாவது மேற்கொண்டிருக்கலாம். மக்களுக்கு எவ்வித சலுகைகளும் கிடைக்கவில்லை. மாறாக சுமைகளே அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தற்போது முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமானது மக்களின் குறைகளை தீர்ப்பதற்காக முன்வைக்கப்படவில்லை. மாறாக மக்களின் கையிருப்பில் உள்ள பணத்தை பறித்து எடுத்து அரசாங்கத்தின் சட்டைபையினுள் போட்டுக் கொள்ளும் வரவு செலவுத் திட்டமே முன்வைக்கப்பட்டுள்ளது என்றார். (எ-11)

## மாவீரர்...

கோரிக்கை

மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துமாறு கடிதம் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வவுனியா அரச நிறுவனங்களுக்கு இவ்வாறு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்கள் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருந்த காலத்தில் நவம்பர் மாதம் 21 முதல் 27ம் திகதி வரையில் உயிரிழந்த போராளிகளை நினைவு கூர்ந்து நிகழ்வுகள் நடைபெறும்.

புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் இந்த நிகழ்வுகள் நடைபெறவில்லை.

உயிரிழந்த போராளிகளை நினைவு கூர்ந்து மரம் நடுதல், விளக்கு ஏற்றுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடிதத்தில் கோரப்பட்டுள்ளது என சிங்களப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது. (எ-11)

## இலங்கைக்கு...

பெற்றுக் கொண்டார்.

அவரது முடிவினால், ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இல்லாவிட்டால், உள்ளூர் மக்களையும், காணாமற்போனோரின குடும்பங்களையும் அவர்கள் சந்திக்கும் வாய்ப்பும், அவர்களின் குரல் அனைத்துலக கவனத்தை பெறும் வாய்ப்பும் இல்லாமல் போயிருக்கும்.

பிரதமர் கமரூன் தனது கருத்துகளில் உறுதியாக இருந்தார்.

இலங்கை ஜனாதிபதியுடன் உறுதியான இறுக்கமான சந்திப்பை நடத்தினார்.

போர்க்குற்றங்கள் தொடர்பான நம்பகமான விசாரணையை நடத்துதல் உள்ளிட்ட, பல்வேறு விவகாரங்களில் முன்னேற்றத்தைக் காட்ட இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெளிவாக வலியுறுத்தினார்.

இலங்கை அரசாங்கம் இதைச செய்யத் தவறினால், அனைத்துலக விசாரணைக்கு பிரித்தானியா முழுமையான ஆதரவை அளிக்கும்.

அர்த்தமுள்ள அரசியல்தீர்வு காண்பது, படைவிலக்கம், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பொருத்தமான முறையில நடைமுறைப்படுத்தல் போன்றன குறித்தும் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## இராணுவம்...

பிரதேசங்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளதாலும் இராணுவ நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாலும் இராணுவத்தின் பாலியல் வன்முறைகளுக்கும் பாலியல் தொந்தரவுகளுக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது என்று அந்தப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

அதனால் தமது பிரதேசங்களில் இராணுவ பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்றும் தமது பாதுகாப்புக்குரிய பொலிஸ் தமது கடமையை சரிவரச் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

"கணவரை இழந்த பெண்களும் கணவரிடமிருந்து பிரிந்து வாழும் பெண்களும் சமூகத்தினால் ஒதுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. சிலசமயங்களில் எமது ஆடைகளும் நடத்தைகளும் கூட விமர்சிக்கப்படுகின்றன. மீண்டும் குடும்ப பந்தத்தில் இணைய விரும்பும் பெண்கள் சமூகத்தின் அவச்சொல் குறித்துப் பயப்படும் நிலை இருக்கின்றது" என்றும் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

"காணாமல் போனோரை தேடிக் கண்டுபிடிக்கும் ஆற்றல் எமக்கு இல்லை, தடுப்பில் இருப்பவர்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனை பெறுவதற்கோ அவர்களின் வழக்கைத் தொடரவோ எமக்கு வசதிகள் இல்லை, கணவரின் இறப்புக்கு வழங்கப்படும் நட்டஈடு சீரான முறையிலோ போதுமானதாகவோ இருப்பதில்லை" என்றும் குடும்பத் தலைவிகள் கூறியுள்ளனர்.

"எமது குடும்பங்களைச் சேர்ந்த காணாமல் போனோரைப் பற்றிய தகவல்களை அரசு எமக்குத் தரவேண்டும்" அவர்கள் கோரியுள்ளனர்.

தடுப்புக் காவலில் இருப்போர் விடுதலையாக வேண்டும் என்றும் அதற்கான சட்ட உதவிகளும் வழக்குகளின் முன்னேற்ற விபரங்களும் குடும்பங்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

"காணாமல் போனோர் தொடர்பாக புலன் விசாரணை செய்வதற்கு ஆண் அலுவலர்கள் எமது வீடு தேடி வருவது பாலியல் தொந்தரவுகளுக்கு இட்டுச் செல்லுகின்றது. இது சமூகத்தின் பழிச்சொல்லுக்கும் எம்மை ஆளாக்குகின்றது. தனியே வாழும் பெண்களுடன் தொடர்புகளைப் பேணுவ தற்கு பெண் காவல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்" என்றும் விதவைகள் மாநாட்டில் கோரப்பட்டுள்ளது. (எ-11)

## மீனவர்...

உலக மீனவர் தினத்தன்று இச்சம்பவம் நடைபெற்றது வருத்தமளிக்கிறது.

இது தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை தொடர்பு கொண்டு தெரிவித்தேன். டிசம்பர் 3ஆவது வாரத்திற்குள் தமிழக - இலங்கை மீனவர்கள் ஒருசேர பேச்சு வார்த்தை நடத்தி சுமூக முடிவு எடுக்கப்படும்" என்று அவர் உறுதியளித்தார் என ஜி.கே. வாசன் மேலும் கூறியுள்ளார். (எ-11)

## காணாமல்...

கள் மூலம் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கு முன்பாக ஜனாதிபதியினால் மீண்டும் ஒரு ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஆணைக்குழுக்களினால் காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றனவே தவிர அது பற்றி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக இல்லை.

இந்நிலை தொடர்ந்தால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மீதான நம்பிக்கை இழக்கப்படும்.

அத்தோடு காணாமல் போனவர்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்திய விசாரணைகள் தொடர்பிலும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் முடிவிற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு காத்திருக்க வேண்டுமென்றால் விசாரணைகள் ஏன் முன்னெடுக்கப்பட்டது உள்ளிட்ட பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

இதற்குப் பதிலளித்த ஆணையாளரும் முன்னாள் பொலிஸ்மா அதிபருமான ஆர். ஆனந்தராஜா,

இலங்கையில் போர்க் காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக குறிப்பாக கடந்த 2006, 2007 ஆம் ஆண்டளவில் காணாமல்போனவர்கள் தொடர்பாக மீள் விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்தியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது மட்டக்களப்பு உள்ளிட்ட பல மாவட்டங்களில் இந்த விசாரணைகள் நடத்தப்பட்டன.

இது தொடர்பான விசாரணைகள் முடிந்துவிட்டன. அத்தோடு விசாரணை அறிக்கையை பரிசீலனை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பாரப்படுத்திவிட்டது.

இதனைவிட ஜனாதிபதி ஆணைக்குழு எம்மிடம் கோரிக்கை விடுத்தால் அவர்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு உதவி செய்யும் எனக் கூறிய போது காணாமல் போனவர்களின் நிலைக்கு என்ன பதில் என மீண்டும் கேள்வி எழுப்பப் பட்டது.

இதனையடுத்தே ஆணையாளரினால் இலங்கையின் வடபகுதியில் யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் காணாமல் போனவர்கள் தான் எனப் பதில் வழங்கப்பட்டது.

அத்தோடு வரையறைக்குட்பட்டுத்தான் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவும் தனது நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமெனவும் திணைக்கள ரீதியான விசாரணைகளை முன்னெடுக்க மட்டுமே அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க கூடிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தின் இணைப்பாளர் ரி. கனகராஜ் மற்றும் விசாரணை அதிகாரி ஆகியோரும் பங்கு கொண்டு தமது கருத்துக்களை வழங்கியிருந்தனர். (எ-6)

## ஆடுகளம்...

நேற்றைய தினம் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்2006ஆம்ஆண்டுகாலத்தில் போர் உள்ளிட்ட இராணுவ ஆய்வில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. கைது செய்யப்பட்ட அவர் தற்பொழுது வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (எ-4,6)

**வீடு விற்பனைக்கு**

வெங்கடேசா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு 1 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**0779397536**
(4566)

Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள். சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.

**கரவீணா இசை மன்றம்**
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொலைபேசி : 0777031293

# IELTS Special Class

ஜனவரி 9ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்பு திங்கள் - வெள்ளி வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறும்

**ஆரம்பம் 25-11-2013**




* INDIVIDUAL TRAINING
* UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
* WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
* MORE THAN 10 YEARS EXPERIENCE
* VOCABULARY and GRAMMAR
* EXTENDED SPEAKING PRACTICE

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

## BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவிலுக்கு சமீபமாக)
Tel 0755435089 0778803887

# மாவீரர்...

உட்பட முக்கிய தளபதிகள் 10 பேரின் படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இதில் நான் உயிருக்குயிராக நேசித்த தோழர்கள், என்னோடு தோளோடு தோள நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள், களத்தில் வீழும் போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும், ஆயினும் சோகத்தில் நான் சோர்ந்து போவதில்லை.

இந்த இழப்புக்கள் எமது இலக்கிற்கும் உறுதிக்கும் மேலும் உரமூட்டியிருக்கின்றன என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இறுதியாக புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற வாசகமும் எழுதப்பட்டுள்ளது.

குறித்த துண்டுப்பிரசுரங்கள் யாழ். பல்கலைச் சூழல் முழுவதும் போடப்பட்டிருந்தமையினால் பல்கலையினை சூழ இராணுவப் புலனாய்வாளர்கள் களமிறக்கப்பட்டிருந்தனர்.

பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் சாய்பாபா நிகழ்வொன்றிற்காக அலங்கார வேலைப்பாடுகள் இடம்பெற்றிருக்கும்போது அங்கு சென்ற புலனாய்வாளர்கள் ஏன் அலங்காரம் செய்கிறீர்கள் என விசாரித்தும் சென்றுள்ளனர்.

வழமைக்கு மாறாக இனந்தெரியாதவர்களின் நடமாட்டத்தால் யாழ். பல்கலைச சூழல் ஒரு வித அச்ச நிலையில் நேற்றைய தினம் காணப்பட்டது. (எ-4)

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) புதிய பிரிவுகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**
**221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.** *(Gov. Reg.No: W/A 76795)*
Tel: 0213216928, 0774842464 ,0212220393
(C-5529)

## ELECTRONICS ENGINEERING SHORT COURSE

**Short Cours Name**
DESIGN & DEVELOP THE EMBEDDED MICROCONTROLLERS, CIRCUITS

**விண்ணப்பிக்க தகுதியுடையோர்**
1. Electronics, Computer, Electricals & Telecommunication துறையில் பணிபுரிபவர்கள்.
2. இத்துறைகளில் மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி செய்பவர்கள்.
3. இத்துறைகளில் ஆர்வமுள்ள மாணவர்கள்.

**தொழில் வாய்ப்பு**
மாதம் ரூபா 50.000க்கு மேல் வருமானமாக பெறக்கூடிய தொழில் வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

**பதிவுகளுக்கு**
www.hionejaffna.com இணைய முகவரியை அணுகி அதில் "Register" Tab / Button ஐ Click செய்து இன்றே பதியுங்கள்.

**தொடர்பு கொள்ள முகவரி :**
**HIONE (research & Development Centre)**
118, G.P.S. வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
E.mail : info@hionejaffna.com அல்லது Development@hionejaffna.com
Hotlines : 071-872-873-8, 0777-36-49-39

குறிப்பு :
1. விண்ணப்ப முடிவுத்திகதி 15th Dec 2013
2. பயிற்சிக் காலம் : 01 மாதம் (வார இறுதிநாட்களில்)
3. கட்டணம் : ரூபா 8,000/-
(4511)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA
*Learn French The French Way*
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af




**யார் AF இல் French படிக்க முடியும்?**
திருமணம் மூலம் France, Canada... செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய / கல்விகற்க செல்வோர், மாணவர்கள் மேலும் French கற்கவிரும்புவோர்... இங்கு வடமராச்சி, வன்னி, வவுனியா, மற்றும் மன்னாரைச் சேர்ந்த பலரும் படிக்கிறார்கள்.

- *Videos* for listening & speaking practice : "*Bienvenue en France*" Episode N°. 1,2,3,4...
- *Teaching materials* are given with *free* of charge. (ஆங்கில அறிவு அவசியமில்லை)
- Elementary level - 1 (6 Months, 100 Hours, CERTIFICATE course)
- Letter in French : 6 மாதத்தினை நிறைவுசெய்யாதோருக்கு / Embassy க்கு (Free)
- Translations in French : பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்கள். மேலும் நூலக வசதி...

*Just say "Yes, I can... speak French". AF is the only International Organization for French in Northern Province*

**கவனிக்கவும் :**
DELF A1 பரீட்சை : 14.12.2013 பரீட்சைக்கு தோற்றுவோர் AF ஊடாக விண்ணப்பிக்கலாம்.
பரீட்சை கட்டணம் : 3000 Rs. (AF மாணவர்களுக்கு) 8500 Rs. (ஏனையோருக்கு). இப்பரீட்சையை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான "தயார்ப்படுத்தல் வகுப்பு" சனி, ஞாயிறு at 8.30 am

புதிய வகுப்பு 30.11.2013 2pm-4pm.

61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093 / நேரிலும் வரலாம்
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)
(4547)

# After A/Level's

IT பட்டப்படிப்பின் முதல் வருடத்திற்கு சமனான சர்வதேசதரம் வாய்ந்த கற்கைநெறிகள்

DiTEC INTERNATIONAL edexcel Assured
Duration : 4 months
Free Text Books
*With an International Certification (Edexcel - UK)*




**Diploma in Information Technology**

DiE
Grammar | Spoken | Comprehension
Duration : 4 months — Free Text Books
edexcel Assured

**Diploma in English**

IT துறைக்கான உயர்கல்வி வெற்றிக்கான ஆரம்ப அடித்தளம்

DiBM edexcel Assured — Diploma In Business Management
DiSE edexcel Assured — Diploma In Software Engineering
DiCA edexcel Assured — Diploma In Computerized Accounting
DiWE edexcel Assured — Diploma In Web Engineering

Offer of NOVEMBER 50% DISCOUNT *condition apply

FREE Pendrive

மேலதிக விபரங்களுக்கு
SMS to this Number 077 55 888 95
<Fullname> Space <Course> Space <Address>

**புதிய பிரிவுகள்**
2013.11.25 - 2013.11.28 காலை 9 : 00 மணி

Most popular IT Diploma in Sri Lanka Over 25,000 enrollments in 2012
(C-5539)

ESOFT — Shaping Lives. Creating Futures.
**ESOFT COMPUTER STUDIES**
No.01, Kanagapuram Road, Kilinochchi | Tel : 021 228 5444

## G.C.E. O/L வரலாறு கருத்தரங்கு

ஆசிரியர் : R. S. சந்திரன்
காலம் : 30.11.2013 சனி, 01.12.2013 ஞாயிறு
நேரம் : காலை 8.00 - மாலை 2.00 மணி
கட்டணம் : 400/-

- எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மாதிரி வினாத்தாள் வழங்கப்படும்.
- இலங்கை, உலகப் புறவுருவப் படம் குறித்தல்
- பகுதி II இல் விளக்குக என வரும் வினாக்களுக்கு விடையளித்தல்.

குறிப்பு : வெளி மாணவர்களும், ஆங்கில மொழி மூலமான மாணவர்களும் பங்குபற்றலாம்.

பதிவினை முன்கூட்டியே உறுதி செய்யவும்
**றோயல் அக்கடமி, யாழ்ப்பாணம்.**
(4557)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.